
பண்பு மற்றும் கலாச்சார பயிற்சி முனைவு அறக்கட்டளை [IMCTF]

# பக்தி

## தமிழ்



## IMCTF PATRON


**Pujya Swami Dayananda Saraswati**
Founder, Arsha Vidya Gurukulam


## IMCTF ADVISORY COMMITTEE


Chairperson

**Sri. S. Gurumurthy,** FCA
Original Thinker, Well-known writer, Corporate Advisor,
Visiting faculty IIT, Bombay, Distinguished Professor, SASTRA University.

Vice Chairpersons

**Dr. Selvi Padma Subrahmanyam**
Scholar & Artiste

**Dr. Sri. T.K. Parthasarathy**
Pro-Chancellor, SRMC University,
President, Bharateeya Vidya Bhavan,

Members

**Dr. Smt. Y.G.Parthasarathy**
Dean, Padma Seshadri Group of Schools

**Dr. Sri. Vaidhyasubramaniam**
Vice Chancellor, SASTRA University

**Dr. Sri. M.D.Srinivas,**
Director, Centre for Policy Studies

**Sri. Kailashmull Dugar,**
President, Sri Jain Medical society

**N.C. Sridharan,**
Correspondent, R.M.Jain Vidyashram, Thiruvallur

**Sri. Gopal Srinivasan**
Managing Director, TVS Group

**Dr. Smt. Jaya Venugopal**
Educationist

**Dr. Sri. S.Muthukumaran,**
Former Vice Chancellor, Bharati Dasan University

**Dr. Sri. A. Kanakaraj,**
Founder Chairman, Jaya Group of Educational Institutions

**Prof. K.Varadarajan,**
Economist, Director, Centre for Civilisation Studies

**Sri. Jayadev**
General Secretary, Tamilnadu Arya Samaj Educational Society

**Sri. P. Haridas**
Senior Advocate


## IMCTF TRUSTEES


Chairman

**Sri. Rajesh Malhotra**
Business, Secretary, Punjab Association Group of Schools

Managing Trustee

**Smt. R. Rajalakshmi**
Business, Trustee, Hindu Spiritual Service Foundation

Secretary

**Sri. K. Prabhakar,** FCA

Trustees

**Dr. Smt. Thangam Meganathan**
Chairperson, Rajalakshmi Educational Institutions

**Sri. T. Chakravarthy**
Secretary, Vivekananda Educational Society, President, Vidya Bharathi

**Dr. Sri. Nandakumar R Dave**
Sanskrit Scholar & Educationist

**Sri. S.Varadarajan**
Correspondent & Secretary, Dayananda Anglo Vedic Schools

**Smt. Arthi Ganesh**
Pro Chancellor, Vels University

**Sri. M.Namasivayam**
Senior Principal, Maharishi Group of Schools

**Sri. S. Viswanathan**
Secretary, Sankara Eye Hospital, Pammal

**Sri. P. Ganapathy**
Business

பண்பு மற்றும் கலாச்சார
பயிற்சி முனைவு அறக்கட்டளை

# பக்தி - தமிழ்

## விவரப்பட்டியல்

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | பக்தி - தமிழ் |
| பதிப்பு | : | 2015 |
| பக்கங்கள் | : | 192 |
| நூல் வடிவம் | : | டெம்மி 1/8 |
| வெளியீடு | : | **பண்பு மற்றும் கலாச்சார பயிற்சி முனைவு அறக்கட்டளை**<br>தலைமை அலுவலகம் :<br>4வது மாடி, கனேஷ் டவர்ஸ்,<br>152, லஸ் சர்ச் ரோடு,<br>மைலாப்பூர், சென்னை - 600 004<br><br>நிர்வாக அலுவலகம் :<br>2வது மாடி, "கார்கி",<br>புதிய எண் : 6 (பழைய எண்: 20)<br>பாலையா அவென்யு, மைலாப்பூர்,<br>சென்னை-600 004 |
| அச்சிட்டோர் | : | ஸ்ரீ விக்னேஷ் பிரிண்ட்ஸ்<br>சென்னை-83 |

# பக்தி - தமிழ்

## பொருளடக்கம்


வகுப்பு - I

1. ஔவையார் பாடல்கள் ........ 15
2. சித்தர் பாடல்கள் ........ 16
3. பன்னிரு திருமுறை ........ 17
4. கந்தர் அனுபூதி ........ 18
5. லலிதாம்பாள் சோபனம் ........ 19
6. திருவருட்பா ........ 19
7. திருவெம்பாவை ........ 20
8. திருப்பள்ளியெழுச்சி ........ 20
9. தமிழ்த்தாய் வாழ்த்து ........ 20
10. கந்தர் சஷ்டி கவசம் ........ 21
11. பாரதியார் பாடல் ........ 21
12. திருமூலர் மந்திரம் ........ 23

வகுப்பு - II

1. ஔவையார் பாடல்கள் ........ 23
2. பன்னிரு திருமுறை ........ 24
3. கந்தர் அலங்காரம் ........ 27
4. தாயுமானவர் பாடல்கள் ........ 27
5. திருஅருட்பா ........ 27
6. சித்தர் பாடல்கள் ........ 27
7. திருவெம்பாவை ........ 28
8. திருப்பள்ளியெழுச்சி ........ 28
9. தமிழ்த்தாய் வாழ்த்து ........ 28
10. பாரதியார் பாடல்கள் ........ 29

வகுப்பு - III

1. ஔவையார் பாடல்கள் ........ 30
2. பன்னிரு திருமுறை ........ 31
3. நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் ........ 33
4. லலிதாம்பாள் சோபனம் ........ 33
5. தமிழ்த் தாய் வாழ்த்து ........ 33

6. பாரதியார் பாடல்கள் ............ 34
7. அபிராமி அந்தாதி ............ 35
8. கோளறு திருப்பதிகம் ............ 35
9. கம்பராமாயணம் ............ 36
10. திரு அருட்பா ............ 36
11. சித்தர் பாடல்கள் ............ 36
12. கந்தர் அனுபூதி ............ 37

வகுப்பு - IV

1. ஔவையார் பாடல்கள் ............ 38
2. பன்னிரு திருமுறை ............ 39
3. திரு அருட்பா ............ 42
4. நாலாயிரத் திவ்யப் பிரபந்தம் ............ 42
5. கம்பராமாயணம் ............ 43
6. கந்தர் அநுபூதி ............ 43
7. கந்தர் அலங்காரம் ............ 43
8. திருவிளக்கு ஸ்தோத்ரம் ............ 44
9. லலிதாம்பாள் சோபனம் ............ 44
10. பாரதியார் பாடல்கள் ............ 45
11. சித்தர் பாடல்கள் ............ 45
12. திருவெம்பாவை ............ 46
13. திருப்பள்ளியெழுச்சி ............ 46
14. கோளறு திருப்பதிகம் ............ 46
15. தமிழ்த்தாய் வாழ்த்து ............ 47

வகுப்பு - V

1. ஔவையார் பாடல்கள் ............ 48
2. பன்னிரு திருமுறை ............ 49
3. நாலாயிரத் திவ்யப் பிரபந்தம் ............ 52
4. அபிராமி அந்தாதி ............ 53
5. திருவிளக்கு ஸ்தோத்ரம் ............ 53
6. பாரதியார் பாடல்கள் ............ 54
7. கந்தர் அலங்காரம் ............ 56
8. கந்தர் அனுபூதி ............ 56

வகுப்பு - VI

1. ஔவையார் பாடல்கள் ............ 57
2. பன்னிரு திருமுறை ............ 57

3. திருஅருட்பா ........ 59
4. லலிதாம்பாள் சோபனம் ........ 60
5. தமிழ்த்தாய் வாழ்த்து ........ 60
6. பாரதியார் கவிதைகள் ........ 60
7. பாரதிதாசன் கவிதைகள் ........ 62

வகுப்பு - VII

1. ஔவையார் பாடல்கள் ........ 63
2. சித்தர் பாடல்கள் ........ 71
3. பன்னிரு திருமுறை ........ 73
4. நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் ........ 76
5. திருவருட்பா ........ 77
6. கந்தர் அனுபூதி ........ 79
7. கந்தர் கலிவெண்பா ........ 80
8. லலிதாம்பாள் சோபனம் ........ 81
9. பாரதியார் கவிதைகள் ........ 81
10. விநாயகர் நான்மணி மாலை ........ 81
11. பட்டினத்தார் பாடல்கள் ........ 83
12. திருவெம்பாவை ........ 83
13. இந்து மகா சமுத்திரம் ........ 85

வகுப்பு - VIII

1. ஔவையார் பாடல்கள் ........ 86
2. பாரதியார் பாடல்கள் ........ 89
3. பன்னிரு திருமுறை ........ 94
4. நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் ........ 98
5. அபிராமி அந்தாதி ........ 100
6. கோளறு பதிகம் ........ 101
7. சித்தர் பாடல்கள் ........ 101
8. கந்தர் அனுபூதி ........ 102
9. திருவெம்பாவை ........ 102

வகுப்பு - IX

1. ஔவையார் பாடல்கள் ........ 103
2. பன்னிரு திருமுறை ........ 104
3. நாலாயிர திவ்வியப் பிரபந்தம் ........ 106
4. திரு அருட்பா ........ 107
5. லலிதாம்பாள் சோபனம் ........ 107

6. பாரதியார் பாடல்கள் ........ 108
7. சித்தர் பாடல்கள் ........ 111
8. அபிராமி அந்தாதி ........ 112
9. ராகு-கேது துதி ........ 112
10. கந்தர் அனுபூதி ........ 112

வகுப்பு - X

1. ஔவையார் பாடல்கள் ........ 114
2. பன்னிரு திருமுறை ........ 115
3. திருமுருகு ஆற்றுப்படை ........ 119
4. திருஅருட்பா ........ 120
5. நாலாயிரத் திவ்ய பிரபந்தம் ........ 120
6. கம்பராமாயணம் ........ 121
7. கந்தர் அநுபூதி ........ 121
8. லலிதாம்பாள் சோபனம் ........ 121
9. பாரதியார் பாடல்கள் ........ 122
10. திருவிளக்கு ஸ்தோத்ரம் ........ 126
11. சித்தர் பாடல்கள் ........ 128
12. திருவெம்பாவை ........ 128
13. திருப்பள்ளியெழுச்சி ........ 129

வகுப்பு - XI

1. ஔவையார் பாடல்கள் ........ 130
2. பன்னிரு திருமுறை ........ 132
3. நாலாயிரத் திவ்ய பிரபந்தம் ........ 136
4. கம்பராமாயணம் ........ 137
5. பாரதியார் பாடல்கள் ........ 137
6. திருவிளக்கு ஸ்தோத்ரம் ........ 140

வகுப்பு - XII

1. ஔவையார் பாடல்கள் ........ 142
2. பன்னிரு திருமுறை ........ 142
3. திரு அருட்பா ........ 145
4. லலிதாம்பாள் சோபனம் ........ 146
5. பாரதியார் பாடல்கள் ........ 146

இராமாயணம் - கேள்வி பதில்கள் ........ 151
மகாபாரதம் - கேள்வி பதில்கள் ........ 164
ஸ்ரீமத் பாகவதம் - கேள்வி பதில்கள் ........ 184

# நன்றி! நன்றி!! நன்றி!!

நம் பாரத நாட்டின் புராதன ஆன்மிக கலாச்சார நூல்களிலிருந்து வனம் மற்றும் வன விலங்குகளைப் பாதுகாத்தல், ஜீவராசிகளைப் பேணுதல். சுற்றுச்சூழலைப் பராமரித்தல், பெற்றோர் ஆசிரியர் மற்றும் பெரியோர்களை வணங்குதல். பெண்மையைப் போற்றுதல், நாட்டுப்பற்றை வளர்த்தல் போன்ற ஆறு அருங்குணங்களை அடிப்படையாகக் கொண்டு பண்புப் பயிற்சியளிக்கும் போட்டிகளையும் விளையாட்டுகளையும், தன்னலமில்லால், தானாகவே முன்வந்து, திரட்டித் தயாரித்தளித்த பண்பு மற்றும் கலாச்சார முனைவு மைய அறக்கட்டளை [IMCTF] அறங்காவலர்கள், மேலும் அறக்கட்டளையின் அமைப்புக் குழு உறுப்பினர்களுக்கும், கல்விக் கூடங்களுக்கும், ஆசிரியர்களுக்கும், வித்வான்களுக்கும் அறக்கட்டளை தன்னுடைய மனமார்ந்த நன்றியைப் பதிவு செய்வதில் மகிழ்ச்சியடைகிறது. இந்த புத்தகங்கள் எட்டு பாகங்களைக் கொண்டது.

இந்த எட்டு பகுதிகளுடனும், IMCTF அமைப்பின் ஆறு அறுங்குணங்களை விளக்கும் ஆறு புத்தகங்களையும் அமைப்பின் ஆலோசனைக் குழு மறு தயாரிப்பு செய்து புதுப் பதிவு செய்திருக்கிறது என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துகொள்ளுகிறோம்.

அந்த ஆறு அருங்குணங்களை மாணவர்கள் விளையாட்டின் மூலமாகவும், போட்டிகளின் மூலமாகவும் மாணவ மாணவிகள் மனிதில் ஆழ்ந்து பதிவு செய்ய, அவர்கள் வாழ்க்கை முறையின் அங்கமாக்க, நம்முடைய பாரம்பர்ய நூல்கள், இதிகாசங்கள், பண்டைய வாழ்கை முறையில் பொதிந்து கிடக்கும் கருத்துக்கள், கதைகள், முன்னுதாரணங்கள் எல்லேவற்றையும் திரட்டி எடுத்து விளையாட்டுகளையும் போட்டிகளையும் அமைத்து அதை எப்படி நடத்துவது என்பதை வடிவமைத்துக் கொடுப்பதற்கு தன்னுடைய அறங்காவலர்கள், அமைப்புக் குழு உறுப்பினர்கள், கல்விக்கூடங்கள், ஆசிரியர்கள் மற்றும் அறத்தில் நாட்டம் கொண்ட ஆன்றோர்கள் சான்றோர்களை நாடியது IMCTF அமைப்பு.

அவர்களுடைய ஒத்துழைப்பின் மூலமாக படைக்கப்பட்ட

1. தமிழிலும், 'ஹிந்தி–சம்ஸ்க்ருதத்திலும் இரு பாகங்களாக "**பக்தி**" என்கிற தலைப்பில் இரண்டு புத்தகங்கள்.
2. தமிழிலும், ஹிந்தியிலும், சம்ஸ்க்ருதத்திலும் '**மனித நற்பண்புகள் வளர்ப்பு**' என்கிற தலைப்பில் மூன்று புத்தகங்கள்.
3. ஆங்கிலத்தில் "**கலை மற்றும் கைத்திறன்**" என்கிற தலைப்பில் ஒரு புத்தகம்
4. தமிழிலும் ஆங்கிலத்திலும் "**கலாச்சாரம் மற்றும் நுண்கலை**" என்கிற இரண்டு புத்தகங்கள்.
5. ஆங்கிலத்தில் "**பாரம்பர்ய விளையாட்டுகள்**" என்கிற தலைப்பில் ஒரு புத்தகம்.

ஆகிய இந்த எட்டு புத்தகங்களை உபயோகித்து, நூற்றுக்கணக்கான கல்வி கூடங்களில், லட்சக்கணக்கான மாணவர்களும், மாணவிகளும் உபயோகித்து போட்டிகளிலும் விளையாட்டுகளிலும் பங்கேற்க வேண்டும், பயனடைய வேண்டும், குறிப்பாக 2016 ம் ஆண்டு நடக்கவிருக்கும் 'ஹிந்து ஆன்மிக சேவைக் கண்காட்சியில் நடக்கும் போட்டிகளிலும் விளையாட்டுகளிலும் பங்கேற்க வேண்டும் எனபதே குறிக்கோள்.

அறிஞர்களையும், கலைஞர்களையும், ஆசிரியர்களையும் கொண்ட குழுவின் சலிப்பற்ற முயற்சியால் உருவானவை தான் நூற்றுக்கணக்கான பக்கங்களைக் கொண்ட இந்த எட்டு புத்தகங்கள். அவர்கள் பல நாட்கள் உழைத்தும், நூற்றுக்கணக்கான நூல்களையும். பல ஞானிகள் மற்றும் சித்தர்களின் பாடல்களையும், படித்தும் மற்றும் கண்டும், தேர்ந்தெடுக்கப்பட்ட நேர்த்தியான விவரங்கள் இந்த புத்தகங்களில் அடங்கியிருக்கின்றன.

நாங்கள் குறிப்பாக சென்னை பல்கலைக் கழகத்தில் சைவ சித்தாந்த துறையில் பணிபுரியும் டாக்டர் திரு சி. முருகேசன் அவர்களுக்கும், திரு. பனசை அருணா அவர்களுக்கும், திரு ஜி.கே.கண்ணன் அவர்களுக்கும், பன்னிரு திருமுறைகளிலிருந்து அவர்கள் தேர்ந்தெடுத்த பாடல்களின் பெரும் பங்களிப்புக்கும் பெரும் கடமைப்பட்டுள்ளோம்.

அதுபோலவே, முன்னாள் இந்தியன் வங்கி தலைவரும், IMCTF குடும்பத்தின் அங்கத்தினருமான திரு எம்.கோபாலகிருஷ்ணன் அவர்கள் அற்பணிப்புக்கும், அவர் அளித்த பெரும் விஷய தானத்துக்கும், அவர் எங்களுக்கு அளித்த ஊக்கத்துக்கும் நாங்கள் கடமைப்பட்டுள்ளோம், மேலும் அவர் எங்களுக்குக் கொடுத்த சலியாத ஆதரவுக்கு நாங்கள் சிரம் சாய்க்கிறோம்.

நாங்கள் எல்லோரும் அறிந்த தமிழ் அறிஞர் திரு.பரசுராம் அவர்களுடைய பெரும் பங்களிப்புக்கு நாங்கள் மிகவும் நன்றிக் கடன் பட்டிருக்கிறோம்.

இந்த மாபெரும் பணிக்காக தங்களுடைய திறம் மிக்க ஆசிரியர்களையும் மற்றவர்களையம் அனுப்பி இந்த பணியை நல்லபடியாகவும் திறம்படவும் செய்ய உதவிய கல்விக் கூடங்களுக்கும் நாங்கள் நன்றி கூற கடமைப்பட்டிருக்கிறோம்.

கடைசியில், நாங்கள் இந்த பணிக்காக தங்களை அர்பணித்துக்கொண்டு தங்களுடைய எல்லா பணிகளையும் ஒதுக்கி வைத்து இந்த வேலையை நாங்கள் சிரம் சாய்க்கும்படியாக செய்துகொடுத்த கீழே கொடுக்கப்பட்டிருக்கும் ஆசிரியர் குழுவுக்கு நாங்கள் எவ்வளவு நன்றி சொன்னாலும் அது குறைவே.

1. Komala.P - Smt. Narbada Devi J. Agarwal Vivekananda Vidyalaya Junior College
2. Kanchana.V- Dayananda Anglo Vedic Group of Institutions

3. Lalitha.V.G - Diana Nursery School
4. Muthulakshmi.K- Smt. Kasturba Nimchand Shah P. Muthyalu Chetty Vivekananda Vidyalaya Junior College
5. Neeta Joshi - Manilal M.Mehta Girls Hr. Sec. School
6. Padmavathi.P- Dayananda Anglo Vedic Group of Institutions
7. Renukadevi - Sri Sankara Vidyalaya Matriculation Higher Secondary School
8. Samundeeswari.B - Smt. Narbada Devi J. Agarwal Vivekananda Vidyalaya Junior College
9. Sasikala.A - Dayananda Anglo Vedic Group of Institutions
10. Thiruselvi.N.M - Manilal M.mehta Girls Hr. Sec. School
11. Varalakshmi.S - Anna Adarsh Matriculation Higher Secondary School
12. Visalam.R - Sri Ram Dayal Khemka Vivekananda Vidyalaya Junior College
13. Vijayalakshmi.S.S - Anna Adarsh Matriculation Higher Secondary School

IMCTF அமைப்பின் அலுவலத்தில் பணிபுரியும்

1. Lakshmi Harish
2. Nethravathi. G
3. Priya. S
4. Sowmiya.J

ஆகியோருக்கும் இந்த புத்தகங்களுக்கு கணினி மூலமாக வடிவமைத்துக் கொடுத்த திரு.பிரேம்குமார் மற்றும் திரு.சிவகுமார் அவர்களுக்கும் எங்களுடைய நன்றி.

**ஆர். ராஜலக்ஷ்மி**
நிர்வாக அறங்காவலர்
IMCTF

# பக்தி

பக்தி என்பதற்கு ஆங்கில மொழியில் அந்த ஆழ்ந்த அர்த்தத்தைக் கொண்ட சரியான வார்த்தை கிடையாது. பக்தி என்றால் என்ன அர்த்தம் என்பதை நாரதரின் வாக்கின் மூலாமாக சுவாமி விவேகானந்தர் விளக்குகிறார். நாரதர் கூறுகிறார்: பக்தி என்பது கடவுளிடம் ஆழ்ந்த அன்பு. யாருக்கு பக்தி அனுபவம் ஏற்படுகிறதோ, அவர் எல்லோ ரிடமும் அன்பு செலுத்துவர், யாரிடமும் வெறுப்பு இருக்காது". பக்தி என்பது கடவுளிடம் அன்பு செலுத்துவது மட்டுமல்ல. யாரையெல்லாம் வணங்கி அன்பு செலுத்துகிறோமோ அது பக்தியே. தாய் தந்தையரிடம் அன்பு என்பது மாத்ரு பக்தி, பித்ரு பக்தி என்று வழங்கப் படுகிறது. அது போலவே ஆசிரியரிடம் மரியாதை கலந்த அன்பு ஆச்சார்ய பக்தியே.

மேலும் கடவுள் என்றால் என்ன? கடவுள் ஒரு உருவமா. உருவமில்லாததா. நம்முடைய பாரத சித்தாந்தத்தில் கடவுள் உருவத்துடனும் இருக்கிறார், உருவமில்லாத பிரும்மமாகவும், இருக்கிறார் என்று எதிர்மறையாக நம்புகிறவர்கள் இருக்கிறார்கள். உண்மையில் கடவுள் என்பது தெய்வீகமே; தெய்வீக குணமே. தெய்வீகம் எங்கும் பரவியிருக்கிறது. மலையிலிருந்து அணு வரை, இரும்பிலிருந்து துரும்பு வரை -- தெய்வீகம் நிரம்பி இருக்கிறது. இந்த அண்டமும், பிரும்மாண்டமுமான படைப்பும் இறைவன் வடிவமே, தெய்வீகத்தின் மறு உருவமே. பாரத பாரம்பர்யத்தில் பக்தி என்பது ஒரு குறிப்பிட்ட கடவுளிடம் இருக்கும் அன்புடன் நின்றுவிடாது. அதனால் தான் உலகில் உள்ள அசையும் ஜீவராசிகளிலிருந்து அசையா பொருள்கள் வரை எல்லாமே தெய்வீகம் நிறைந்தது என்பது நம் பாரத நாட்டின் ஆன்மிக நீரோட்டத்தின் ஆதாரம். பக்தி என்பது உருவ வழிபாட்டுக்கும் அப்பாற்பட்டது, உலகத்தில் இருக்கும் எல்லா ஜீவராசிகளிடமும் அன்பு காட்டவேண்டியதன் அடையாளம் தான் குறிப்பாக சில ஜீவராசிகளிடம் பக்தி செலுத்துவது. பசுவை வழிபடுவது என்பது பசுவை வணங்கி அன்பு செலுத்துவது என்பது. அதனால் தான் பசுவைப் பூஜிக்கிறோம். அதுபோலவே தான் யானையை பூஜிக்கிறோம். பாம்பை வணங்குகிறோம். துளசியை துதிக்கிறோம். அரச மரத்தை சுற்றுகிறோம், வணங்குகிறோம். நதிகளையும், மலைகளையும், நீர் நிலைகளையும், ஏன் கல்லையும் கூட இறை வடிவமாக துதிக்கிறோம். எல்லாவற்றையுமே தெய்வீகமாகவே காணும் ஆன்மிக பாரம்பர்யம் இங்கு காலம் காலமாக இருந்துவருகிறது.

பாரதநாட்டில் பிறந்த சமயங்கள் எல்லாமே இயற்கையில் இறைவன் இருப்பதை உணர்ந்து இயற்கையின் மேல் பக்தி செலுத்தும் பரம்பர்யத்தை கடைபிடிக்கின்றன. கோடானு கோடி மக்கள் நதிகளையும், மலைகளையும், மரங்களையும், பிராணி களையும், பொதுவாக பூமியையும் தினசரி வணகுகிறார்கள். "சிப்கோ' என்கிற மரத்தை தழுவிக்கொள்ளுகிற இயக்கம், சுற்றுசூழ்நிலையை ஆதாரமாக வைத்து நடக்கிறது என்று பலர் நினைத்தாலும் -- அது இயற்கையில் இறைவனைக் காணும் நமது ஆன்மிக பாரம் பர்யத்தின் ஒரு வெளிப்பாடே. அதே பாரம்பர்யத்தின் அடிப்படையில் தான் பூமியை தாய் என்று வணங்கும் வழக்கம் இங்கு இருக்கிறது. பூமி தாய் மட்டுமல்ல பூமியில் இருக்கும் எல்லாமே தெய்வீகத்தன்மை உள்ளது என்கிற எண்ணமும் அதில் பதிந்திருக்கிறது.

நம்முடய பாரம்பர்யம் பஞ்ச பூதங்களான -- நீர், நெருப்பு, காற்று, பூமி, மற்றும் ஆகாசம் -- எல்லாமே இறையின் பிரதிபலிப்பு என்று விளம்புகிறது. இந்த பாரம்பர்ய சிந்தனை தான், பூமியையும், இயற்கையையும் பாதுகாக்கப்பது நமது தர்மம் என்கிற கருத்தை நம் மக்கள் மனதில் ஆழப்பதித்திருக்கிறது. அது மக்களை எளிமையாக வாழத் தூண்டுகிறது. நாம் எப்படி மரத்தையும், நிலத்தையும், நதிகளையும் எப்படி பாதுகாக்கிறோமோ அல்லது பாதிக்கிறோமோ, அப்படித்தான் அவைகளும் நம்மை பாதுகாக்கும் அல்லது

பாதிக்கும். அவைகளை நாம் காப்பாற்றினால் அவைகள் காக்கும். இயற்கையிலிருந்து "உனக்கு எவ்வளவு தேவையோ அதை மட்டும் எடுத்துக்கொள், அது உன் சொத்தல்ல என்கிற இசாவாஸ்ய உபநிஷத வாக்கியத்தை, மகாத்மா காந்தி அவர்கள் உதாரணமாக எடுத்துக்கொண்டு "இயற்கை மனிதனுடைய தேவையைப் பூர்த்தி செய்யும். ஆனால் அவனுடைய பேராசையை பூர்த்தி செய்யாது" என்று கூறினார்.

பஞ்ச பூதங்களை வழிபடும் பாரதப் பாரம்பர்ய சித்தாந்தத்தில் அவைகள் வெறும் பௌதிக ரசாயன வஸ்துக்கள் அல்லது அணுக்கள் மட்டும் அல்ல. அவைகள் அப்படித்தோன்றினாலும் அவை எல்லாம் சிருஷ்டியின் அம்சங்கள், ஆதார சக்தியிலிருந்து உருவானவை. இவை எல்லாவற்றுக்கும் ஆத்மா அல்லது உயிர் உண்டு. ஆதார உண்மையான பிரும்மத்திலிருந்து ஆகாசம், ஆகாசத்திலிருந்து காற்று, காற்றிலிருந்து நெருப்பு, நெருப்பிலிருந்து நீர், நீரிலிருந்து நிலம் பிறக்கிறது என்று கூறுகிறது உபநிஷதம். ஆகவே ஆகாசம், காற்று, நெருப்பு, நீர், நிலம் எல்லாமே புனிதமானவை. நம்முடைய ஆன்மிக சித்தாந்தத்தில் மனித உடலே பஞ்ச பூதங்களால் அமைந்ததாக கொள்ளப்படுகிறது.

மனிதனுடைய ஐம்புலன்களும் பஞ்ச பூதங்களுடன் தொடர்புள்ளவை என்று கருதப்படு கிறது. மனிதனின் மூக்கு நிலமென்றும், நாக்கு நீரென்றும், கண்கள் நெருப்பென்றும், தோல் காற்றென்றும், காதுகள் அகாசமென்றும் நமது ஆன்மிகத்தில் கருதப்படுகிறது. ஐம்புலன்களுக்கும் பஞ்ச பூதங்களுக்கும் இடையே உள்ள இந்த பந்தம்தான் இயற்கை உலகத்துடன் மனிதனுக்கு இருக்கும் உறவின் ஆதாரம். ஆகவே பாரத பாரம்பர்ய ஆன்மிகத்தில், இயற்கையும் சுற்றுச்சூழலும் மனிதனுக்கு வெளியில் இருப்பது போல தோற்றமளித்தாலும், அவைகள் மனிதனுக்கு வெளியில் இல்லை, அவைகள் நமக்கு வேற்றார் இல்லை, நமக்கு வைரிகள் அல்ல. பஞ்ச பூதங்கள் நம்மிடமிருந்து பிரியாத, பிரிக்கப்படமுடியாத அங்கங்கள், அவைகளின் ஒட்டுமொத்தக் கூறுகள் தான் நம் உடல்.

பிஷ்நோயி சமுதாயத்தினர், பில் பிரிவினர் மற்றும் ஸ்வாத்யாய அமைப்பினர் போன்ற சமுதாயத்தினர் காடுகளையும், நீர் நிலைகளையும் வணங்கித் துதிக்கும் பழக்க வழக்கங்களை ஏன் கடைபிடிக்கின்றனர் என்றால், அது சுற்றுச்சூழலுக்கு உகந்தது என்பதால் அல்ல; அது அவர்கள் தர்மத்தின் வெளிப்பாடு. பிஷ்நோயிகள் பிராணிகளையும், மரங்களையும் காக்கும் போதும், ஸ்வாத்யாயிகள் விருக்ஷ மந்திரங்களை – மரங்களையே கோவிலாக உருவாக்கும் போதும், பில் பழங்குடியினர் காடுகளை துதிப்பதும் அவர்களின் ஆன்மிக வாழ்கையின் அங்கம். அது சுற்றுச்சூலலைப் பாதுகாக்கிறது என்பது அதன் விளைவே. இந்த பாரம்பர்ய சமுதாயத்தினர் சமயத்தையும், சுற்றுசூழலையும், மற்ற உயிர்களை பாதுகாப்பதையும், வாழ்க்கை அறங்களையும் பிரித்துப் பார்ப்பதில்லை. மாறாக மற்ற உயிர்களையும், மரங்களையும், செடி கொடிகளையும், பொதுவாக ஒட்டு மொத்த படைப்பையும் வாழ்கையின் தனித் தனி அம்சங்களாகக் காணமல், அவைகளை பக்தியுடன் துதிப்பதே தங்களுடைய தர்மமாக காண்கிறார்கள், அதை அனுசரித்தும் வருகிறார்கள்.

மேலும் பாரத சிந்தாந்தக் கண்ணோட்டத்தில், பூமியை பூதேவியாக, நம்முடைய தாயாக நாம் காண்பது பூமியின் மேல் பக்தியை உருவாக்குகிறது, பூமியை பாதுகாக்கிறது. நம்முடய ஆன்மிக சித்தாந்தம் மற்றும் சடங்குகள், பூமாதா நமக்கு அளிக்கும் கொடைகளை நினைவூட்டி, நாம் அவளுக்கு எவ்வளவு நன்றிக்கடன் பட்டிருக்கிறோம் என்று விளக்குகிறது. கோடானு கோடி மக்கள் தினமும் துயிலெழும்போது பூமாதாவின் மேல் தங்கள் கால் படுவதற்காக மன்னிப்பு கேட்கிற வழக்கம் இன்றும் இருக்கிறது. கோடிக் கணக்கானவர்கள் தினமும் அரிசி மாவில் அவரவர்கள் வீட்டு வாசலில் அழகழகாக

கோலம் போடுகிற வழக்கம் இருக்கிறது. ஏன்? எறும்புகளுக்கும், பறவைகளுக்கும் உணவளிப்பதற்காகவும் பூமாதாவை பூஜிப்பதற்காகவுமே.

நம்முடைய ஆன்மிகத்தில் பக்தி என்பது இயற்கையை வழிபடுவதோடு மட்டும் நின்று விடுவதில்லை. அது நம்முடைய எல்லா உறவுகளையும் உள்ளடக்குகிறது. மாதா பிதா குரு தெய்வம் என்று தமிழ் மறை வழங்குகிறது. மாத்ரு தேவோ பவா, பித்ரு தேவோ பவா, ஆச்சார்யா தேவோ பவா, அதிதி தேவோ பவா என்று உபநிஷதம் வழங்குகிறது. பரத நாட்டு மக்கள் -- அவர்கள் எந்த சமயத்தைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் சரி -- அவர்கள் எல்லோரும் தாய் தந்தை ஆசான் மற்றும் எதிர்பாராமல் வரும் விருந்தாளிகளுக்கும் கூட வணங்கி மரியாதை செலுத்துகிறார்கள்.

அதுபோலவே பக்தி என்பது பெண்மையையும் தாய்மையையும் தெய்வமாகப் போற்றுவதையும் உள்ளடக்குகிறது. பாரத பாரம்பர்யத்தில் கன்னிப் பெண்களை சக்தியின் வடிவமாக, தேவியின் உருவமாக வழிபடும் பழக்கம் எல்லா சமுதாயங்களிலும், எல்லா பிரதேசங்களிலும் இருக்கின்றது.

கன்னி பூஜை [வந்தனம்] ஒரு நம் நாட்டில் பொது கலாச்சார வழக்கமாக வழங்கி வருகிறது. ஒரு வயதிலிருந்து 12 வயது வரை இருக்கும், வயதுக்கு வராத, ஒரு பெண் தான் கன்னிப் பெண். ஒரு வயதான கன்னிப் பெண்ணை சந்தியா என்றும், 2 வயதுப் பெண்ணை சரஸ்வதி என்றும், 3 வயதுப் பெண்ணை த்ரிதாமூர்த்தி என்றும், 4 வயதுப் பெண்ணை காளிகா என்றும், 5 வயதுப் பெண்ணை சுபாகா என்றும், 6 வயதுப் பெண்ணை உமா என்றும், 7 வயதுப் பெண்ணை மாலினி என்றும், 8 வயதுப்பெண்ணை குவிஜிகா என்றும், 9 வயதுப் பெண்ணை காலசந்தர்பா என்றும், 10 வயதுப்பெண்ணை அபராஜிதா என்றும், 11 வயதுப்பெண்ணை ருத்ராணி என்றும், 12 வயதுப் பெண்ணை பைரவி என்றும், 13 வயதுப்பெண்ணை மகாலட்சுமி என்றும் வணங்கும் வழக்கம் பாரத நாடு முழுவதும் பரவியிருக்கிறது. நாடு முழுவதும் துர்க்கையை ஒன்பது அவதாரமாக நவராத்ரியின் பொது வழிபடுகிறார்கள். ஒரு வயதுக் குழந்தைகள் உணவு உண்ணாமலும் அக்ஷர அப்யாசம் இல்லாமலும் இருப்பதால் அந்த குழந்தைகளை வணங்கும் பழக்கக் இல்லை. தவிர 2 வயதுக்குழந்தையை குமரி என்றும், 3 வயதுக்குழந்தையை திருமூர்த்தி என்றும், 4 வயதுப் பெண்ணை கல்யாணி என்றும், 5 வயதுப் பெண்ணை ரோகிணி என்றும், 6 வயதுப் பெண்ணை காளிகா என்றும், 7 வயதுப் பெண்ணை சண்டிகா என்றும், 8 வயதுப் பெண்ணை சாம்பவி என்றும், 9 வயதுப் பெண்ணை துர்கா என்றும், 10 வயதுப் பெண்ணை சுபத்ரா என்றும் வணங்குவதும் வழக்கம்.

தாய்மையடைந்த ஒரு பெண்மணியை சுஹாசினி என்று வணங்கும் பழக்கமும் பாரத நாட்டில் பல இடங்களில் இருக்கின்றது. சுஹாசினி என்றால் எப்பொழுதும் சிரித்த முகத்துடன் இருப்பவள் என்று அர்த்தம். இப்படி பெண்களை வணங்கும் பழக்கம் நம் நாட்டில் இருப்பதால் தான் பாரத நாட்டில் பெண் தலைவர்கள் பெரிய பதவிக்கு தேர்தல் மூலமாகவும் மற்றபடியும் வரமுடிகிறது என்று உலக நாடுகளில் பெண்ணுரிமை இயக்கத்தில் தீவிரமாக இருப்பவர்கள் கருத்து கூறுகிறார்கள். பெண்மையை பக்தியுடன் போற்றுவதால் தான் பெண்களுக்கு எதிரான ஆன்மிகக் கருத்துக்கள் இந்த நாட்டில் இல்லை. அதனால் அரசியலிலும் அது போன்ற கருத்துக்கள் கிடையாது.

அது போலவே பக்தி என்பது நாட்டின் மேல் இருக்கும் வணக்கத்துடன் காட்டும் அன்பையும் பாசத்தையும் கூட உள்ளடக்குகிறது. நாட்டுப் பற்று என்றால் நாட்டின் மேல் பக்தி என்று தானே அர்த்தம். பாரத நாட்டு மக்களுக்கும் பாரத மண்ணுக்கும் இருக்கும் பந்தம் ஒரு தாய்க்கும் குழந்தைக்கும் இருக்கும் பந்தம். இந்த பந்தம் பாரதிய

ஆன்மிகம் மற்றும் பாரத மண் இரண்டையும் கலந்த ஒன்று. இந்த நாட்டில் மட்டுமே எல்லா சமயங்களையும் ஏற்கும் ஒரு ஆன்மிகப் பாரம்பர்யம் தொன்று தொட்டு இருந்து வருகிறது. ஆகவே இந்த நாட்டு ஆன்மிகத்துக்கும் இந்த மண்ணுக்கும் இரண்டும் கலந்த ஒன்றிலிருந்து ஒன்றைப் பிரிக்க முடியாத ஒரு உறவு அல்லது பந்தம் இருக்கிறது. இந்த நாட்டு ஆன்மிகத்தையும் இந்த நாட்டின் மக்களையும் இணைக்கும் சூத்திரக் கயறு தான் இந்த நாட்டின் தர்மம் சார்ந்த வாழக்கை முறை. இதனால் சமய இணக்கம் இந்த நாட்டில் இயற்கையாகவே இருக்கிறது. ஆகையால் இந்த நாட்டின் ஆன்மிகம் இந்த நாட்டின் தெய்வீகம். இந்த நாட்டின் வாழ்கை முறை இந்த நாட்டின் தர்மம். இந்த நாடு தெய்வீகமும் தர்மமும் பரவியுள்ள இந்த புண்ணிய பூமி. இந்த நாட்டுப் பற்று என்பது இந்த நாட்டை மட்டுமல்லாமல் இதன் தெய்வீகத்தை உணருவதும், இதன் தர்மம் சார்ந்த வாழ்கை முறையை அனுசரிப்பதும் ஆகும்.

மற்ற நாடுகளில் சமய இணக்கத்தை சமயம் சாரா அரசியல் சட்டத்தின் மூலமாகக் கொண்டுவர முயற்சி செய்கிறார்கள். ஆனால் இந்த நாட்டின் ஆன்மிக பாரம்பர்யத்தினால் இது இந்த நாட்டின் சுவபாவமாகவே மாறிவிட்டிருக்கிறது. ஆனால் மற்ற சமயங்களை ஏற்கத சமயங்களால் பாரத நாட்டின் ஆன்மிகத்துக்கும் பாரத மண்ணுக்கும் தொடர்பு இற்றும் அருந்தும் போனதால் இந்த நாட்டுக்கு பெரிய ஆபத்துக்கள் ஏற்பட்டிருக்கின்றன. இந்த நாடே பிரிந்தும் போயிருக்கிறது. இந்த உயர்ந்த பாரம்பர்யம் வேறு எந்த நாட்டிலும் ஆன்மிக ரீதியில் வழக்கத்தில் இல்லை. இதை காப்பதும் நாட்டின் மேல் உள்ள பக்தியில் அடங்கும். அதனால் இந்த நாட்டை பாதுகாக்க யார் யார் உயிரழந்தார்களோ அவர்கள் எல்லொருமே வணங்கத் தகுந்தவர்கள்.

நல்ல பண்புகள் உள்ள ஒரு குழந்தையை, ஒரு மாணவனை, மாணவியை உருவாக்குவதை மையக் கருத்தாகக் கொண்டு பண்பு மட்டும் கலாச்சாரப் பயிற்சி முனைவு மையம் [Initiative for moral and cultural Foundation] பண்புகளை வளர்க்க ஆறு வகையான அடிப்படை கருப்பொருள்களை [Theme] ஆதாரமாக வைத்து, பெரும் ஆராய்ச்சிக்குப்பிறகு, வகுத்துத் தொகுத்து வழங்குகிறது. அப்படி ஆறு வகையான கருப்பொருள்களை மையமாகக் கொண்ட பண்புகள் வளர என்னென்ன பயிற்சிகள் தேவை என்கிற விவரம் கீழே அளிக்கப்பட்டிருக்கிறது.

கருப் பொருள் சார்ந்த பண்புகள் .....................அவைகளை அடையும் பயிற்சிகள்

1. வனம்/வன விலங்குகளை பாதுகாத்தல்........."மரத்தை வழிபடுவது/;நாக வழிபாடு

2. ஜீவராசிகளைப் பேணுதல் ..........................."பசு""யானை""துளசி" வழிபாடு

3. சுற்றுச்சூழலைப் பராமரித்தல் ....................."கங்கை வழிபடு" "பூமி" வழிபாடு

4. பெற்றோர்/ஆசிரியர்களை வணங்குதல் ......"தாய்" "தந்தை" "ஆசிரியர்" வழிபாடு

5. பெண்மையைப் போற்றுதல் ........................."கன்னி" "பெண்மை" வழிபாடு

6. நாட்டுப்பற்றை உணர்த்துதல்......................."பாரத மாதா" "ராணுவ வீரர்" வழிபாடு

இந்த ஆறு கருப்பொருள்கள் சார்ந்த பண்புகள் தற்காலத்துக்கேற்றவை, தேவை, என் அவசியமும் கூட. ஆனால் இந்த பண்புகளை வளர்க்க மனத்தை கனிய வைக்கும் பண்புப் பயிற்சிகள் தேவை. பாட புத்தகங்களைப் படிப்பதாலோ, உயர்ந்த பலருடைய பேருரைகளை கேட்பதலோ பண்புகள் ஏற்படாது. அறிவளவிலும் மனதளவிலும் ஏற்கப்படுவது மனிதனின் அந்தராத்மாவைத் தொடாது. மனிதனுடைய ஆன்மாவைத் தொட ஆழ்ந்த பயிற்சி தேவை. அதனை ‘சம்ஸ்காரம்’ என்று பாரத நாட்டின் ஆன்மிக பாரம்பர்யத்தில் வழங்குவர். இவை எல்லாமே பக்தியை ஆதாரமாகக் கொண்டவை. பக்தியில்லை என்றால் சம்ஸ்காரம் கிடையாது.

உதாரணமாக மரத்தை தெய்வமாக வணங்கும் பயிற்சியான விருக்ஷ வந்தனம் மரத்துக்கும் மனிதனுக்கும் ஆழ்ந்த உறவை அவனுடைய ஆன்ம அளவில் உணர்த்தி மனிதனை மரத்தை தன்னுடைய அங்கமாக பாவிக்க, கருத வைக்கிறது. மரத்தின் மேல் பக்தி ஏற்படுகிறது ஒரு மரத்தை அழிப்பது என்பது காட்டை அழிப்பது போல என்று அவனை உணரவைத்து அவனை மரத்தை அழிப்பதை ஏற்காமல் செய்கிறது. மரம் வளர்ப்பதை புண்ணிய செயலாக மட்டுமல்லாமல் அதை தெய்வத்தைப் போற்றும் சடங்காகவும், சமுதாயத்துக்குச் செய்யும் பணியாகவும் மாற்றுகிறது. அவன் மரத்தை மரமாகப் பார்க்காமல் தெய்வமாகவே பார்க்கும் மன நிலைக்குச் செல்கிறான். இது போலத் தான் பசுவாக இருந்தாலும், துளசி செடியாக இருந்தாலும், பாம்பாக இருந்தாலும், யானையாக இருந்தாலும், கங்கை நதியாக இருந்தாலும், பூமியாக இருந்தாலும், அன்னை, பிதா, ஆசிரியராக இருந்தாலும், கன்னிப்பெண்ணாக இருந்தாலும், தாய்மை அடைந்த பெண்ணாக இருந்தாலும், அது தாய் நாடக இருந்தாலும் அந்த நாட்டுக்காக உயிர் நீத்த வீரர்களாக இருந்தாலும் அவர்களை தெய்வமாக வழிபடுவதன் மூலமாக கருப் பொருள்களைச் சார்ந்த பண்புகளை ஆழ்ந்த மனதில் பதிய வைக்கிறது.

இவை எல்லாம் நவீன காலத்துக்குத் தேவையான அவசியமான பண்புகள். ஆனால் நவீன சிந்தனை முறைகளால் இந்த பண்புகள் ஏற்படாது, ஒரு மனிதனின் அந்தராத்மாவுக்குள் ஊடுருவாது. இதற்கு நம்முடய ஆன்மிக நீதி நூல்கள் வழிகாட்டுகின்றன. அந்த நூல்களில் எப்படி இந்த பண்புகள் விளக்கப்பட்டிருக்கின்றன என்பதை இந்த புத்தகத்தில் தொகுத்து வழங்கப்பட்டிருக்கிறது. எந்தெந்த நூல்களிலிருந்தும் மற்ற மூலத்திலிருந்தும் இந்த புத்தகத்தில் தொகுக்கப்பட்டிருக்கிறது என்பதை கீழே பார்க்கலாம்

1. அபிராமி அந்தாதி
2. ஔவையார் பாடல்கள்
3. பாரதிதாசன் கவிதைகள்
4. பாரதியார் பாடலகள்
5. கம்ப ராமாயணம்
6. கந்தர் அலங்காரம்
7. கந்தர் அனுபூதி
8. கந்தர் கலிவெண்பா
9. கந்தர் சஷ்டி கவசம்
10. கோளறு பதிகம்
11. லலிதாம்பாள் சோபனம்
12. நாலாயிர திவ்ய பிரபந்தம்
13. பன்னிரு திருமுறை
14. சித்தர்கள் பாடல்கள்
15. தமிழ்த் தாய் வாழ்த்து
16. தாயுமானவர் பாடல்கள்
17. திருபள்ளியெழுச்சி
18. திருவருட்பா
19. திருவெம்பாவை
20. திருவிளக்கு ஸ்தோத்ரம்
21. விநாயகர் நான்மணிமாலை
22. திருமுருகாற்றுப்படை
23. ராகு – கேது துதி
24. திருமந்திரம்
25. இந்து மகா சமுத்திர

இந்த புத்தகப் பகுதி தானாகவே முன்வந்து அவரவர்கள் சொந்த வேலை போல பணி செய்த ஆசிரிய பெருமக்களால் தொகுக்கப்பட்டது. அவர்கள் இல்லையென்றால் இந்த பணி நடந்தே இருக்காது.

**குருமூர்த்தி**

*Chairman, Academic Council*

*IMCTF*

# வகுப்பு - I

## 1. ஔவையார் பாடல்கள்

### அ. விநாயகர் அகவல்

குருவடி வாகிக் குவலயந்தன்னில்
திருவடி வைத்துத் திறம் இது பொருள் என
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளிக்
கோடா யுதத்தால் கொடுவினை களைந்தே

❖❖❖❖

உவட்டா உபதேசம் புகட்டி என் செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையுங் காட்டி
ஐம்புலன் றன்னை அடக்கு முபாயம் இன்புறு கருணையின்
இனிதெனக் கருளிக்
கருவிக ளொடுக்குங் கருத்தினை யறிவித்து
இருவினை தன்னை அறுத் திருள் கடிந்து

❖❖❖❖

பாலும் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலும் கலந்துனக்கு நான் தருவேன் – கோலஞ்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீ எனக்கு
சங்கத் தமிழ் மூன்றும் தா.

❖❖❖❖

தாயாய் எனக்குத் தான்எழுந்து அருளி
மாயாப் பிறவி மயக்கம் அறுத்தே.

# 2. சித்தர் பாடல்கள்

## அ. பட்டினத்தார் வரலாறும் பாடல்களும்

பொல்லாதவன் நெறி நில்லாதவன் ஐம்புலன்கள்தமை
வெல்லாதவன் கல்வி கல்லாதவன் மெய்யடியவர்பால்
செல்லாதவன் உண்மை சொல்லாதவன் நின் திருவடிக்கன்பு
இல்லாதவன் மண்ணிலேன் பிறந்தேன்! கச்சியேகம்பனே!

## ஆ. பாம்பாட்டி சித்தர் பாடல்

காற்று உடன் பொருள் ஆவி தத்த மாகவே
தானம் வாங்கி நின்ற எங்கள் சற்குருவினை
போற்றிமனம் வாக்குக்காயம் மூன்றும் பொருந்தப்
புகழ்ந்து புகழ்ந்து நின்று ஆடு பாம்பே!

❖❖❖❖

உள்ளங்கையிற் கனிபோல உள்ள பொருளை
உண்மையுடன் காட்டவல்ல உண்மைக் குருவைக்
கள்ளமனந் தன்னைத் தள்ளிக் கண்டு கொண்டு அன்பாய்க்
களித்துக் களித்து நின்று ஆடுபாம்பே!

❖❖❖❖

காயம் நிலை அழிகையைக் கண்டு கொண்டு பின்
கற்பு நிலை யுள்ளிற் கொண்டு எக்காலமும் வாழும்
தூயநிலை கண்ட பரிசுத்தக் குருவின்
துணையடி தொழுது நின்று ஆடு பாம்பே!

❖❖❖❖

கூடுவிட்டுக் கூடு பாயும் கொள்கை யுடைய
குருவின் வல்லபம் எவர் கூற வல்லவர்?
வீடு பெறும் வகையை மேன்மேலுங் காட்டும்
மெய்க் குருவைப் பணிந்து நின்று ஆடு பாம்பே!

## இ. பட்டினத்தார் பாடல்கள்

பொன்னை நினைந்து வெகுவாகத் தேடுவர் பூவையன்னாள்
தன்னை நினைந்து வெகுவா யருகுவர் தாரணியில்

❖❖❖❖

பிறவா திருக்க வரம்பெறல் வேண்டும் பிறந்துவிட்டால்
இறவா திருக்க மருந்துண்டு காணிது வெப்படியோ

❖❖❖❖

பத்தும் புகுந்து பிறந்து வளர்ந்துபட் டாடைசுற்றி
முத்தும் பவளமும் பூண்டோடி யாடி முடிந்தபின்பு

❖❖❖❖

கண்ணுண்டு காணக் கருத்துண்டு நோக்கக் கசிந்துருகிப்
பண்ணுண்டு பாடச் செவியுண்டு கேட்கப்பல் பச்சிலையால்

❖❖❖❖

மூல மறியேன் முடியு முடிவறியேன்
ஞாலத்துட் பட்டதுயர் நாடா நடக்குதடா.

# 3. பன்னிரு திருமுறை

## அ. ஆறாம் திருமுறை

### தனித் திருத்தாண்டகம் மாதா பிதா வந்தனம்

அப்பன்நீ அம்மைநீ ஐயனும் நீ
அன்புடைய மாமனும் மாமியும் நீ
ஒப்புடைய மாதரும் ஒண்பொருளும் நீ
ஒரு குலமும் சுற்றமும் ஓரூரும் நீ
துய்ப்பனவும் உய்ப்பனவும் தோற்றுவாய் நீ
துணையா யென் நெஞ்சந் துறப்பிப் பாய் நீ
இப் பொன் நீ இம்மணி நீ இம் முத்தும் நீ
இறைவன் நீ ஏறூர்ந்த செல்வன் நீயே!

## ஆ. தேவாரம் – *மாத்ரு பித்ரு வந்தனம்*

**திருநாவுக்கரசர் தேவாரம் (6ஆம் திருமுறை) நின்ற திருத்தாண்டகம் "திருச்சிற்றம்பலம்"**

மாதா பிதாவாகி மக்களாகி
மறிகடலும் மால் விசும்பும் தானே ஆகிக்
கோதாவிரியாய்க் குமரியாகிக்
கொல் புலித்தோலாடைக் குழகனாகிப்
யாதானும் மெனுநினைந்தார்க்கு எளிதே ஆகி
அழல் வண்ண வண்ணர் தாம் நின்றவாறே
"திருச்சிற்றம்பலம்"

## இ. நான்காம் திருமுறை

**திருவதிகை வீரட்டானம் பண் : காந்தார பஞ்சமம்**

முளைக்கதி ரிளம்பிறை மூழ்க வெள்ளநீர்
வளைத்தெழு சடையினர் மழலை வீணையர்
திளைத்ததோர் மான்மறிக் கையர் செய்யபொன்
கிளைத்துழித் தோன்றிடுங் கெடில வாணரே.

## ஈ. முதல் திருமுறை

**கோயில் : (பதிகம் எண்: 80) பண்: குறிஞ்சி**

கற்றாங் கெரியோம்பிக் கலியை வாராமே
செற்றார் வாழ்தில்லைச் சிற்றம் பலமேய
முற்றா வெண்டிங்கண் முதல்வன் பாதமே
பற்றா நின்றாரைப் பற்றா பாவமே.

# 4. கந்தர் அனுபூதி

எந்தா யும்எனக்கு அருள் தந்தையும்நீ
சிந்தா குலம்ஆனவைதீர்த்து எனைஆள்
கந்தா கதிர்வேலவனே உமையாள்
மைந்தா குமரா மறைநாயகனே

பாடல் எண் – 46 பக்கம் எண் – 146

உருவாய் அருவாய் உளதாய் இலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்க்
கருவாய் உயிராய்க் கதியாய் விதியாய்க்
குருவாய் வருவாய் அருள்வாய் குகனே, 'ஓம் "

பாடல் எண் – 51 பக்கம் எண் – 154

## 5. லலிதாம்பாள் சோபனம்

"பகவானே! தர்ம சாஸ்திரங்களெல்லாம்
பிறந்தது உம்மிடத்திலிருந்து
மஹாதேவியுடைய அவதாரங்களை
மாதவா விஸ்தரித்துச் சொல்லவேணும்"
அன்புடன் கேட்ட அகஸ்தியரை வாழ்த்தி
ஹயக்ரீவமூர்த்தியும் எடுத்துரைப்பார்.
அம்பிகையுடைய அவதாரங்கள் சொல்ல
ஆரம்பித்தாரப்போ சோபனம் சோபனம்.

பயமென்றோரை ரக்ஷித்திடும்
அம்மா உனக்கு நமஸ்காரம்

ஆபத்துக்களொன்றும் வாராமலே எங்கள்
அம்மா வந்து நீ ரக்ஷிக்க வோணும்

## 6. திருவருட்பா

தாயும் என்னருமைத் தந்தையும் ஞான
சபையிலே தனிநடம் புரிந்
தூயநின் பாதம் துணையெனப் பிடித்தேன்
தூக்கமும் சோம்பலும் துயரும்

அப்பாநான் வேண்டுதல்கேட் டருள்புரிதல் வேண்டும்
ஆருயிர்கட் கெல்லாம்நான் அன்புசெயல் வேண்டும்
எப்பாரும் எப்பதமும் எங்கணும்நான் சென்றே
எந்தைநின தருட்புகழை இயம்பியிடல் வேண்டும்

செப்பாத மேல்நிலைமேல் சுத்தசிவ மார்க்கம்
திகழ்ந்தோங்க அருட்சோதி செலுத்தியிடல் வேண்டும்
தப்பேது நான்செயினும் நீபொறுத்தல்வேண்டும்
தலைவநினைப் பிரியாத நிலையும்வேண் டுவனே

## 7. திருவெம்பாவை

அத்தன்! ஆனந்தன்! அமுதன் என்று அள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய்! வந்துன் கடை திறவாய்!

❖❖❖❖

ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை
ஏழை பங்காளனையே பாடு ஏலோர் எம்பாவாய்

## 8. திருப்பள்ளியெழுச்சி

யாவரும் அறிவரி யாயெமக் கெளிவாய்!
எம்பெரு மான்! பள்ளி எழுந்தரு ளாயே!

## 9. தமிழ்த்தாய் வாழ்த்து

நீராரும் கடல் உடுத்த நில மடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரதக் கண்டமிதில்
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிட நல் திருநாடும்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறும் திலகமுமே!
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற,
எத்திசையும் புகழ்மணக்க இருந்த பெரும் தமிழணங்கே!
தமிழணங்கே!
உன் சீரிளமைத் திறம்வியந்து
செயல் மறந்து வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே!

## 10. கந்தர் சஷ்டி கவசம்

துதிப்போர்க்கு வல்வினைபோம், துன்பம்போம்; நெஞ்சில்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் – கதித்து ஓங்கும்;
நிஷ்டையுங் கைகூடும்; நிமலர் அருள் கந்தர்
சஷ்டி கவசந் தனை.

## 11. பாரதியார் பாடல்

### நாட்டுக் கல்வி

**ஆங்கிலத்தில் ரவீந்திரநாதர் எழுதிய பாடலின் மொழிபெயர்ப்பு**

விளக்கி லேதிரி நன்கு சமைந்தது
மேவு வீர்இங்கு தீக்கொண்டு தோழரே!
களக்க முற்ற இருள்கடந் தேகுவார்
காலைச் சோதிக் கதிரவன் கோவிற்கே;

துளக்க முற்றவிண் மீனிடம் செல்லுவார்
தொகையில் சேர்ந்திட உம்மையும் கூவினார்;
களிப்பு மிஞ்சி ஒளியினைப் பண்டொரு
காலம் நீர் சென்று தேடிய தில்லையோ?

அன்று நுங்கள் கொடியினை முத்திட்டே
ஆசை யென்றவிண் மீன்ஒளிர் செய்ததே;
துன்று நள்ளிருள் மாலை மயக்கத்தால்,
சோம்பி நீரும் வழிநடை பிந்தினீர்;

நின்ற விந்தன நுங்கள் விளக்கெலாம்;
நீங்கள் கண்ட கனாக்களெல் லாம்இசை
குன்றித் தீக்குறி தோன்றும்;இராப்புட்கள்
கூவு மாறொத் திருந்தன காண்டிரோ?

இன்னு மிங்கிருள் கூடி யிருப்பினும்
ஏங்கு கின்ற நரகத் துயிர்கள்போல்
இன்னு மிங்கு வனத்திடை காற்றுத்தான்
ஓங்கும் ஓதை இருந்திடும் ஆயினும்
முன்னைக் காலத்தின் நின்றெழும் பேரொலி
முறைமு றைபல ஊழியின் ஊடுற்றே
பின்னை இங்குவந் தெய்திய பேரொலி
போல மந்திர வேதத்தின் பேரொலி.

"இருளை நீக்கி ஒளியினைக் காட்டுவாய்,
இறப்பை நீக்கி, அமிர்தத்தை ஊட்டுவாய்"
அருளும் இந்த மறையொலி வந்திங்கே
ஆழ்ந்த தூக்கத்தில் வீழ்ந்திருப் பீர்தமைத்
தெருளு றுத்தவும் நீர்எழு கில்லிரோ?
தீய நாச உறக்கத்தில் வீழ்ந்தநீர்
மருளை நீக்கி அறிதிர் அறிதிரோ?
வான்ஒ ளிக்கு மகாஅர்இ யாம்என்றே.

## 12. திருமூலர் திருமந்திரம்

குருவே சிவமெனக் கூறினன் நந்தி
குருவே சிவமென்பது குறித்தோரார்
குருவே சிவனுமாய்க் கோனுமாய் நிற்கும்
குருவே உரையுணர் வற்றதோர் கோவே

# ஜீவராசிகளைப் பேணுதல்

## வகுப்பு - II

## 1. ஔவையார் பாடல்கள்

### அ. விநாயகர் அகவல்

பாலும் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலும் கலந்துனக்கு நான் தருவேன் – கோலம் செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீயெனக்குச்
சங்கத் தமிழ் மூன்றும் தா

❖❖❖❖

ஐம்புலன் தன்னை அடங்கும் உபாயம்
இன்புறு கருணை இனிதெனக் கருளி
கருவிகள் ஒடுங்கும் கருத்தினை அறிவித்து
இருவினை தன்னை அறுத்தருள் கடிந்து
தலமொரு நான்கும் தந்தெனக்கு அருளி
மலமொரு மூன்றின் மயக்கம் அறுத்தே
ஒன்பது வாயில் ஒரு மந்திரத்தால்

❖❖❖❖

சீதக் களபச் செந்தா மரைபூம்
பாதச் சிலம்பு பலஇசை பாடப்
பொன் அரை ஞாணும் பூந்துகி லாடையும்
வன்ன மருங்கில் வளர்ந்தழ கெறிப்பப்
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்
வேழ முகமும் விளங்குசிந் தூரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சிற் குடிகொண்ட நீலமேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும் மூன்று கண்ணும் மும்மதச்
சுவடும்.

❖❖❖❖

திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொல்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் – உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனைமுகத்தானைக்
காதலால் கூப்புவர் தம் கை

## 2. பன்னிரு திருமுறை

## அ. தேவாரம்

**திருவெண்காடு – திருத்தாண்டகம்**

தூண்டு சுடர் மேனித் தூநீறு ஆடி, சூலம் கை ஏந்தி,
ஓர் சுழல் வாய் நாகம்
பூண்டு, பொறி அரவம் காதில் பெய்து, பொன்சடைகள்
அவை தாழ, புரி வெண்நூலர்,
நீண்டு கிடந்துஇலங்கு திங்கள் சூடி, நெடுந்தெருவே
வந்து எனது நெஞ்சம் கொண்டார்.
வேண்டும் நடை நடக்கும் வெள் ஏறு ஏறி
வெண்காடு மேவிய விகிர்தனாரே.

❖❖❖❖

பாதம் தனிப் பார்மேல் வைத்த பாதர் பாதாளம் ஏழ்
உருவப் பாய்ந்த பாதர்
ஏதம் படா வண்ணம் நின்ற பாதர் ஏழ் உலகும் ஆய்
நின்ற ஏகபாதர்
ஓதத்து ஒலி மடங்கி, ஊர் உண்டு ஏறி, ஒத்து உலகம்
எல்லாம் ஒடுங்கிய(ப்)பின்,
வேதத்து ஒலி கொண்டு, வீணை கேட்பார்
வெண்காடு மேவிய விகிர்தனாரே.

❖❖❖❖

நென்னலை ஓர் ஓடு ஏத்திப் பிச்சைக்கு என்று
வந்தார்க்கு, வந்தேன் என்று இல்லே புக்கேன்
அந் நிலையே நிற்கின்றார் ஐயம் கொள்ளார் அருகே
வருவார் போல் நோக்குகின்றார்

நும் நிலைமை ஏதோ? நும் ஊர்தான் ஏதோ?
என்றேனுக்கு ஒன்று ஆகச் சொல்லமாட்டார்
மென்முலையார் கூடி விரும்பி ஆடும் வெண்காடு
மேவிய விகிர்தனாரே.

## ஆ. முதல் திருமுறை

### திருவேணுபுரம்

**பண் : நட்டபாடை**

வண்டார்குழ லரிவையொடு பிரியாவகை பாகம்
பெண்டான்மிக வானான்பிறைச் சென்னிப்பெரு மானூர்
தண்டாமரை மலராளுறை தவளந்நெடு மாடம்
விண்டாங்குவ போலும்மிகு வேணுபுர மதுவே.

### திருப்புகலி

**பண்: வியாழக்குறிஞ்சி**

ஆட லரவசைத்தா னருமாமறை தான்விரித்தான் கொன்றை
சூடிய செஞ்சடையான் சுடுகா டமர்ந்தபிரான்
ஏடவிழ் மாமலையா ளொருபாக மமர்ந்தடியா ரேத்த
ஆடிய வெம்மிறையூர் புகலிப் பதியாமே

## இ. நான்காம் திருமுறை

### திருவையாறு – பண் : காந்தாரம்

மாதர்ப் பிறைக்கண்ணி யானை மலையான் மகளொடும் பாடிப்
போதொடு நீர்சுமந் தேத்திப் புகுவாரவர்பின் புகுவேன்
யாதுஞ் சுவடு படாமல் ஐயா நடைகின்ற போது
காதன் மடப்பிடி யோடுங் களிறு வருவன கண்டேன்
கண்டே னவர்திருப் பாதங் கண்டறி யாதன கண்டேன்.

## ஈ. நாலாயிரத் திவ்விய பிரபந்தம்

ஓங்கியுலகளந்த உத்தமன்பேர் பாடி
நாங்கள் நம்பாவைக்குச் சாற்றிநீராடினால்
தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும்மாரிபெய்து
ஓங்கு பெருஞ்செந்நெலூடுகயலுகள
பூங்குவளைப் போதில் பொறிவண்டு கண்படுப்ப
தேங்காதேபுக்கிருந்து சீர்த்தமுலைபற்றி
வாங்க குடம் நிறைக்கும் வள்ளல் பெரும்பசுக்கள்
நீங்காத செல்வம் நிறைந்தேலோரெம்பாவாய்

### திருவிருத்தம்

சிதைக்கின்ற தாழியென்றாழியைச் சீறிதன் சீறடியால்
உதைக்கின்ற நாயகந் தன்னொடும் மாலே உனது தண்தார்
ததைக்கின்ற தண்ணந் துழாய் அணி வான் அது வேமனமாய்ப்
பதைக்கின்ற மாதின் திறத்து அறியேன் செயற்பாலதுவே.

சிந்துரச் செம்பொடிப் போல்
திருமாலிருஞ்சோலை எங்கும் இந்திர கோபங்களே எழுந்தும்
பரந்திட்டனவால்
மந்தரம் நாட்டி அன்று மதுரக்
கொழுஞ்சாறு கொண்ட சுந்தரத்தோளுடையான் சுழலையினின்று
உய்துங் கொலொ?

போர்க்களிறு பொரும் மாலிருஞ்சோலை
அம் பூம்பறவில்
தார்க்கொடி முல்லைகளும் தவள
நகை காட்டுகின்ற
கார்க்கொள் பிடாக்கள் நின்று கழறிச்
சிரிக்கத் தாச்யேன்
ஆர்க்கு இடுகோ? தோழீ! அவன்
தார் செய்த பூசலையே.

## 3. கந்தர் அலங்காரம்

சலங்காணும் வேந்தர் தமக்கு மஞ்சார்ய மன் சண்டைக் கஞ்சார்
துலங் காநரகக் குழியணு கார் துட்ட நோயணுகார்
கலங்கார் புலிக்குங் கரடிக்கும் யானைக்குங் கந்தன்னூல்
அலங்கார நூற்றுறொரு கவி தான் கற்றறிந்தவரே

❖❖❖❖

ஆற்றைப் பணியை யிதழியைத் தும்பையை யம்புலியின்
கீற்றைப் புனைந்த பெருமான் குமாரன்க்ரு பாகரனே.

## 4. தாயுமானவர் பாடல்கள்

விதியையும் விதித்தென்னை விதித்திட்ட
மதியையும் விதித் தம் மதி மாயையில்
பதிய வைத்த பசுபதி நின்னருள்
கதியை எப்படிக் கண்டு களிப்பதே

## 5. திருஅருட்பா

வாடிய பயிரைக் கண்டபோ தெல்லாம்
 வாடினேன் பசியினால் இளைத்தே
வீடுதோ றிரந்தும் பசியாற தயர்ந்த
 வெற்றரைக் கண்டுளம் பதைத்தேன்
நீடிய பிணியால் வருந்துகின் றோர்என்
 நேர்உறக் கண்டுளம் துடித்தேன்
ஈடின்மா னிகளாய் ஏழைக ளாய்நெஞ்சு
 இளைத்தவர் தமைக்கண்டே இளைத்தேன்

## 6. சித்தர் பாடல்கள்

ஆதிபகவனையே ......பசுவே!
அன்பாய் நினைப்பாயேல்
சோதி பரகதிதான் ......பசுவே!
சொந்தமது ஆகாதோ?
பேய்க்குரங்கு போலப் பேருலகில்
இச்சைவைத்து
நாய்நரிகள் போலலைந்தால்
நன்மையுண்டோ கல்மனமே!

❖❖❖❖

பலமதம் பொய்மையே என்றோதுகுயிலே – எழு
பவம் அகன்றிட்டோம் நாமென்று ஓதுகுயிலே!
காற்றூனைப் போல்மனத்தைக் காட்டுமயிலே – வரும்
காலனையும் தூரத்தில் ஓட்டு மயிலே!

## 7. திருவெம்பாவை

மொய்யார் தடம் பொய்கை புக்கு முகேர் என்னக்
கையால் குடைந்து குடைந்து உன் கழல்பாடி
ஐயா! வழியடியோம்! வாழ்ந்தோம்காண்!

## 8. திருப்பள்ளியெழுச்சி

கூவின பூங்குயில் கூவின கோழி
குருகுகள் இயம்பின இயம்பின சங்கம்

## 9. தமிழ்த்தாய் வாழ்த்து

நீராரும் கடல் உடுத்த நில மடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரதக் கண்டமிதில்
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிட நல் திருநாடும்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறும் திலகமுமே!
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற,
எத்திசையும் புகழ்மணக்க இருந்த பெரும் தமிழணங்கே!
தமிழணங்கே!
சீரிளமைத் திறம்வியந்து
செயல் மறந்து வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே!

# 10. பாரதியார் பாடல்கள்

## பாப்பாப் பாட்டு

ஓடி விளையாடு பாப்பா!–நீ
ஓய்ந்திருக்க லாகாகது பாப்பா!
கூடி விளையாடு பாப்பா!–ஒரு
குழந்தையை வையாதே பாப்பா!

சின்னஞ் சிறுகுருவி போலே–நீ
திரிந்து பறந்துவா பாப்பா!
வண்ணப் பறவைகளைக் கண்டு–நீ
மனதில் மகிழ்ச்சிகொள்ளு பாப்பா!

கொத்தித் திரியுமந்தக் கோழி–அதைக்
கூட்டி விளையாடு பாப்பா!
எத்தித் திருடுமந்தக் காக்காய்–அதற்கு
இரக்கப் படவேணும் பாப்பா!

பாலைப் பொழிந்துதரும் பாப்பா!–அந்தப்
பசுமிக நல்லதடி பாப்பா!
வாலைக் குழைத்துவரும் நாய்தான்–அது
மனிதர்க்கு தோழனடி பாப்பா!

வண்டி இழுக்கும்நல்ல குதிரை,–நெல்லு
வயலில் உழுதுவரும் மாடு,
அண்டிப் பிழைக்கும் நம்மை,ஆடு,–இவை
ஆதரிக்க வேணுமடி பாப்பா!

❖❖❖❖

# வகுப்பு - III

## 1. ஔவையார் பாடல்கள்

### அ. விநாயகர் அகவல்

குண்டலி யதனிற் கூடிய அசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து
மூலா தாரத்தின் மூண்டெழு கனலைக்
காலால் எழுப்புங் கருத்தறி வித்தே
அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்
குமுத சகாயன் குணத்தையுங்
கூறி இடைச்சக்கரத்தின் ஈரெட்டு
நிலையும்
உடற்சக் கரத்தின் உறுப்பையுங் காட்டிச்
சண்முக தூலமும் சதுர்முகச் சூக்கமும்
எண்முக மாக இனிதெனக் கருளிப்

❖❖❖❖

புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரியெட்டு நிலையும் தெரிசனப் படுத்தி
கருத்தினிற் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி இனிதெனக் கருளி
என்னை அறிவித் தெனக்கருள் செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்தே
வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கியே என்றன் சிந்தை தெளிவித்து
இருள்வெளி யிரண்டிற் கொன்றிட மென்ன
அருள் தரும் ஆனந்த அழுத்தி என் செவியில்

❖❖❖❖

முப்பழம் நுகரும் மூஷிக வாகன!
இப்பொழு(து) என்னை ஆட்கொள வேண்டி
மூஞ்சூருக்கு அடைக்கலம் வழங்கி ஊர்தியாக ஏற்றுக்
கொண்டதைப் போலவே என்னையும்
இசைந்து ஆட் கொள்க

# 2. பன்னிரு திருமுறை

## ஆ. தேவாரம்

கள்ளி முதுகாட்டில் ஆடி கண்டாய் காலனையும்
காலால் கடந்தான் கண்டாய்
புள்ளி உழை மானின் தோலான் கண்டாய் புலி
உரிசேர் ஆடைப் புனிதன் கண்டாய்
வெள்ளி மிளிர் பிறை முடிமேல் சூடி கண்டாய்
வெண் நீற்றான் கண்டாய் நம் செந்தில் மேய
வள்ளி மணாளற்குத் தாதை கண்டாய்-மறைக்காட்டு
உறையும் மணாளன் தானே.

❖❖❖❖

மூரி முழங்கு ஒலிநீர் ஆனான் கண்டாய்
முழுத்தழல் போல் மேனி முதல்வன் கண்டாய்
ஏரி நிறைந்தனைய செல்வன் கண்டாய் இன்
அடியார்க்கு இன்பம் விளைவிப்பான் கண்டாய்
ஆரியன் கண்டாய் தமிழன் கண்டாய்
அண்ணாமலை உறையும் அண்ணல் கண்டாய்
வாரி மதகளிறே போல்வான்
கண்டாய்-மறைக்காட்டு உறையும் மணாளன் தானே.

## ஆ. திருவாசகம்

விச்சு அது இன்றியே விளைவு செய்குவாய்
விண்ணும் மண்ணகம் முழுதும் யாவையும்
வைச்சு வாங்குவாய் வஞ்சகம் பெரும்
புலையனேனை உன்கோயில் வாயிலில்
பிச்சன் ஆக்கினை பொய்யீ அன்பருக்கு
உரியன் ஆக்கினாய் தாம் வளர்த்தது ஓர்
நச்சு மாமரம் ஆயினும் கொலார்
நானும் அங்ஙனே உடைய நாதனே

## இ. முதல் திருமுறை

### கீழைத்திருக்காட்டுப்பள்ளி *(பதிகம் எண் : 05)*

**பண்: நட்டபாடை**

செய்யரு கேபுனல் பாயவோங்கிச் செங்கயல் பாயச் சிலமலர்த்தேன்
கையரு கேகனி வாழையீன்று கானலெல் லாங்கமழ் காட்டுப்பள்ளிப்
பையரு கேயழல் வாயவைவாய்ப் பாம்பணை யான்பணைத் தோளிபாகம்
மெய்யரு கேயுடை யானையுள்கி விண்டவ ரேறுவர் மேலுலகே.

### திருஇடும்பாவனம் *(பதிகம் எண்: 17)*

**பண்: நட்டபாடை**

மனமார்தரு மடவாரொடு மகிழ்மைந்தர்கள் மலர்தூய்த்
தனமார்தரு சங்கக்கடல் வங்கத்திர ளுந்திச்
சினமார்தரு திறல்வாளெயிற் றரக்கன்மிகு குன்றில்
இனமாதவ ரிறைவர்க்கிடம் இடும்பாவன மிதுவே.

### திருவாலங்காடு *(பதிகம் எண்: 45)*

**பண்: தக்கராகம்**

துஞ்சவருவாருந் தொழுவிப்பாரும் வழுவிப்போய்
நெஞ்சம்புகுந்தென்னை நினைவிப்பாரு முனைநட்பாய்
வஞ்சப்படுத்தொருத்தி வாணாள்கொள்ளும் வகைகேட்
டஞ்சும்பழையனூ ராலங்காட்டெம் அடிகளே.

## ஈ. இரண்டாம் திருமுறை

### திருநாகேச்சுரம் *(பதிகம் எண்: 24)*

**பண்: இந்தளம்**

பொன்நேர் தருமே னியனே புரியும்
மின்நேர் சடையாய் விரைகா விரியின்
நன்னீர் வயல்நா கேச்சுர நகரின்
மன்னே யெனவல் வினைமாய்ந் தறுமே.

## 3. நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்

### அ. திருப்பாவை

நோற்றுச் சுவர்க்கம் புகுகின்ற அம்மனாய்
மாற்றமும் தாராரோ? வாசல் திறவாதார்
நாற்றத் துழாய்முடி நாராயணன் நம்மால்
போற்றப் பறைதரும் புண்ணியனால் பண்டுஒருநாள்
கூற்றத்தின் வாய்வீழ்ந்த கும்பகரணனும்
தோற்றும் உனக்கே பெருந்துயில் தான் தந்தானோ?
ஆற்ற அனந்தலுடையாய் அருங்கலமே
தேற்றமாய் வந்து திறவேலோ ரெம்பாவாய்

## 4. லலிதாம்பாள் சோபனம்

ஹத்தி திருட்டு 'ஹிம்சை பானம் பரதாரம்
அஞ்சும் பஞ்ச மஹாபாதகமாம்

❖❖❖❖

புஷ்பம் பன்னீர்களைச் சொரியவே தேவர்கள்
புகழ்ந்து சகிகள் வெண்சாமரம் வீச
அப்பொழுது தேவி சக்தி சேனையுடன்
ஆலயத்தை அம்மன் வந்தடைந்தாள்

## 5. தமிழ்த் தாய் வாழ்த்து

நீராரும் கடல் உடுத்த நில மடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரதக் கண்டமிதில்
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிட நல் திருநாடும்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறும் திலகமுமே!
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற,
எத்திசையும் புகழ்மணக்க இருந்த பெரும் தமிழணங்கே!
தமிழணங்கே!
உன் சீரிளமைத் திறம்வியந்து
செயல் மறந்து வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே!

## 6. பாரதியார் பாடல்கள்

குன்றத்தின் மீதே – அந்தக்
குன்றத்தின் மீதே – தனி
நின்ற தோர் ஆலநெடுமரங் கண்டேன்

பொன்மரத் தின்கீழ் – அந்தப்
பொன்மரத் தின்கீழ் – வெறுஞ்
சின்மய மானதோர் தேவன் இருந்தனன்

இந்தப் புவிதனில் வாழும் மரங்களும்
இன்ப நறுமலர்ப் பூஞ்செடிக் கூட்டமும்
அந்த மரங்களைச் சூழ்ந்த கொடிகளும்
ஔடத மூலிகை பூண்டுபுல் யாவையும்
எந்தத் தொழில் செய்து வாழ்வனவோ?

அக்கினி குஞ்சொன்று கண்டேன் – அதை
அங்கொரு காட்டிலோர் பொந்திடை வைத்தேன்

தத்தரிகிட தத்தரிகிட தித்தோம்
தக தத்தரிகிட தத்தரிகிட தித்தோம்

வெந்து தணிந்தது காடு
தழல் வீரத்தில் குஞ்சென்றும் மூப்பென்றும் உண்டோ?

வெட்டி அடிக்குது மின்னல்
கடல் வீரத் திரைகொண்டு விண்ணை இடிக்குது
கொட்டி இடிக்குது மேகம்
கூ கூவென்று விண்ணை குடையுது காற்று
சட்ட் சட சட்ட் சட டட்டா
சட்ட் சட சட்ட் சட டட்டா
என்று தாளங்கள் கொட்டி கணைக்குது வானம்;
தாளம்கொட்டி கணைக்குது வானம்,

அக்கினி குஞ்சொன்று கண்டேண்......... அதை
அங்கொரு காட்டிலொர் பொந்திடைவைத்தேன்!

தத்தரிகிட தத்தரிகிட தித்தோம்
தக தத்தரிகிட தத்தரிகிட தித்தோம்

**வண்டிக்காரன் பாட்டு**

**அண்ணனுக்கும் தம்பிக்கும் சம்பாஷணை**

“காட்டு வழிதனிலே-அண்ணே!
கள்ளர் பயமிருந்தால்?”–எங்கள்
வீட்டுக் குலதெய்வம்–தம்பி
வீரம்மை காக்குமடா!”
“நிறுத்து வண்டி யென்றே–கள்ளர்
நெருக்கிக் கேட்கையிலே?’–“எங்கள்
கறுத்த மாரியின் பேர்–சொன்னால்
காலனும் அஞ்சுமடா!”.

## 7. அபிராமி அந்தாதி

திங்கட் பகவின் மணம் நாறும்
சீறடி சென்னிவைக்க
எங்கட்(கு) ஒருதவம் எய்திய வாளண்
ணிறந்த விண்ணோர்

## 8. கோளறு திருப்பதிகம்

வேய் உறு தோளி பங்கன் விடம் உண்ட கண்ட
மிக நல்ல வீணை தடவி
மாசு அறு திங்கள் கங்கை முடிமேல் அணிந்து
உளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி
சனி பாம்பு இரண்டும் உடனே
ஆசு அறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே!

## 9. கம்பராமாயணம்

கீண்டது வேலை நல் நீர் கீழ் உறங்கிக் கிடந்த நாகர்
வேண்டிய உலகம் எல்லாம் வெளிப்பட மணிகள் மின்ன
ஆண் தகை அதனை நோக்கி அரவினுக்கு அரசன் வாழ்வும்
காண்தகு தவத்தென் ஆனேன் யான்! எனக் கருத்துள் கொண்டான்

## 10. திரு அருட்பா

கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளும் வகை கிடைத்த
குளிர்தருவே தருநிழலே நிழல்கனிந்த கனியே
ஓடையிலே ஊறுகின்ற தீஞ்சுவைத்தண் ணீரே
உகந்த தண்ணீர் இடைமலர்ந்த சுகந்தமண் மலரே
மேடையிலே வீசுகின்ற மெல்லியபூங் காற்றே
மென்காற்றில் விளைசுகமே சுகத்திலுறும் பயனே
ஆடையிலே எனைமணந்த மணவாளா பொதுவில்
ஆடுகின்ற அரசேஎன் அலங்கல் அணிந்திருளே

## 11. சித்தர் பாடல்கள்

ஐந்துதலை நாகமடி .....அகப்பேய்
ஆதாயங் கொஞ்சமடி
இந்த விடந்தீர்க்கும் .....அகப்பேய்
எம் இறை கண்டாயே.

❖❖❖❖

அக்கினியாற் பஞ்சுபொதி அழிந்திட்ட வாறேபோல்
பக்குவநல் அறிவாலே பாவம்போம் மடவனமே.

❖❖❖❖

தோப்பிலே மாங்குயில் கூப்பிடு தேபுது
மாப்பிள்ளை தான்வந்து சாப்பிடவும்
ஏய்க்கு மிப்படி யஞ்சா றாந்தைஇருந்து
விழிப்பது பாருங்கடி வாலைப்பெண்ணே

## 12. கந்தர் அனுபூதி

வினையோட விடுங் கதிர்வேல் மறவேன்
மனையோடு தயங்கி மயங்கிடவோ
சுனையோ டருவித் துறையோடு பசுந்
தினையோ டிதனோடு திரிந்தவனே

❖❖❖❖

# வகுப்பு - IV

## 1. ஔவையார் பாடல்கள்

### அ. விநாயகர் அகவல்

புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரியெட்டு நிலையும் தெரிசனப் படுத்தி
கருத்தினிற் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி இனிதெனக் கருளி
என்னை அறிவித் தெனக்கருள் செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்தே
வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கியே என்றான் சிந்தை தெளிவித்து
இருள்வெளி யிரண்டிற் கொன்றிட மென்ன
அருள் தரும் ஆனந்த மளித்து என் செவியில்

❖❖❖❖

எல்லை இல்லா ஆனந்தமளித்து
அல்லல் களைந்தே அருள்வழி காட்டிச்
சத்தத்தின் னுள்ளே சதாசிவம் காட்டிச்
சித்தத்தின் னுள்ளே சிவலிங்கங் காட்டிச்
அணுவிற் கணுவாய் அப்பாலுங் கப்பாலாய்க்
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலையறிவித்துத்
தத்துவ நிலையைத் தன்தெனை ஆண்ட வித்தக
விநாயக விரைகழல் சரணே.

❖❖❖❖

# 2. பன்னிரு திருமுறை

## அ. திருத்தொண்டர்புராணம்

தாவில் செம்மணி யருவிய றிழிவன சாரல்
பூவில் வண்டினம் புதுநற வருந்துவ புறம்
வாவி நீள்கயல் வரம்பிற வுகைப்பன மருதம்
நீவி நித்திலம் பரத்திய ருணக்கவ நெய்தல்

குறவர் பன்மணி யரித்திதை விதைப்பன குறிஞ்சி
கறவை யானிரை மானுடன் பயில்வன கானம்
பறவை தாமரை யிருந்திற வருந்துவ பழனஞ்
சுறவ முண்மருப் பணங்கயர் வனகழிச் சூழல்

குழல் செய் வண்டினங் குறிஞ்சி யாழ் முரல்வன குறிஞ்சி
முழவு கார்கொள முல்லைகள் முகைப்பன முல்லை
மழலை மென்கிளி மருதமர் சேக்கைய மருதம்
நிழல் செய் கைதைசூழ் நெய்தலங் கழியன நெய்தல்

அங்கண் வான்மிசை அரம்பையார் கருங்குழர் சுரும்பு
பொங்கு பூண் முலைக் கொடிச்சியார் குழன் மூழ்கிப்போகாச்
செங்கண் மால்விடையார் திருக்காளத்தி யென்னும்
மங்குல் சூழ்வரை நிலவிய வாழ்வினான் மல்கும்

கோலமுல்லையுங் குறிஞ்சியு மடுத்த சில்லிடங்கள்
நீல வாட்படை நீலி கோட்டங்களு நிரந்து
கால வேணிலிற் கடும் பகற் பொழுதினைப் பற்றிப்
பாலையுஞ் சொல லாவன வுளபரன் முரம்பு

## ஆ. தேவாரம்

### திருநாவுக்கரசர் தேவாரம் (4ஆம் திருமுறை) திருப்பயற்றூர் தலம்

**“திருச்சிற்றம்பலம்”**

தந்தையாய்த் தாயுமாகித், தரணியாய், தரணி உள்ளார்க்கு
எந்தையும் என்ன நின்ற ஏழ் உலகு உடனுமாகி
எந்தை எம்பிரானே என்று என்று உள்குவார் உள்ளத்து என்றும்
சிந்தையும் சிவமும் ஆவார் திருப்பயற்றூரனாரே

## இ. நான்காம் திருமுறை

### பொது

விரிகதிர் ஞாயி றல்லர் மதியல்லர் வேத
விதியல்லர் விண்ணு நிலனும்
திரிதரு வாயு வல்லர் செறுதீயு மல்லர்
தெளிநீரு மல்லர் தெரியில்
அரிதரு கண்ணி யாளை யொருபாக மாக
வருள்கார ணத்தில் வருவார்
எரியர வார மார்ப ரிமையாரு மல்ல
ரிமைப்பாரு மல்ல ரிவரே.

### திருப்பழனம்

**பண் : பழந்தக்கராகம்**

புதியையா யினையையாம்
பூந்தென்றால் புறங்காடு
பதியாவ திதுவென்று
பலர்பாடும் பழனத்தான்
மதியாதார் வேள்விதனை
மதித்திட்ட மதிகங்கை
விதியாள னென்னுயிர்மேல்
விளையாடல் விடுத்தானோ.

**திருவாரூர்** **பண் : சீகாமரம்**

சூலப் படையானைச் சூழாக வீழருவிக்
கோலத்தோட் குங்குமஞ்சேர் குன்றெட் டுடையானைப்
பாலொத்த மென்மொழியாள் பங்கனைப் பாங்காய
ஆலத்தின் கீழானை நான்கண்ட தாரூரே.

**கோயில்** **பண் : கொல்லி**

ஓருடம் பிருவ ராகி
யொளிநிலா வெறிக்குஞ் சென்னிப்
பாரிடம் பாணி செய்யப்
பயின்றவெம் பரம மூர்த்தி
காரிடந் தில்லை தன்னுட்
கருதுசிற் றம்ப லத்தே
பேரிடம் பெருக நின்று
பிறங்கெரி யாடு மாறே.

## ஈ. முதல் திருமுறை

**திருவேணுபுரம்** – *(பதிகம் எண்: 09)* **பண்: நட்டபாடை**

வண்டார்குழ லரிவையொடு பிரியாவகை பாகம்
பெண்டான்மிக வானான்பிறைச் சென்னிப்பெரு மானூர்
தண்டாமரை மலராளுறை தவளந்நெடு மாடம்
விண்டாங்குவ போலும்மிகு வேணுபுர மதுவே.

## உ. இரண்டாம் திருமுறை

**திருநல்லூர்** *(பதிகம் எண்: 57)* **பண்: காந்தாரம்**

அலைமல்கு தண்புனலும் பிறையுஞ்சூடி யங்கையில்
கொலைமல்கு வெண்மழுவு மனலுமேந்துங் கொள்கையீர்
சிலைமல்கு வெங்கணையாற் புரமூன்றெரித்தீர் திருநல்லூர்
மலைமல்கு கோயிலே கோயிலாக மகிழ்ந்தீரே.

## 3. திரு அருட்பா

கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளும் வகை கிடைத்த
குளிர்தருவே தருநிழலே நிழல்கனிந்த கனிவே
ஓடையிலே ஊறுகின்ற தீஞ்சுவைத்தண் ணீரே
உகந்த தண்ணீர் இடைமலர்ந்த சுகந்தமண மலரே
மேடையிலே வீசுகின்ற மெல்லியபூங் காற்றே
மென்காற்றில் விளைசுகமே சுகத்திலுறும் பயனே
ஆடையிலே எனைமணந்த மணவாளா பொதுவில்
ஆடுகின்ற அரசேஎன் அலங்கல் அணிந்திருளே

## 4. நாலாயிரத் திவ்யப் பிரபந்தம்

### அ. பொய்கையாழ்வார்

வையம் தகளியா வார்கடலே நெய்யாக
வெய்ய கதிரோன் விளக்காகச் – செய்ய
சுடராழியான் அடிக்கே சூட்டினேன் சொன்மாலை
இடராழி நீங்குகவே என்று.

### ஆ. நாலாயிரத் திவ்யப் பிரபந்தம்

சிறியார் பெருமை சிறிதின்க – ணெய்தும்,
அறியாரும் தாமறியா ராவர் – அறியாமை
மண்கொண்டு மண்ணுண்டு மண்ணுமிழ்ந்த மாயனென்று
கொண்டேன் னெஞ்சே. இரு.

சென்ற திலங்கைமேல் செவ்வேதன் சீற்றத்தால்,
கொன்ற திராவணனைக் கூறுங்கால் – நின்றதுவும
வேயோங்கு தண் சாரல் வேங்கடமே, விண்ணவர்தம
வாயோங்கு தொல்புகழான் வந்து.

உணர்ந்தாய் மறைநான்கும் ஓதினாய் நீதி
மணந்தாய் மலர்மகள்தோள் மாலே – மணிந்தாய்போய
வேயிருஞ் சாரல் வியவிரு ஞாலம்சூழ்,
மாயிருஞ் சோலை மலை

வந்தித் தவனை வழிநின்ற ஐம்பூதம்
ஐந்தும் அகத்தடக்கி யகர்வமாய் – உந்திப்
படியமரர் வேலையான் பண்டமரர்க் கீந்த,
படியமரர் வாழும் பதி.

## 5. கம்பராமாயணம்

உரும் முறை அனந்த கோடி உதிர்த்தன ஊழிநாளின்
இருமுறை காற்றிச் சீறி எழுந்தது விரிந்தது எங்கும்
கருமுறை நிறைந்த மேகம் கான்ற கல்லின் மாறி
பொரு முறை மயங்கிச் சுற்றும் இரியலி கலிகள் போன

❖❖❖❖

தாது உகு சோலைதோறும் சண்பகக் காவுதோறும்
போது அவிழ் பொய்கைதோறும் புதுமணல் தடங்கள் தோறும்
மாதவி வேலிப் பூக வனம்தோறும் வயல்கள் தோறும்
ஓதிய உடம்பு தோறும் உயிர் என உலாயது அன்றே,

## 6. கந்தர் அநுபூதி

வானோ புனல்பார் கனல்மா ருதமோ
ஞானோதயமோ நவில்நான் மறையோ
யானோ மனமோ எனைஆண்டஇடம்
தானோ பொருள்ஆ வதுசண் முகனே

❖❖❖❖

சிங்கா ரமடந்தையர்தீ நெறிபோய்
மங்கா மல்எனக் குவரம் தருவாய்
சங்கிரா மசிகா வலசண்முகனே
கங்கா நதிபாலகிருபா கரனே

## 7. கந்தர் அலங்காரம்

ஆற்றைப் பணியை யிதழியைத் தும்பையை யம்புலியின்
கீற்றைப் புனைந்த பெருமான் குமாரன்க்ரு பாகரனே

## 8. திருவிளக்கு ஸ்தோத்ரம்

விளக்கே திருவே வேந்தன் உடன் பிறப்பே
ஜோதி விளக்கே ஸ்ரீதேவி பெண்மணியே
அந்தி விளக்கே அலங்கார கண்மணியே
காஞ்சி விளக்கே காமாட்சி தாயாரே

பசும்பொன் விளக்கு வைத்து பஞ்சு திரி போட்டு
குளம் போல் நெய்யை விட்டு கோலமுடன் ஏற்றி வைத்தேன்
பொட்டு மிட்டேன் குங்குமத்தால் பூமாலை சூட்டி வைத்தேன்
ஏற்றினேன் நெய் விளக்கு எந்தன் குடி விளங்க

வைத்தேன் திருவிளக்கை மாளிகையில் தான் விளங்க
மாளிகையில் ஜோதி உள்ள மாதாவை கண்டு கொண்டேன்
மாங்கல்ய பிச்சை மடி பிச்சை தாரும் அம்மா
சந்தான பிச்சையுடன் தனங்களையும் தாரும் அம்மா

பெட்டி நிறைய பூஷணங்கள் தாரும் அம்மா
கொட்டகை நிறைய பசு மாடு தாரும் அம்மா
புகழுடம்பை தந்து எந்தன் பக்கத்தில் நில்லும் அம்மா
அகதழிவை தந்து எந்தன் அகத்தினிலே வாழும் அம்மா

சேவி தொழுதுநின்றேன் தேவி வடிவம் கண்டேன்
வஜ்ர கிரீடம் கண்டேன் வைடூர்ய மேனி கண்டேன்
முத்து கொண்டை கண்டேன் முழு பச்சை மாலை கண்டேன்
சவுரி முடி கண்டேன் தாழைமடல் சூழ கண்டேன்

## 9. லலிதாம்பாள் சோபனம்

தரணியில் ஒன்பதும் சமுத்திரத்தில் ஏழும்
தேவிக்குப் பதினாறு ஸ்ரீபுரங்கள்

❖❖❖❖

சிந்தாமணிக்கிருஹம் சிந்தாமணிச்சுவர்
சுற்றிலும் தீபங்கள் சோபனம் சோபனம்

## 10. பாரதியார் பாடல்கள்

காணி நிலம் வேண்டும் – பராசக்தி
காணி நிலம் வேண்டும் – அங்கு
தூணில் அழகியதாய்– நல் மாடங்கள்
துய்ய நிறத்தினவாய் – அந்தக்
காணி நிலத்தினிடையே – ஓர் மாளிகை
கட்டித் தரவேண்டும் – அங்குக்
கேணியருகினிலே – தென்னைமரம்
கீற்று மிள நீரும்
பத்துப் பன்னிரண்டு – தென்னைமரம்
பக்கத்திலே வேணும் – நல்ல
முத்துச் சுடர்போல – நிலவொளி
முன்பு வரவேணும் – அங்கு
கத்துக் குயிலோசை – சற்றே வந்து
காதிற் படவேணும் – என்றன்
சித்தம் மகிழ்ந்திடவே – நன்றாயிளந்
தென்றல் வரவேணும்
பாட்டுக் கலந்திடவே – அங்கேயொரு
பத்தினிப் பெண்வேணும் – எங்கள்
கூட்டுக் களியினிலே – கவிதைகள்
கொண்டுதர வேணும் – அந்தக்
காட்டு வெளியினிலே – அம்மா நின்றன்
காவலுறவு வேணும் – என்றன்
பாட்டுத் திறத்தாலே – இவ்வையத்தைப்
பாலித்திட வேணும்.

## 11. சித்தர் பாடல்கள்

விந்து நாதமடி .....அகப்பேய்
மெய்யாக வந்ததடி
ஐந்து பெரும்பூதம் .....அகப்பேய்
அதனிடம் ஆனதடி.

❖❖❖❖

பூமியெல்லாம்ஓர் குடைக்கீழ்ப் பொருந்த அரசாளுதற்குக்
காமியம்வைத்தால் உனக்குக் கதியுளதோ கல்மனமே!

❖❖❖❖❖

குளவிபுழு வைக்கொணர்ந்து கூட்டில் உருப்படுத்தல்போல்
வளமுடைய வன்மனத்தை வசப்படுத்து மடவனமே.

## 12. திருவெம்பாவை

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும்
சோதியை யாம் பாடக் கேட்டேயும் வாள் தடங்கண்

❖❖❖❖❖

வேதம்முதல் விண்ணோரும் மண்ணும் துதித்தாலும்
ஓத உலவா ஒரு தோழன் தொண்டர்உளன்!

## 13. திருப்பள்ளியெழுச்சி

ஓவின தாரகை யொளிஒளி உதயத்து
ஒருப்படு கின்றது விருப்பொடு நமக்குத்
தேவ! நற் செறிகழல் தாளிணை காட்டாய்!
திருப்பெருந் துறையுறை சிவபெருமானே!

புவனியிற் போய்ப்பிற வாமையின் நாள்நாம்
போக்குகின் றோம்அவ மேஇந்தப் பூமி
சிவனுய்யக் கொள்கின்ற வாறென்று நோக்கித்
திருப்பெருந் துறையுறை வாய்திரு மாலாம்

## 14. கோளறு திருப்பதிகம்

வேயுறு தோளி பங்கன் விடமுண்ட கண்டன்
　　மிக நல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமேல் அணிந்து என்
　　உளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி
　　சனி பாம்பிரண்டும் உடனே
ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
　　அடியார் அவர்க்கு மிகவே.

# 15. தமிழ்த்தாய் வாழ்த்து

நீராரும் கடல் உடுத்த நில மடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரதக் கண்டமிதில்
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிட நல் திருநாடும்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறும் திலகமுமே!
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற,
எத்திசையும் புகழ்மணக்க இருந்த பெரும் தமிழணங்கே!
தமிழணங்கே!
உன் சீரிளமைத் திறம்வியந்து
செயல் மறந்து வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே!

# பெண்மையைப் போற்றுதல்

# வகுப்பு - V

## 1. ஔவையார் பாடல்கள்

### அ. விநாயகர் அகவல்

சீதக் களபச் செந்தா மரைபூம்
பாதச் சிலம்பு பலஇசை பாடப்
பொன் அரை ஞாணும் பூந்துகி லாடையும்
வன்ன மருங்கில் வளர்ந்தழ கெறிப்பப்
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்
வேழ முகமும் விளங்குசிந் தூரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சிற் குடிகொண்ட நீலமேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்.

❖❖❖❖

இரண்டு செவியும் இலங்கு பொன் முடியும்
திரண்ட முப்புரி நூல் திகழொளி மார்பும்
சொற்பதங் கடந்த தூயமெய் ஞான
அற்புதன் ஈன்ற கற்பகக் களிறே
முப்பழம் நுகரும் மூஷிக வாகன
இப்பொழு தென்னை யாட்கொள வேண்டித்
தாயாய் எனக்கு தானெழுந் தருளி
மாயாப் பிறவி மயக்க மறுத்தே
திருந்திய முதலைந் தெழுத்துந் தெளிவாய்
பொருந்தவே வந்தேன் உளந்தனிற் புகுந்து.

# 2. பன்னிரு திருமுறை

## அ, திருமந்திரம்

கண்டெண்டிசையும் கலந்து வருங்கன்னி
பண்டெண்டிசையும் பராசத்தியாய் நிற்கும்
விண்டெண்டிசையும் விரைமலர் கைக் கொண்டு
தொண்டெண்டிசையும் தொழ நின்ற கன்னியே!

ஏடங்கை நங்கை  இறை எங்கள் முக்கண்ணி
வேடம் படிகம்  விரும்பும் வெண் தாமரை
பாடும் திருமுறை பார்ப்பதி பாதங்கள்
சூடுமின் சென்னி வாய்த் தோத்திரம் சொல்லுமே

## ஆ. பெரிய புராணம்
## 12-ஆம் திருமுறை-மங்கையர்க்கரசி வரலாறு

**“திருச்சிற்றம்பலம்**

மங்கையர்க்குத் தனியரசி எங்கள் தெய்வம்
வளவர் கோன் திருக்குலக் கொழுந்து வளைக்கை மானி
செங்கமலத் திரு மடந்தை கன்னி நாடாள்
தென்னர் குல பழி தீர்த்த தெய்வப் பாவை
எங்கள் பிரான் சண்டையர்க்கோன் அருளினாலே
இருந்த தமிழ் நாடுற்ற இடர் நீக்கித்
தங்கள் பொங்கொளி வெண் திருநீறு பரப்பினாரைப்
போற்றுவார் கழல் எம்மால் போற்றலாமே!
திருச்சிற்றம்பலம்

## இ. நான்காம் திருமுறை

**திருவாரூர்** **பண் : காந்தாரம்**

கொம்புநல் வேனி லவனைக்
குழைய முறுவல்செய் தானும்
செம்புநல் கொண்டெயின் மூன்றுந்
தீயெழக் கண்சிவந் தானும்
வம்புநற் கொன்றையி னானும்
வாட்கண்ணி வாட்டம தெய்த
அம்பர வீருரி யானு
மாரூ ரமர்ந்தவம் மானே.

**திருக்கழிப்பாலை** **பண் : காந்தாரம்**

வனபவள வாய்திறந்து வானவர்க்குந்
தானவனே யென்கின் றாளாற்
சினபவளத் திண்டோண்மேற் சேர்ந்திலங்கு
வெண்ணீற்ற னென்கின் றாளால்
அன்பவள மேகலையொ டப்பாலைக்
கப்பாலா னென்கின் றாளால்
கனபவளஞ் சிந்துங் கழிப்பாலைச்
சேர்வானைக் கண்டாள் கொல்லோ.

**திருக்கச்சியேகம்பம்** **பண் : காந்தாரம்**

தேனோக்குங் கிளிமழலை
யுமைகேள்வன் செழும்பவளம்
தானோக்குந் திருமேனி
தழலுருவாஞ் சங்கரனை
வானோக்கும் வளர்மதிசேர்
சடையானை வானோர்க்கும்
ஏனோர்க்கும் பெருமானை
யென்மனத்தே வைத்தேனே.

## பொது

**பண் : ''சிவனெனுமோசை''- பியந்தைக் காந்தாரம்**

விரிகதிர் ஞாயி றல்லர் மதியல்லர் வேத
விதியல்லர் விண்ணு நிலனும்
திரிதரு வாயு வல்லர் செறுதீயு மல்லர்
தெளிநீரு மல்லர் தெரியில்
அரிதரு கண்ணி யாளை யொருபாக மாக
வருள்கார ணத்தில் வருவார்
எரியர வார மார்ப ரிமையாரு மல்ல
ரிமைப்பாரு மல்ல ரிவரே.

## திருக்கெடிலவாணர் — பண் : காந்தார பஞ்சமம்

ஏறின ரேறினை யேழை தன்னொரு
கூறினர் கூறினர் வேத மங்கமும்
ஆறின ராறிடு சடையர் பக்கமும்
கீறின வுடையினர் கெடில வாணரே.

# ஈ. முதல் திருமுறை

## திருவேட்களம் - *(பதிகம் எண்: 039)* — பண்: தக்கராகம்

அந்தமுமாதியு மாகியவண்ணல் ஆரழலங்கை யமர்ந்திலங்க
மந்தமுழவ மியம்ப மலைமகள் காணநின்றாடிச்
சந்தமிலங்கு நகுதலைகங்கை தண்மதியம் மயலேததும்ப
வெந்தவெண் ணீறுமெய்பூசும் வேட்கள நன்னகராரே.

# உ. இரண்டாம் திருமுறை

## 1. திருவையாறு *(பதிகம் எண்: 006)* — பண்: இந்தளம்

கூறு பெண்ணுடை கோவண முண்பது வெண்டலை
மாறி லாருங்கொள் வாரிலை மார்பில் அணிகலம்
ஏறு மேறித் திரி வ ரிமை யோர்தொழு தேத்தவே
ஆறு நான்குஞ்சொன் னானுமை யாறுடை யையனே.

## ஊ. மூன்றாம் திருமுறை

**திருப்புகலி** *(பதிகம் எண்: 007)*

**பண்: காந்தார பஞ்சமம்**

கண்ணுத லானும்வெண் ணீற்றினா னுங்கழ லார்க்கவே
பண்ணிசை பாடநின் றாடினா னும்பரஞ் சோதியும்
புண்ணிய நான்மறை யோர்களேத் தும்புக லிந்நகர்ப்
பெண்ணினல் லாளொடும் வீற்றிருந் தபெரு மானன்றே.

# 3. நாலாயிரத் திவ்யப் பிரபந்தம்

## அ. திருப்பாவை

அன்ன வயற்புதுவை ஆண்டாள் அரங்கற்கு(ப்)
பன்னுதிருப்பாவை(ப்) பல்பதியம்
இன்னிசையால் பாடிக்கொடுத்தாள் நற்பாமாலை
பூமாலை சூடி(க்) கொடுத்தாளை(ச்) சொல்லு

சூடி(க்) கொடுத்த சுடர்(க்) கொடியே தொல்பாவை
பாடி அருளவல்ல பல்வளையாய்
நாடி நீ வேங்கடவற்கு என்னை விதி ஒன்ற இம்மாற்றம்
நாங்கடவா வண்ணமே நல்கு,

வையத்து வாழ்வீர்காள் நாமும் நம்பாவைக்கு(ச்)
செய்யும் கிரிசைகள் கேளீரோ பாற்கடலுள்
பைய(த்) துயின்ற பரமனடி பாடி
நெய்யுண்ணோம் பாலுண்ணோம் நாட்காலே நீராடி
மையிட்டு எழுதோம் மலரிட்டு நாம் முடியோம்
செய்யாதன செய்யோம் தீக்குறளை(ச்) சென்றோதோம்
ஐயமும் பிச்சையும் ஆந்தனையும் கை காட்டி
உய்யுமாறெண்ணி உகந்தேலோர் எம்பாவாய்

## 4. அபிராமி அந்தாதி

கோமள வல்லியை அல்லியந்
தாமரைக் கோயில்வைகும்
யாமள வல்லியை ஏதம்
இலாளை எழுதரிய
சமாள மேனிச் சகலக
லாமயில் தன்னைத் தம்மால்
ஆமள வும்தொழு வார்எழு
பாருக்கும் அதிபரே.

## 5. திருவிளக்கு ஸ்தோத்ரம்

விளக்கே திருவே வேந்தன் உடன் பிறப்பே
ஜோதி விளக்கே ஸ்ரீதேவி பெண்மணியே
அந்தி விளக்கே அலங்கார கண்மணியே
காஞ்சி விளக்கே காமாட்சி தாயாரே

பசும்பொன் விளக்கு வைத்து பஞ்சு திரி போட்டு
குளம் போல் நெய்யை விட்டு கோலமுடன் ஏற்றி வைத்தேன்
பொட்டு மிட்டேன் குங்குமத்தால் பூமாலை சூட்டி வைத்தேன்
ஏற்றினேன் நெய் விளக்கு எந்தன் குடி விளங்க

வைத்தேன் திருவிளக்கை மாளிகையில் தான் விளங்க
மாளிகையில் ஜோதி உள்ள மாதாவை கண்டு கொண்டேன்
மாங்கல்ய பிச்சை மடி பிச்சை தாரும் அம்மா
சந்தான பிச்சையுடன் தனங்களையும் தாரும் அம்மா

பெட்டி நிறைய பூஷணங்கள் தாரும் அம்மா
கொட்டகை நிறைய பசு மாடு தாரும் அம்மா
புகழுடம்பை தந்து எந்தன் பக்கத்தில் நில்லும் அம்மா
அகதழிவை தந்து எந்தன் அகத்தினிலே வாழும் அம்மா

சேவி தொழுதுநின்றேன் தேவி வடிவம் கண்டேன்
வஜ்ர கிரீடம் கண்டேன் வைடூர்ய மேனி கண்டேன்
முத்து கொண்டை கண்டேன் முழு பச்சை மாலை கண்டேன்
சவுரி முடி கண்டேன் தாழைமடல் சூழ கண்டேன்

## 6. பாரதியார் பாடல்கள்

ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால்
    அறிவி லோங்கிஇவ் வையம் தழைக்குமாம்
பூணு நல்லறத் தோடிங்கு பொண்ணுருப்
    போந்து நிற்பது தாய்சிவ சக்தியாம்
நாணமும் அச்சமும் நாய்கட்கு வேண்டுமாம்
    ஞான நல்லறம் வீர சுதந்திரம்
பேணு நற்குடிப் பெண்ணின் குணங்களாம்
    பெண்மைத் தெய்வத்தின் பேச்சுகள் கேட்டிரோ,

### காளி ஸ்தோத்திரம்

யாதுமாகி நின்றாய்–காளி!–எங்கும் நீதி றைந்தாய்;
தீது நன்மையெல்லாம்–நின்தன்–செயல்க ளன்றி யில்லை.
போதும் இங்கு மாந்தர்–வாழும்–பொய்மை வாழ்க்கை யெல்லாம்
ஆதிசக்தி,தாயே!–என் மீ–தருள் புரிந்து காப்பாய்.

எந்த நாளும் நின்மேல்–தாயே!இசைகள் பாடி வாழ்வேன்;
கந்த னைப்ப யந்தாய்,–தாயே!கருணை வெள்ள மானாய்!
மந்த மாரு தத்தில்–வானில்–மலையி னுச்சி மீதில்,
சிந்தை யெங்கு செல்லும்–அங்குன்–செம்மை தோன்று மன்றே

கர்ம யோக மொன்றே–உலகில்–காக்கு மென்னும் வேதம்;
தர்ம நீதி சிறிதும்–இங்கே–தவற லென்ப தின்றி,
மர்ம மான பொருளாம்–நின்தன்–மலர டிக்கண் நெஞ்சம்,
செம்மை யுற்று நாளும்–சேர்ந்தே–தேசு கூட வேண்டும்.

## பெண்கள் விடுதலைக் கும்பி (பெண்ணுரிமை)

பெண்கள் விடுதலை பெற்ற மகிழ்ச்சிகள்
பேசிக் களிப்பொடு நாம் பாடக்
கண்களி லேயொளி போல வுயிரில்
கலந்தொளிர் தெய்வம் நற் காப்பாமே

கும்மியடி! தமிழ் நாடு முழுவதும்
குலுங்கிடக் கைகொட்டிக் கும்மியடி!
நம்மைப் பிடித்த பிசாசுகள் போயின
நன்மை கண்டோமென்று கும்மியடி! (கும்மி)

ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமையென்
றெண்ணி யிருந்தவர் மாய்ந்து விட்டார்
வீட்டுக்குள்ளே பெண்ணை பூட்டிவைப் போமென்ற
விந்தை மனிதர் தலை கவிழ்ந்தார், (கும்மி)

பட்டங்கள் ஆள்வதும். சட்டங்கள் செய்வதும்
பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்;
எட்டு மறிவினில் ஆணுகிங்கே பெண்
இளைப்பில்லை காணென்று கும்மியடி! (கும்மி)

## அம்மாக்கண்ணு பாட்டு

"பூட்டைத் திறப்பது கையாலே-நல்ல
மனந்திறப்பது மதியாலே"
பாட்டைத் திறப்பது பண்ணாலே-இன்ப
வீட்டைத் திறப்பது பெண்ணாலே.

ஏட்டைத் துடைப்பது கையாலே மன
வீட்டைத் துடைப்பது மெய்யாலே,
வேட்டை யடிப்பது வில்லாலே-அன்புக்
கோட்டை பிடிப்பது சொல்லாலே.

காற்றை யடைப்பது மனதாலே–இந்தக்
காயத்தைக் காப்பது செய்கையாலே,
சோற்றைப் புசிப்பது வாயாலே–உயிர்
துணி வுறுவது தாயோலே. (பூட்டைத்)

## 7. கந்தர் அலங்காரம்

பந்தாடு மங்கையர் செங்கயற் பார்வையிற் பட்டுழலுஞ்

சிந்தா குலந்தனைத் தீர்த்தருள் வாய்செய்ய வேல்முருகா
கொந்தார் கடம்பு புடைசூழ் திருத்தணிக் குன்றினிற்குங்
கந்தா இளங்கும ரா!அம ராவதி காவலனே!

## 8. கந்தர் அனுபூதி

கோழி யோங்கிய வென்றடு விறற்கொடி
வாழிய பெரிதென் றேத்திப் பலருடன்
சீர்திகழ் சிலம்பகம் சிலம்பப் பாடிச்
சூரர மகளிர் ஆடும் சோலை”

❖❖❖

# வகுப்பு - VI

## 1. ஔவையார் பாடல்கள்

வையகம் எல்லாம் வயலாய் வானோர்
தெய்வமா முகடு சேரி யாகக்
காணமும் முத்தும் மணியும் கலந்தொரு
கோடானு கோடி கொடுப்பினும், ஒருநாள்
ஒருபொழுது ஒருவன் ஊண்ஒழிதல் பார்க்கும்
நேர்நிலை நில்லா தென்னுமென் மனனே!

❖❖❖❖

நாடா கொன்றோ காடா கொன்றே
அவலா கொன்றே மிசையா கொன்றோ
எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை; வாழிய நிலனே!

## 2. பன்னிரு திருமுறை

### அ. பெரிய புராணம்

பாட்டு இயல் தமிழ் உரை பயின்ற எல்லையுள்
கோட்டு உயர் பனிவரைக் குன்றின் உச்சியில்
சூட்டிய வளர் புலிச் சோழர் காவிரி
நாட்டு இயல்பு அதனை யான் நவிலல் உற்றனன்

ஆதி மாதவ முனி அகத்தியன் தரு
பூத நீர்க் கமண்டலம் பொழிந்த காவிரி
மாதர் மண் மடந்தை பொன் மார்பில் தாழ்ந்தது ஓர்
ஓத நீர் நித்திலத்து தாமம் ஒக்கும் ஆல்

சைய மால் வரை பயில் தலைமை சான்றது
செய்ய பூ மகட்கு நற் செவிலி போன்றது
வையகம் பல் உயிர் வளர்த்து நாள் தொறும்
உய்யவே சுரந்து அளித்து ஊட்டும் நீரது

மாலின் உந்திச் சுழி மலர் தன் மேல் வரும்
சால்பினார் பல் உயிர் தரும் தன் மாண்பினால்
கோல நற் குண்டிகை தாங்கும் கொள்கையால்
போலும் நான் முகனையும் பொன்னி மாநதி

திங்கள் சூடிய முடிச் சிகரத்து உச்சியில்
பொங்கு வெண் தலை நுரை பொருது போதலால்
எங்கள் நாயகன் முடி மிசை நின்றே இழி
கங்கை ஆம் பொன்னி ஆம் கன்னி நீத்தமே

வண்ண நீள் வரை தர வந்த மேன்மையால்
எண்ணில் பேர் அறங்களும் வளர்க்கும் ஈகையால்
அண்ணல் பாகத்தை ஆளுடைய நாயகி
உள் நெகிழ் கருணையின் ஒழுக்கம் போன்றது.

## ஆ. இரண்டாம் திருமுறை

### திருக்கைச்சினம் *(பதிகம் எண் : 045)*

**பண்: சீகாமரம்**

பாடலார் நான்மறையான் பைங்கொன்றை பாம்பினொடும்
சூடலான் வெண்மதியந் துன்று கரந்தையொடும்
ஆடலா னங்கை யனலேந்தி யாடரவக்
காடலான் மேவியுறை கோயில் கைச்சினமே.

**திருவாக்கூர்த் தான்றோன்றிமாடம்** *(பதிகம் எண் : 042)*

**பண்: சீகாமரம்**

அக்கிருந்த வாரமும் ஆடரவும் ஆமையும்
தொக்கிருந்த மார்பினான் தோலுடையான் வெண்ணீற்றான்
புக்கிருந்த தொல்கோயில் பொய்யிலா மெய்ந்நெறிக்கே
தக்கிருந்தார் ஆக்கூரிற் றான்றோன்றி மாடமே.

**திருஅனேகதங்காவதம்** *(பதிகம் எண் : 005)* **பண்: இந்தளம்**

நீடன் மேவுநிமிர் புன்சடை மேலொர் நிலாமுளை
சூடன் மேவுமறை யின்முறை யாலொர் சுலாவழல்
ஆடன் மேவுமவர் மேயவ னேகதங் காவதம்
பாடன் மேவுமனத் தார்வினை பற்றறுப் பார்களே.

**திருச்சிக்கல்** *(பதிகம் எண் : 008)* **பண்: இந்தளம்**

வானு லாவுமதி வந்துல வும்மதின் மாளிகை
தேனு லாவுமலர்ச் சோலைமல் குந்திகழ் சிக்கலுள்
வேனல் வேளைவிழித் திட்டவெண் ணெய்ப்பெரு மானடி
ஞான மாகநினை வார்வினை யாயின னையுமே.

## 3. திருஅருட்பா

என்னுயிர்நீ என்னுயிர்க்கோர் உயிரும் நீஎன்
இன்னுயிர்க்குத் துணைவன் நீ என்னை ஈன்ற
அன்னை நீ என்னுடைய அப்ப னீஎன்
அரும்பொருள்நீ என்னிதயத் தன்பு நீஎன்
நன்னெறிநீ எனைக்குரிய உறவு நீஎன்
நற்குரு நீ எனைக்கலந்த நட்பு நீஎன்
தன்னுடைய வாழ்வு நீ என்னைக் காக்குத்
தலைவன்நீ கண்மூன்று தழைத்த தேவே.

## 4. லலிதாம்பாள் சோபனம்

நம்பினபேர்களைக் காத்திடத் தேவியல்லால்
நாட்டிலே வேறுண்டோ சோபனம் சோபனம்.

## 5. தமிழ்த்தாய் வாழ்த்து

நீராரும் கடல் உடுத்த நில மடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரதக் கண்டமிதில்
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிட நல் திருநாடும்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறும் திலகமுமே!
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற,
எத்திசையும் புகழ்மணக்க இருந்த பெரும் தமிழணங்கே!
தமிழணங்கே!
உன் சீரிளமைத் திறம்வியந்து
செயல் மறந்து வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே!

## 6. பாரதியார் கவிதைகள்

### பாரததேசம்

வெள்ளிப் பனிமலையின் மீதுலவுவோம் ; அடி
மேலைக் கடல் முழுதும் கப்பல் விடுவோம்
பள்ளித் தலமனைத்தும் கோயில் செய்குவோம்; எங்கள்
பாரத தேசமென்று தோள் கொட்டுவோம்
சிங்களத் தீவினுக்கோர் பாலம் அமைப்போம்
சேதுவை மேடுறுத்தி வீதி சமைப்போம்
வங்கத்தில் ஓடிவரும் நீரின் மிகையால்
மையத்து நாடுகளில் பயிர் செய்குவோம்,

❖❖❖❖

மானுட ஜென்மம் பெறுவதற் கரிதெனும்
வாய்மையை உணர்ந்தாரேல் – அவர்
ஊனுடல் தீயினும் உண்மை நிலைதவற
உடன்படு மாறுளதோ! (வீர)

மண்ணிலின் பங்களை விரும்பிச் சுதந்திரத்திரத்தின்
    மாண்பினை யிழப்பாரோ ?
கண்ணிரண்டும் விற்றுச் சித்திரம் வாங்கினால்
    கை கொட்டிச் சிரியாரோ! (வீர)

'வந்தே மாதரம்' என்று வணங்கிய பின்
    மாயத்தை வணங்குவரோ ?
வந்தே மாதரம் ஒன்றே தாரகம்
    என்பதை மறப்பாரோ ?

பிறந்தவர் யாவரும் இறப்பதுறுதியெனும்
    பெற்றியை அறிந்தாரேல் – மானம்
துறந்தறம் மறந்தும்பின் உயிர் கொண்டுவாழ்வது
    சுகமென்று மதிப்பாரோ ? (வீர)

## தேசபக்தி

### பாரத மாதா

முன்னை இலங்கை அரக்கர் அழிய
முடித்தவில் யாருடைவில்? – எங்கள்
அன்னை பயங்கரி பாரத தேவி நல்
ஆரிய ராணியின் வில்
இந்திர சித்தன் இரண்டு துண்டாக
எடுத்தவில் யாருடை வில்? – எங்கள்
மந்திரத் தெய்வம் பாரத ராணி
பயிரவி தன்னுடைய வில்
ஒன்று பரம்பொருள் நாம் அதன் மக்கள்
உலகின்பக் கேணி என்றே – மிக
நன்று பல்வேதம் வரைந்தகை பாரத
நாயகி தன்திருக் கை

# 7. பாரதிதாசன் கவிதைகள்

தேர்நின்ற வீதிச் செயபேரிகை முழங்கப்
போர்நின்ற வீரர் குலம் பூத்தநிலம் – பார்நின்று
அடல் வளர்த்தும் பாரதநற் புத்திரன் நான் ஆக
உடல் வளர்த்த நாடு என் உயிர்,

## ஒற்றுமைப்பாட்டு

எல்லா மதங்களும் ஒன்றே – அவை
எல்லாரும் இன்புற்று வாழ்வீர்கள் என்றே
சொல்லால் முழங்குவது கண்டீர் அவை
துன்புற்று வாழ்ந்திடச் சொல்லியதும் உண்டோ
எல்லோரும் மக்களே யாவர் – இங்
கெல்லாரும் நிகராவர் எல்லொரும் உறவோர்
எல்லாரும் ஒருதாயின் செல்வம் – இதை
எண்ணாத மக்களை மாக்களென் போமே!

❖❖❖❖

# வகுப்பு - VII

## 1. ஔவையார் பாடல்கள்

### அ. விநாயகர் அகவல்

**பாடல் வரிகள் : 16-19**

இப்பொழு(து) என்னை ஆட்கொள வேண்டித்
தாயாய் எனக்குத் தானெழுந்(து) அருளி
மாயாப் பிறவி மயக்கம் அறுத்துத்
திருந்திய முதல்ஐந் தெழுத்தும் தெளிவாய்ப்,

**பாடல் வரிகள் : 11 - 15**

இரண்டு செவியும் இலங்குபொன் முடியும்;
திரண்டமுப் புரிநூல் திகழ்ஒளி மார்பும்
சொற்பதம் கடந்த தூயமெய்ஞ் ஞான
அற்புதன் ஈன்ற கற்பகக் களிறே!
முப்பழம் நுகரும் மூஷிக வாகன!

❖❖❖❖

உவட்டா உபதேசம் புகட்டி என் செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையுங் காட்டி
ஐம்புலன் றன்னை அடக்கு முபாயம் இன்புறு கருணையின்
இனிதெனக் கருளிக்
கருவிக ளொடுக்குங் கருத்தினை யறிவித்து
இருவினை தன்னை அறுத் திருள் கடிந்து

## ஔவையார் பாடல்கள்

சிரப்பான் மணிமவுலிச் சேரமான் தன்னைச்
சுரப்பாடு யான்கேட்கப் பொன்னாடொன் றீந்தான்
இரப்பவர் என்பெறினும் கொள்வர் கொடுப்பவர்
தாமறிவார் தம்கொடையின் சீர்.

❖❖❖❖

சொல்லாம லேபெரியர் சொல்லிச்செய் வர்சிறியர்
சொல்லியுஞ் செய்யால் கயவரே – நல்ல
குலாமாலை வேற்கண்ணாய் கூறுவமை நாடில்
பலாமாவைப் பாதிரியைப் பார்.

❖❖❖❖

நூற்றுப்பத் தாயிரம் பொன்பெரினும் நூற்சீலை
நாற்றிங்கள் நாளுக்குள் நைந்துவிடும் – மாற்றலரைப்
பொன்றப் பொருடக்கைப் போர்வேல் அகளங்கா
என்றும் கிழியாதென் பாட்டு!

❖❖❖❖

காலையி லொன்றாவர் கடும்பகலி லொன்றாவர்
மாலையி லொன்றாவர் மனிதரெலாம் – சாலவே
முல்லானைப் போல முகமுமக மும்மலர்ந்த
நல்லானைக் கண்டறியோம் நாம்.

❖❖❖❖

ஆர்த்தசபை நூற்றொருவர் ஆயிரத்தொன் றாம்புலவர்
வார்த்தை பாதினா யிரத்தொருவர் – பூத்தமலர்த்
தண்டா மரைத்திருவே தாதாகோ டிக்கொருவர்
உண்டாயின் உண்டென் றறு.

❖❖❖❖

தண்டாமல் ஈவது தாளாண்மை – தண்டி
அடுத்தக்கால் ஈவது வண்மை – அடுத்தடுத்துப்
பின்சென்றால் ஈவது காற்கூலி – பின்சென்றும்
பெய்த்தன் இவனென்று போமேல், அவன்குடி
எச்சம் இறுமேல் இறு.

❖❖❖❖

வழக்குடையான் நிற்ப வலியானைக் கூடி
வழக்கை யழிவழக்குச் செய்தோன் – வழக்கிழந்தோன்
சுற்றமும் தானும் தொடர்ந்தழுத கண்ணீரால்
எச்சமிறும் என்றால் இறு.

❖❖❖❖

சென்றுழு துன்பதற்குச் செய்வ தரிதென்று
மன்றுழு துண்பான் மனைவாழ்க்கை – முன்றிலில்
துச்சில் இருந்து துடைத்தெழுகண் ணீராலேழ்
எச்சம் இறுமேல் இறு.

❖❖❖❖

கருங்காலிக் கட்டைக்கு நாணாக்கோ டாலி
இருங்கதலித் தண்டுக்கு நாணும் – பெருங்கானில்
காரெருமை மேய்க்கின்ற காளைக்கு நான்தோற்றேன்
ஈரிரவும் துஞ்சாதென் கண்.

❖❖❖❖

நான்முகன் கரியமால் உந்தியில் வந்தோன்
கரிய மாலோ அலைகடல் துயின்தோன்
அலைகடல் குறுமுனி அங்கையில் அடக்கம்
குறுமுனியோ கலசத்திற் பிறந்தோன்
கலசமோ புவியிற் சிறுமண்

❖❖❖❖

அரியது கேட்கின் வரிவடி வேலோய்
மக்கள் யாக்கையிற் பிறத்தலும் அரிதே
மக்கள் யாக்கையிற் பிறந்த காலையும்
மூங்கையும் செவிடும் கூனும் குருடும்
பேடும் நீங்கிப் பிறத்தலும் அரிதே
பேடு நீங்கிப் பிறந்த காலையும்
ஞானமும் கல்வியும் நன்குறல் அரிதே
ஞானமும் கல்வியும் நன்குறும் ஆயினும்
தானமும் தவமும் தரித்தலும் அரிதே
தானமும் தவமும் தரித்தார்க் கல்லது
வானவர் நாடு வழிதிற வாதே.

❖❖❖❖

போந்த வுதாரனுக்குப் பொன்துரும்பு சூரனுக்குச்
சேர்ந்த மரணம் சிறுதரும்பு – ஆய்ந்த

அறவோர்க்கு நாரி யருந்துரும்பாம் இல்லத்
துறவோர்க்கு வேந்தன் துரும்பு

❖❖❖❖

மாடில்லான் வாழ்வு மதியில்லாம் வாணிபம்நன்
நாடில்லான் செங்கோல் நடாத்துவது – கூடும்
குருவில்லா வித்தை குணமில்லாப் பெண்டு
விருந்தில்லான் வீடு விழல்

❖❖❖❖

நேசனைக்கா ணாவிடத்தில் நெஞ்சார வேதுதித்தல்
ஆசானை எவ்விடத்தும் அப்படியே – வாச
மனையாளைப் பஞ்சணையில் மைந்தர்தமை நெஞ்சில்
வினையாளை வேலைமுடி வில்

❖❖❖❖

மேற்பார்க்க மைந்தரும் மூவா எருதும் விளங்குகங்கை
நீர்ப்பாய்ச்சலும் நன்னிலமும் உண்ணாகியும் நின்னிடத்தில்
பாற்பாக் கியவதி நீங்கா திருந்தும் பலிக்குழன்றாய்
ஏற்பார்க் கிடாமலன் றோபெருங் கோயில் இறையவனே!

❖❖❖❖

மூவர் கோவையும் மூவிளங் கோவையும்
பாடிய வென்றன் பனுவல் வாயால்
எம்மையும் பாடுக வென்றனீர் நும்மையிங்கு
எங்ஙனம் பாகென யானே வெங்கட்
களிறுபடு செங்களம் கண்ணிற் காணீர்
வெளிறுபடு நல்யாழ் விரும்பிக் கேளீர்
புலவர்வாய்ச்சொற் புலம்பலுக் கிரங்கீர்
இலவு வாய்ச்சியர் இளமுலை புல்லீர்
அவிச்சுவை யல்லது தமிழ்ச்சுவை தெருளீர்
உடீர் உண்ணீர் கொடீஇர் கொள்ளீர்
ஒவ்வாக் கானத்து உயர்மரம் பழுத்த
துவ்வாக் கனியெனத் தோன்றிய நீரே!

❖❖❖❖

எழுபிறவி யோதி யுணர்ந்தார் தமக்கே
வருபிறவி தோறும் வலிதே – இருள்நீர்
கலைவாணர் எல்லாம் கழறினர்காண் நெஞ்சின்
மலைவாகக் கொள்ளேன் மதித்து.

❖❖❖❖

எழுதரிது முன்னம் எழுதிய பின்னர்
பழுதறவா சிப்பரிது பண்பாய் – முழுதுமதைக்
கற்பரிது நற்பயனைக் காண்பரிது கண்டக்கால்
நிற்பரிது தானந் நிலை

❖❖❖❖

கோலெடுத்துக் கோத்துரங்கக் கோகனகச் செங்கைவடி
வேலெடுத்துக் கோத்துரத்தல் வீட்டிலனே – சீதமிகு
பூபால னானாலும் போமோ புரந்தகற்குக்
கோபால னான குணம்.

❖❖❖❖

பூங்கமல வாவிசூழ் புள்வேளூர்ப் பூதனையும்
ஆங்குவரு பாற்பெண்ணை யாற்றினையும் – ஈங்கு
மறப்பித்தாய் வாளதிகா வன்கூற்றின் நாவை
அறுப்பித்தாய் யாமலகந் தந்து.

❖❖❖❖

திருத்தங்கி தன்வாழை தேம்பழுத்து நிற்கும்
மருத்தன் திருக்குடந்தை வாழை – குருத்தும்
இலையுமிலை பூவுமிலை காயுமிலை என்னும்
உலகில் வருவிருந்தோ டுண்டு

❖❖❖❖

யானவ்வை யென்றிரந் தேத்தினேன்; மற்றவனும்
ஏனவ்வே யேனென் றிரங்கினான் – நானும்கேள்
மன்னும் புகார்வணிகன் மாநாய்கன் – பந்தனெனும்
பென்னினருள் பெற்றேனிப் போது.

❖❖❖❖

கல்லாத ஒருவனையான் கற்றாய் என்றேன்
காடேறித் திரிவானை நாடா என்றேன்
பொல்லாத ஒருவனையான் நல்லாய் என்றேன்
போர்முகத்துக் கோழையையான் புலியே றென்றேன்
மல்லாரும் புயமென்றேன் தேம்பற் றோளை
வழங்காத கையனையான் வள்ளால் என்றேன்
இல்லாது சொன்னேனுக்கு இல்லை என்றான்
யானும் என்றன் குற்றத்தால் ஏகின்றேனே!

வலம்படு வாய்வாள் ஏந்தி, ஒன்னார்
களம்படக் கடந்த கழல்தொடித் தடக்கை,
ஆர்கலி நறவின் அதியர் கோமான்,
போரடு திருவின் பொலந்தார் அஞ்சி!

பால்புரை பிறைநுதல் பொலிந்த சென்னி
நீல மணிமிடற்று ஒருவன் போல
மன்னுக பெரும நீயே! தொன்னிலைப்
பெருமலை விடரகத்து அருமிசைக் கொண்ட
சிறியிலை நெல்லித் தீங்கனி குறியாது
ஆதல் நின்னகத்து அடக்கிச்
சாதல் நீங்க எமக்கீந் தனையே!

தடவுநிலைப் பலவின் நாஞ்சிற் பொருநன்
மடவன் மன்ற செந்நாப் புலவீர்!
வளைக்கை விலலியர் படப்பைக் கொய்த
அடகின் கண்ணுறை யாக யாம் சில
அரிசி வேண்டினெம் ஆகத், தான்பிற
வரிசை அறிதலால், தன்னும் தூக்கி
இருங்கடறு வளைஇய குன்றத் தன்ன
பெருங்களிறு நல்கி யோனே அன்னதோர்
தேற்றா ஈகையும் உளது கொல்
போற்றார் அம்ம பெரியோர்தம் கடனே!

எரிபுனக் குறவன் குறையல் அன்ன
கரிபுற விறகின் ஈம ஒள்ளழல்
குறுகினும் குறுகுக குறுகாது சென்று
விசும்புற நீளினும் நீள்க பசுங்கதித்
திங்கள் அன்ன வெண்குடை
ஒன்ஞாயிறு அன்னோன் புகழ்மா யலவே!

❖❖❖❖

மதியாதார் முற்றம் மதித்தொருகாற் சென்று
மிதியாமை கோடி பெறும்;
உண்ணீர்உண் ணீரென் றுபசரியார் தம்மனையில்
உண்ணாமை கோடி பெறும்;
கோடி கொடுத்தும் குடிப்பிறந்தார் தம்மொடு
கூடுவதே கோடி பெறும்;
கோடானுகோடி கொடுப்பினும் தன்னுடைநாக்
கோடாமை கோடி பெறும்.

❖❖❖❖

உள்ள வழக்கிருக்க ஊரார் பொதுவிருக்கத்
தள்ளி வழக்கதனைத் தான்பேசி – யெள்ளளவும்
கைக்கூலி தான்வாங்கும் காலறுவான் தன்கிளையும்
எச்சமிறும் என்றால் இறு.

❖❖❖❖

கொடியது கேட்கின் நெடியவெவ் வேலோய்
கொடிது கொடிது வறுமை கொடிது
அதனினும் கொடிதே இளமையில் வறுமை
அதனினுங் கொடிதே ஆற்றொணாக் கொடுநோய்
அதனினுங் கொடிதே அன்பில்லாப் பெண்டிர்
அதனினுங் கொடிதே
இன்புற அவள்கையில் உண்பது தானே!

❖❖❖❖

இனியது கேட்கின் தனிநெடு வேலோய்
இனியது இனியது ஏகாந்தம் இனியது
அதனினும் இனியது ஆதியைத் தொழுதல்
அதனினும் இனியது அறிவினர்ச் சேர்தல்
அதனினும் இனியது அறிவுள் ளாரைக்
கனவினும் நனவினும் காண்பது தானே.

❖❖❖❖

பெரியது கேட்கின் எரிதவழ் வேலோய்
பெரியது பெரியது புவனம் பெரியது
புவனமோ நான்முகன் படைப்பு
நான்முகன் கரியமால் உந்தியில் வந்தோன்
கரிய மாலோ அலைகடல் துயின்றோன்
அலைகடல் குறுமுனி அங்கையில் அடக்கம்
குறுமுனியோ கலசத்திற் பிறந்தோன்
கலசமோ புவியிற் சிறுமண்
புவியோ அரவினுக்கு ஒருதலைப் பாரம்
அரவோ உமையவள் சிறுவிரல் மோதிரம்
உமையோ இறைவன் பாகத்து ஒடுக்கம்
இறைவரோ தொண்டர் உள்ளத்து ஒடுக்கம்
தொண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிதே!

❖❖❖❖

ஞானமும் கல்வியும் நன்குறும் ஆயினும்
தானமும் தவமும் தரித்தலும் அரிதே
தானமும் தவமும் தரித்தார்க் கல்லது
வானவர் நாடு வழிதிற வாதே.

❖❖❖❖

தாயொடு அறுசுவைபோம் தந்தையொடு கல்விபோம்
சேயோடு தான்பெற்ற செல்வம்போம் – மாயவாழ்வு
உற்றா ருடன்போம் உடன் பிறப்பால் தோள்வலிபோம்
பொற்றாலி யோடெவையும் போம்.

❖❖❖❖

# 2. சித்தர் பாடல்கள்

## அ. பட்டினத்தார் வரலாறும் பாடல்களும்

ஐயிரண்டு திங்களாய் அங்கமெலாம் நொந்து பெற்றுப்

பையலென்ற போதே பரிந்தெடுத்துச் செய்ய இரு
கைப்புறத்தில் ஏந்திக் கனகமுலை தந்தாளை
எப்பிறப்பில் காண்பேன் இனி (2)

மாதா உடல் சலித்தாள் வல்வினையேன் கால் சலித்தேன்
வேதாவும் கை சலித்து விட்டானே நாதா
இருப்பையூர் வாழ்சிவனே இன்னம் ஓர் அன்னை
கருப்பையூர் வாராமற்கா (3)

நன்னாரில் பூட்டிய சூத்திரப்பாவை நன்னார்தப்பினால்
உன்னால்யானுந் திரிவதல்லால மற்றுனைப் பிரிந்தால்
என்னாலிங் காவதுண்டோ? இறைவா! கச்சியேகம்பனே!

நல்லா ரிணக்கமும், நின்பூசை நேசமும், ஞானமுமே
அல்லாது வேறு நிலையுளதோ? அகமும், பொருளும்
இல்லாளும் சுற்றமும் மைந்தரும் வாழ்வும் எழிலுடம்பும்
எல்லாம் வெளிமயக்கே இறைவா, கச்சியேகம்பனே! 5

பிறக்கும்பொழுது கொடுவந்த தில்லை, பிறந்து
மண்மேல் இறக்கும்பொழுது கொடுபோவ தில்லை
இடைநடுவில் குறிக்குமிச் செல்வஞ் சிவன் தந்ததென்று
கொடுக்கறியாது
இறக்குங் குலாமருக்கென்சொல்லுவேன்? கச்சியேகம்பனே!

## ஆ. பாம்பாட்டிச் சித்தர் பாடல்

பொய்ம் மதங்கள் போதனை செய் பொய்க் குருக்களை
புத்தி சொல்லி நன்னெறியில் போக விடுக்கும்
மெய்ம் மதந்தான் இன்னதென்று மேவ விளம்பும்
மெய்க் குருவின் பதம் போற்றி ஆடுபாம்பே!
வேதப் பொருள் இன்னதென்று வேதம் கடந்த
மெய்ப் பொருளைக் கண்டு மனம் மேவி விரும்பிப்
போதப் பொருள் இன்னதென்றும் போதனை செய்யும்
புஜ்ரண சற்குருதாள் கண்டு ஆடுபாம்பே!

அங்கையிற் கண்ணாடிபோல ஆதி வத்துவை
அறிவிக்கும் எங்கள் உயிரான குருவைச்
சங்கையறச் சந்தமும் தாழ்ந்து பணிந்தே
தமனியப் படம் எடுத்து ஆடுபாம்பே!

அட்ட திக்கும் அண்ட வெளியான விடமும்
அடக்கிய குளிகையோடு ஆடி விரைவாய்
வட்டமிட்டு வலம்வரும் வல்ல குருவின்
மலரடி தஞ்சம் என்று ஆடு பாம்பே!

கற்பகாலம் கடந்தாதி கர்த்தா வோடும்
கடமழி யாது வாழுங் காரணக் குரு
பொற்பதமே தஞ்சமென்று போற்றுதல் செய்து
பூரணச் சிந்தையோடு ஆடு பாம்பே!

வச்சிரத்திற் கோர் பழுது வாய்க்கு மாயினும்
வல்லுடம்புக் கொருகுறை வாய்த்திடாது
மெய்ச்சுகட முள்ள எங்கள் வேத குருவின்
மெல்லடி துதித்து நின்று ஆடு பாம்பே!

### இ. சித்தர் பாடல்கள்

ஈசன் பாசமடி .....அகப்பேய்
இவ்வண்ணங் கண்டதெல்லாம்
பாசம் பயின்றதடி .....அகப்பேய்
பரமது கண்டாயே.

பஞ்ச முகமேது .....அகப்பேய்
பஞ்சு படுத்தாலே
குஞ்சித பாதமடி .....அகப்பேய்
குருபா தங்கண்டாயே.
சைவம் ஆருக்கடி .....அகப்பேய்
தன்னை அறிந்தவர்க்கே
சைவம் ஆனவிடம் .....அகப்பேய்!
சற்குரு பாதமடி.

அஞ்சிலே பிஞ்சிலே வஞ்சியரே நிதம்
கொஞ்சி விளையாடும் வஞ்சியரே
நெஞ்சிலே ருத்திரன் சூழிருப்பா னவன்
நேருட னாமடி வாலைப்பெண்ணே!

## 3. பன்னிரு திருமுறை

### அ. திருமந்திரம்

“சன் மார்க்கச் சற்குரு சந்நிதி பொய்வரின்
நன்மார்க்கமும் குன்றி ‘‘ஞானமும் தங்காது
தொன் மார்க்கம் மாய துறையும் மறந்திட்டுப்
பன் மார்க்கமும் கெட்டுப் பஞ்சமும் ஆமே

### ஆ. நான்காம் திருமுறை

தந்தையாய்த் தாயுமாகித் தரணியாய்த் தரணியுள்ளார்க்கு
எந்தையுமென்ன நின்ற ஏழுலகு உடனுமாகி
எந்தையெம் பிரானே! என்றென்று உள்குவார் உள்ளத் தென்றுந்
சிந்தையுஞ் சிவமுமாவார் திருப்பயற் றூரனாரே”

## திருவாரூர் – *பண் : காந்தாரம்*

என்பிருத்தி நரம்புதோல் புகப்பெய்திட்
டென்னையோ ருருவ மாக்கி
இன்பிருத்தி முன்பிருந்த வினைதீர்த்திட்
டென்னுள்ளங் கோயி லாக்கி
அன்பிருத்தி யடியேனைக் கூழாட்கொண்
டருள்செய்த வாரூ ரர்தம்
முன்பிருக்கும் விதியின்றி முயல்விட்டுக்
காக்கைப்பின் போன வாறே.

## திருக்கச்சியேகம்பம் – *பண் : காந்தாரம்*

கரவாடும் வன்னெஞ்சர்க்
கரியானைக் கரவார்பால்
விரவபாடும் பெருமானை
விடையேறும் வித்தகனை
அரவாடச் சடைதாழ
வங்கையினி லனலேந்தி
இரவாடும் பெருமானை
யென்மனத்தே வைத்தேனே.

### பண் : 'சிவனெனுமோசை' பியந்தைக் காந்தாரம்

சிவனெனு மோசை யல்ல தறையோ வுலகிற்
றிருநின்ற செம்மை யுளதே
அவனுமொ ரைய முண்ணி யதளாடை யாவ
ததன்மேலொ ராட லரவம்
கவணள வுள்ள வுண்கு கரிகாடு கோயில்
கலனாவ தோடு கருதில்
அவனது பெற்றி கண்டு மவனீர்மை கண்டு
மகநேர்வர் தேவ ரவரே.

## இ. ஐந்தாம் திருமுறை

தந்தை தாயொடு தாரமெனுந் தளைப் ப, எண் - 255
பந்தம் ஆங்கறுத்துப் பயில் வெய்திய
கொந்தவிழ் பொழிற் கொண்டீச் சரவனைச்
சிந்தை செய்ம்மின் அவனடி சேரவே

கருவனே கருவாய்த் தெளிவார்க்கு எல்லாம் ப, எண் - 237
ஒருவனே உயிர்ப்பாய் உணர்வாய் நின்ற
திருவனே திரு வீழி மிழலையுள்
குருவனே அடியேனைக் குறிக்கொளே!

## ஈ. முதல் திருமுறை

**கோயில்** *(பதிகம் எண்: 80)*

**பண்: குறிஞ்சி**

பறப்பைப் படுத்தெங்கும் பசுவேட் டெரியோம்புஞ்
சிறப்பர் வாழ்தில்லைச் சிற்றம் பலமேய
பிறப்பில் பெருமானைப் பின்றாழ் சடையானை
மறப்பி லார்கண்டீர் மைய றீர்வாரே.

**திருவெங்குரு** *(பதிகம் எண்: 75)*

**பண்: குறிஞ்சி**

காலைநன்மாமலர் கொண்டடிபரவிக் கைதொழுமாணியைக்
கறுத்தவெங்காலன்
ஓலமதிடமுன் னுயிரொடுமாள வுதைத்தவனுமையவள்
விருப்பனெம்பெருமான்
மாலைவந்தணுக வோதம்வந்துலவி மறிதிரைசங்கொடு
பவளமுனுந்தி
வேலைவந்தணையுஞ் சோலைகள்சூழ்ந்த
வெங்குருமேவியுள் வீற்றிருந்தாரே.

# 4. நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்

ஸ்ரீ : மதுரகவியாழ்வார் அருளிச் செய்த : கண்ணிநுண் சித்தாம்பு

கலிவிருத்தம்

(ஆரபி ராகம் – ஆதி தாளம்)

கண்ணி நுண்சிறுத் தாம்பினால் கண்டுண்ணப்
பண்ணி யபெரு மாயன் என் னப்பனில்
நண்ணித் தென்குரு கூர்நம்பி யென்றக்கால்
அண்ணிக் கும்அமு தூறுமென் நாவுக்கே. 1

நாவி னால் நவிற்றி இன்ப மெய்தினேன்
மேவி னேனவன் பொன்னடி, மெய்ம்மையே
தேவு மற்றறி யேன்; குரு கூர் நம்பி
பாவி னின்னசை பாடித் திவரிவனே, 2

திரிதந் தாகிலும் தேவ பிரானுடை
கரிய கோலத் திருவுருக் காண்பன்நான்
பெரிய வண்குரு கூர்நகர் நம்பிக்காள் –
உரிய னாய் அடி யேன்பெற்ற நன்மையே. 3

நன்மை யால்மிக்க நான்மறை யாளர்கள்
புன்மை யாகக் கருதுவர் ஆதலின்
அன்னை யாய்அத்த னாய்என்னை யாண்டிடும்
தன்மை யான் சட கோபனென் நம்பியே. 4

நம்பி னேன்பிறர் நன்பொருள் தன்னையும்
நம்பி னேன்மட வாரையும், முன்னெலாம்
செம்பொன் மாடத் திருக்குரு கூர்நம்பிக்
கன்ப னாய் அடி யேன்சதிர்த் தேன், இன்றே. 5

இன்று தொட்டும் எழுமையும் எம்பிரான்
நின்று தன்புக ழேத்த வருளினான்
குன்ற மாடத் திருக்குரு கூர்நம்பி
என்றும் என்னை யிகழ்விலன், காண்மினே 6

கண்டு கொண்டென்னைக் காரிமா றப்பிரான்
பண்டை வல்வினை பாற்றி யருளினான்
எண்தி சையும் அறிய இயம்புகேன்
ஒண்த மிழ்ச்சட கோப னருளையே 7

## 5. திருவருட்பா – *மாதா பிதா வந்தனம்*

"தந்தையும் தாயும் குருவும் யான் போற்று";
சாமியும் பூமியும் பொருளும்
சொந்த நல் வாழ்வும் நேயமுந் துணையும்
சுற்றமும் முற்றுநீ யென்றே
சிந்தையுற்றிங்கே இருக்கின்றேன் இதுநின்
திருவுளந் தெரிந்ததே யெந்தாய்
நிந்தைசெய் யுலகில் யானுளங் கலங்கல்
நீதியோ நின்னருட் கழகோ" பாடல் எண் – 18

❖❖❖❖

கல்லாய் நாயேன் எனினும் எனைக்
காக்கும் தாய் நீ என்றுலகம்
எல்லாம் அறியும் ஆதலினால்
எந்தாய் அருளாது இருந்தியெனில்
பொல்லாப் பழிவந்து அடையும் உனக்கு
அரசேயினியாள் புதல்வதென்னெ
செல்லார் பொழில்சூழ் திருந்தணிகைத்
தேவே ஞானச் செஞ்சுடரே!

❖❖❖❖

அண்ணாவே நின்னடியையன்றி வேறோர்
ஆதரவிங்கு அறியேன் நெஞ்சழிந்து துன்பால்
புண்ணாவேன் தன்னையின்றும் வஞ்சர் பாற்போய்ப்
புலந்து முக வாட்டமுடன் புலம்பி நிற்கப்
பண்ணாதே யாவனின் பாவிக்குள்ளும்
படுபாவி என்றென்னைப் பாயீந்து தள்ள
எண்ணாதே யான் மிகவும் ஏழை கண்டாய்
இசைக்கரிய தணிகையில் வீற்றிருக்கும் கோவே!
கோவேநல் தணிகைவரை அமர்ந்த ‘‘ானக்
குலமணியே குகனேசற் குருவே யார்க்கும்
தேவேயென் விண்ணப்பம் ஒன்று கேண்மோ
சிந்தைதனில் நினைக்கவருள் செவ்வாய் நாளும்
பூவேயு மயன்திருமால் புலவர் முற்றும்
போற்றும் எழிற் புரந்தரன் எப்புவிய மோங்கச்
சேவேறும் பெருமானிங்கு இவர்கள் வாழ்த்தல்
செய்துவக்கும் நின்னிரண்டு திருத்தாட் சீரே!

❖❖❖❖

நிலையுறு நிராசையாம் உயர்குலப் பெண்டிரொடும்
நிகழ்சாந்த மாம்புதல்வனும்
நெறிபெறும் உதாரகுணம் என்னும்நற்
பொருளும்மருள் நீக்கும்அறி வாம்துணைவனும்
மலைவறு நிராங்கார நண்பனும் சுத்தம்உறு
மனம்எனும் நல்ஏவலும்
வருசகல கேவலம்இ லாதஇடமும்பெற்று
வாழ்கின்ற வாழ்வருளுவாய்
அலைஇலாச் சிவஞான வாரியே ஆனந்த
அமுதமே குமதமலர்வாய்
அணிகொள் பொற் கொடிபசுங் கொடிஇரு புறம்படர்ந்

தழகுபெற வரு பொன்மலையே
தலைவர்புகழ் சென்னையில் கந்தகோட் டத்துள்வளர்
தலம்ஓங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்மணியே.

## 6. கந்தர் அனுபூதி

முருகன் தனிவேல் முனிநம் குருஎன்று
அருள்கொண்டு அறியார் அறியும் தரமோ?
உருஅன்று அருஅன்று உளதுஅன்று இலதுஅன்று
இருள்அன்று ஒளிஅன்று எனநின்றதுவே,

பாடல் எண் – 13 பக்கம் எண் – 111

கெடுவாய் மனனே கதிகேள் கரவா
திடுவாய் வடிவேல் இறைதாள் நினைவாய்
சுடுவாய் நெடுவே தனைதூள் படவே
விடுவாய் விடுவாய் வினையா வையுமே

செம்மான் மகளைத் திருடுந் திருடன்
பெம்மான் முருகன் பிறவான் இறவான்
சும்மாஇரு சொல்லற என்றலுமே
அம்மாபொருள் ஒன்றும் அறிந்திலனே.

விதிகாணும் உடம்பை விடா வினையேன்

கதிகாண மலர்க்கழல் என்றருள்வாய்
மதி வாணுதல் வள்ளியை அல்லது பின்
துதியா விதரா சுரபூ பதியே.
எந்தாயும் எனக்கருள் தந்தையுநீ

சிந்தாகுல மானவை தீர்த்தெனையாள்
கந்தா கதிர்வே லவனே உமையாள்
மைந்தா குமரா மறைநா யகனே.

## 7. கந்தர் கலிவெண்பா

அறிவுக் கறிவாகி அவ்வறிவுக் கெட்டா
நெறியில் செறிந்த நிலை நீங்கிப் - பிறியாக் 46

கருணை திருவுருவாய்க் காசினிக்கே தோன்றிக்
குருபரன் என்று ஓர் திருப்பேர் கொண்டு டூ திருநோக்கால் 48

ஊழ்வினையைப் போக்கி உடல் அறுபத்தெட்டும்நிலம்
ஏழும் அத்து வாக்கள் இருமூன்றும் - பாழாக 50

ஆணவம் ஆன படலம் கிழித்து அறிவில்
காணரிய மெய்ஞ்ஞானக் கண்காட்டிப் - பூணும் 52

அடிஞானத் தால்பொருளும் ஆன்மாவும் காட்டிக்
கடிஆர் புவனம் முற்றும் காட்டி - முடியாது 54

தேக்குபர மானந்தத் தெள்ளமுதம் ஆகிஎங்கும்
நீக்கம் அற நின்ற நிலை காட்டிப் - போக்கும் 56

வரவும் நினைப்பும் மறப்பும் பகலும்
இரவும் கடந்து உலவா இன்பம் - மருவுவித்துக் 58

கன்ம மலத் தார்க்குமலர்க் கண்மூன்றும் தாழ்சடையும்
வன்மழுவும் மானும் உடன் மால்விடைமேல் - மின்இடத்துப் 60

பூத்த பவளப் பொருப்பொன்று வெள்ளிவெற்பில்
வாய்த்தனைய தெய்வ வடிவாகி - மூத்த

## 8. லலிதாம்பாள் சோபனம்

சேஷசயனருட சரணாம்புஜங்களைத்
தண்டனிட்டு ஸ்தோத்திரங்கள் செய்து
காயாம்பூவர்ணரோடு தாங்கள் படுகின்ற
கஷ்டங்களைச் சொல்லி முறையிட்டார்கள்.
நாதரே உம்முட தாஸர்களேயான
நாங்கள் படுகின்ற சங்கடங்கள்
ஏதறியாமலிருக்கின் காரியம்
இந்த நித்திரையுண்டோ சோபனம் சோபனம்

## 9. பாரதியார் கவிதைகள்

### கண்ணன் – எனது சற்குரு

நாடு முழுதிலுஞ் சுற்றி நான் – பல
நாட்கள் அலைந்திடும் – போதினில் நிறைந்
தோடும் யமுனைக் கரையிலே – தடி
ஊன்றிச் சென்றாரோர் கிழவனார் – ஒளி
கூடும் முகமும் தெளிவுதான் – குடி
கொண்ட விழியும் சடைகளும் – வெள்ளைத்
தாடியும் கண்டு வணங்கியே – பல
சங்கதி பேசி வருகையில்
என்னுளத் தாசை யறிந்தவர் – மிக
இன்புற் றுரைத்திட லாயினர் – தம்பி!
நின்னுளத் திற்குத் தகுந்தவன் சுடர்
நித்திய மோனத் திருப்பவன் – உயர்
மன்னர் குலத்தில் பிறந்தவன் – வட
மாமது ரைப்பதி யாள்கின்றான் – கண்ணன்
தன்னைச் சரணென்று போவையேல் அவன்
சத்தியங் கூறுவன் என்றனர்

## 10. விநாயகர் நான்மணி மாலை

### வெண்பா

(சக்தி பெறும்) பாவாணர் சாற்றுபொருள் யாதெனினம்
சித்திபெறச் செய்வாக்கு வல்லமைக்கா–அத்தனே!
(நின்)தனக்குக் காப்புரைப்பார்;நின்மீது செய்யும் நூல்
இன்றிதற்கும் காப்புநீ யே. 1

### கலித்துறை

நீயே சரணம் நினதரு ளேசர ணஞ்சரணம்
நாயேன் பலபிழை செய்து களைத்துனை நாடிவந்தேன்;
வாயே திறவாத மெனத் திருந்துன் மலரடிக்குத்
தீயே நிகர்த்தொளி வீசுந் தமிழ்க்கவி செய்குவனே. 2

### விருத்தம்

செய்யுந் தொழிலுன் தொழிலேகாண்
சீர்பெற் றிடநீ அருள்செய் வாய்.
வையந் தனையும் வெளியினையும்
வானத்தையும்முன் படைத்தவனே!
ஐயா!நான்மு கப்பிரமா!
யானை முகனே!வாணிதனைக்
கையா லணைத்துக் காப்பவனே!
கமலா சனத்துக் கற்பகமே! 3

### அகவல்

கற்பக விநாயகக் கடவுளே,போற்றி!
சிற்பர மோனத் தேவன் வாழ்க!
வாரண முகத்தான் மலர்த்தாள் வெல்க!
ஆரண முகத்தான் அருட்பதம் வெல்க!
படைப்புக் கிறையவன், பண்ணவர் நாயகன்
இந்திர குரு, எனதுஇதயத் தொளிர்வான்
சந்திர மவுலித் தலைவன் மைந்தன்
கணபதி தாளைக் கருத்திடை வைப்போம்;
குணமதிற் பலவாம்;கூறக் கேளீர்!
உட்செவி திறக்கும்; அகக்கண் ஒளிதரும்;
அக்கினி தோன்றும்; ஆண்மை வலியுறும்;
திக்கெலாம் வென்று ஜெயக்கொடி நாட்டலாம்.
கட்செவி தன்னைக் கையிலே யெடுக்கலாம்
விடத்தையும் நோவையும் வெம்பகை யதனையும்
துக்கமென் றெண்ணித் துயரிலா திங்கு
நிச்சலும் வாழ்ந்து நிலைபெற் றோங்கலாம்;
அச்சந் தீரும்,அமுதம் விளையும்;
வித்தை வளரும்;வேள்வி ஓங்கும்;
அமரத் தன்மை எய்தவும்
இங்கு நாம் பெறலாம்; இஃதுணர் வீரே.

# 11. பட்டினத்தார் பாடல்கள்

பிறவா திருக்க வரம்பெறல் வேண்டும் பிறந்துவிட்டால்
இறவா திருக்க மருந்துண்டு காணிது வெப்படியோ
அறமார் புகழ்த்தில்லை யம்பல வாண ரடிக்கமல
மறவா திருமன மேயது காணன் மருந்துனக்கே.

கண்ணுண்டு காணக் கருத்துண்டு நோக்கக் கசிந்துருகிப்
பண்ணுண்டு பாடச் செவியுண்டு கேட்கப்பல் பச்சிலையால்
எண்ணுண்டு சாத்த வெதிர்நிற்க வீச னிருக்கையிலே
மண்ணுண்டு போகுதை யோகெடு வீரிந்த மானிடமே.

## கந்தரலங்காரம்

விழிக்குத் துணைதிரு மென்மலர்ப் பாதங்கள் மெய்மைகுன்றா
மொழிக்குத் துணைமுரு காவெனு நாமங்கள் முன்புசெய்த
பழிக்குத் துணையவன் பன்னிரு தோறும் பயந்ததனி
வழிக்குத் துணைவடி வேலுஞ்செங் கோடன் மயூரமுமே.

❖❖❖❖

காவிக் கமலக் கழலுடன் சேர்த்தெனைக் காத்தருளாய்
தூவிக் குலமயில் வாகன னேதுணை யேதுமின்றித்
தாவிப் படரக் கொழுகொம் பிலாத தனிக்கொடிபோற்
பாவித் தனிமனந் தள்ளாடி வாடிப் பதைக்கின்றதே.

# 12. திருவெம்பாவை

## அ. திருவெம்பாவை

முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே!
பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப்பெற்றியனே!
உன்னைப் பிரானாகப் பெற்ற உன் சீரடியோம்!
உன்னடியார் தாள் பணிவோம்! ஆங்கவர்க்கே பாங்காவோம்!

❖❖❖❖

சீதப் புனலாடிச் சிற்றம்பலம் பாடி
வேதப் பொருள் பாடி அப்பொருள் ஆமாபாடிச்
சோதி திறம் பாடிச் சூழ்கொன்றைத் தார் பாடி
ஆதி திறம் பாடி அந்தம் ஆமாபாடிப்

❖❖❖❖

செங்கண் அவன்பால் திசைமுகன்பால் தேவர்கள்பால்
எங்கும் இலாதோர் இன்பம்நம் பாலதாக்
கொங்குஉண் கருங்குழலி! நம் தம்மைக் கோதாட்டி
இங்கு நம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதம் தந்தருளும் சேவகனை
அங்கண் அரசை அடியோங்கட்கு ஆரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல் பாயந்து ஆடு ஏலொர் எம்பாவாய்.

❖❖❖❖

உன் கையில் பிள்ளை உனக்கே அடைக்கலம் என்று
அங்கப் பழஞ்சொல் புதுக்கும் எம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்கு ஒன்று உரைப்போம் கேள்!
எம் கொங்கை நின் அன்பர் அல்லார் தோள் சேரற்க!
எம் கை உனக்கு அல்லாது எப்பணியும் செய்யற்க!
கங்கும் பகல் எம் கண் மற்றொன்றும் காணற்க!
இங்கிப் பரிசே எமக்கு எம்கோல் நல்குதியேல்
எங்கு எழில் என் ஞாயிறு? எமக்கு ஏலொர் எம்பாவாய்.

## ஆ. திருப்பள்ளியெழுச்சி

போற்றியென் வாழ்முத லாகிய பொருளே!
புலர்ந்ததுவி பூங்கழற் கிணைதுணை மலர்கொண்டு
ஏற்றிநின் திருமுகத் தெமக்கருள் மலரும்
எழில்நகை கொண்டுநின் திருவடி தொழுகோம்
சேற்றிதழ்க் கமலங்கள் மலருந்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெருமானே!

❖❖❖❖

கடலமு தே! கரும்பேவிரும் படியார்
எண்ணகத் தாய்! உல குக்குயி ரானாய்!
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே!

❖❖❖❖

அவன்விருப் பெய்தவும் மலரவன் ஆசைப்
படவும்நின் னலர்ந்தமெய்க் கருணையும் நீயும்
அவனியிற் புகுந்தெமை ஆட்கொள்ள வல்லாய்!
ஆரமு தேபள்ளி எழுந்தருளாயே!

## 13. இந்து மகா சமுத்திரம்

இந்தக் குரு – சிஷ்ய தொடர்பு பற்றி இவ்வளவு பேசுவானேன் – என்ற கேள்வி சிலர் மனதில் எழலாம். இந்தத் தொடர்பு இல்லையென்றால் உபநிஷத்துக்களே இல்லை. 'ஹிந்து மதமே இல்லை. குரு–சிஷ்ய உறவு முறை அவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது.

# வகுப்பு - VIII

## 1. ஔவையார் பாடல்கள்

### அ. விநாயகர் அகவல்

சீர்கொண்ட கரிமுகமு மைந்து கையும்
சிறந்தவா பரணமுடன் ஒற்றைக் கொம்பும்
சீர்தரு மூலச் செழுஞ்சுடர் விளக்கே
கார்நிற மேனிக் கற்பகக் களிறே

❖❖❖❖

இப்பொழுது என்னை ஆட்கொள வேண்டித்
தாயாய் எனக்குத் தானெழுந்தருளி
மாயாப் பிறவி மயக்கம் அறுத்துத்
திருந்திய முதல் ஐந்தெழுத்துற் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தென் உளந்தனிற் புகுந்து
குருவடி வாகித் குவலயந்தன்னில்
திருவடி வைத்துத் திறிமிது பொருளென
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளி
கோடா யுதத்தால் கொடுவினை களைந்தே
உவட்டா உபதேசம் புகட்டியென் செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையுங் காட்டி

❖❖❖❖

ஐம்புலக் கதவை அடைப்பதுங்; காட்டி
ஆறா தாரத்து அங்கு நிலையும்
பேறா நிறுத்திப் பேச்சுரை அறுத்தே
இடைபிங் கலையின் எழுத்தறி வித்துக்
கடையின் சுழுமுனை கபாலமும் காட்டி!

# ஔவையார் பாடல்கள்

❖ வான்குருவி யின்கூடு வல்லரக்குத் தொல்கறையான்
தேன்சிலம்பி யாவருக்குஞ் செய்யரிதால் – யாம்பெரிதும்
வல்லோமே என்று வலிமைசொல வேண்டாங்காண்
எல்லார்க்கும் ஒவ்வொன் றெளிது

❖ சுற்றும் சுருங்குளவி சூரைத்தூற் றாரியப்பேய்
எற்றும் சுடுகாட் டிடிகரையின் – புற்றில்
வளர்ந்த மடற்பனைக்குள் வைத்ததேன் ஒக்கும்
தளர்ந்தோர்க்கொன் றியார் தனம்.

❖ இலக்கணக் கவிஞர்சொல் இன்பம் தேடுவர்
மலக்குசொற் றேடுவர் வன்க ணாளர்கள்
நிலத்துறுங் கமலத்தை நேரும் வண்ட தீ
தலைக்குறை கமலத்தைச் சாரும் தன்மை போல்

❖ அழற்கட்டுக் கட்டிய வைவே லசதி யின்வரையின்
மழைக்கட்டுக் கட்டிய மாளிகை மேலொரு மங்கை நல்லாள்
உழக்கிட் டுரியிட்டு முவ்வழக் கிட்டுரி நாழியிட்டுக்
குழற்கட் டவிழ்த்துட னங்ஙனின் றேமயிர் கோதினளே.

❖ ஏரும் இரண்டுளதாய் இல்லத்தே வித்துளாய்
நீரறுகே சேர்ந்த நிலமுமாய் – ஊருக்குட்
சென்று வரவணித்தாய்ச் செல்வாரும் சொற்கேட்டால்
என்றும் உழவே இனிது.

❖ தடவுநிலைப் பலவின் நாஞ்சிற் பொருநன்
மடவன் மன்ற செந்நாப் புலவீர்!
வளைக்கை விலலியர் படப்பைக் கொய்த
அடகின் கண்ணுறை யாக யாம் சில
அரிசி வேண்டினெம் ஆகத், தான்பிற

வரிசை அறிதலால், தன்னும் தூக்கி
இருங்கடறு வளைஇய குன்றத் தன்ன
பெருங்களிறு நல்கி யோனே அன்னதோர்
தேற்றா ஈகையும் உளது கொல்
போற்றார் அம்ம பெரியோர்தம் கடனே!

❖ கால்நொந்தேன் நொந்தேன் கடுகி வழிநடந்தேன்
யான் வந்த தூரம் எளிதன்று – கூனல்
கருத்தேனுங் கங்காந்த காவிரி சூழ் நாடா
இருந்தேனுக் கெங்கே இடம்?

❖ தண்ணீருங் காவிரியே! தார்வேந்தன் சோழனே
மண்ணா வதுஞ்சோழ மண்டலமே – பெண்ணாவாள்
அம்பொற் சிலம்பி அரவிந்தத் தாளணியும்
செம்பொற் சிலம்பே சிலம்பு

❖ கற்றதுகைம் மண்ணளவு கல்லாதுலகளவென்
றுற்ற கலைமடந்தை ஓதுகிறாள் – மெத்த
பெறும்பந் தயங்கூற வேண்டாம் புலவீர்
எறும்புந்தன் கையாலென் சாண்

❖ ஆலைப் பலாவாக்க லாமோ அருஞ்சுணங்கள்
வாலை நிமிர்க் வசமாமோ – நீலநிறக்
காக்கைதனைப் பேசுவிக்க லாமோ கருணையிலா
மூர்க்கனைச் சீராக்க லாமோ?

❖ ஆங்காலம் மெய்வருந்த வேண்டாம் அஃதேதென்னில்
தேங்காய்க் கிளநீர்போற் சேருமே – போங்காலம்
காட்டானை யுண்ட கனியது போல் ஆகுமே
தாட்டாளன் தேடும் தனம்

❖ வஞ்சி வெளிய குருகெல்லாம் பஞ்சவன்றன்
நான்மாடக் கூடலில் கல்வி வலிது
சோதுன் உறந்தைக் கரும்பினிது தொண்டடைமான்
கச்சியுட் காக்கை குளீத

❖ திருத்தங்கி தன்வாழை தேம்பழுத்து நிற்கும்
மருத்தன் திருக்குடந்தை வாழை – குருத்தும்
இலையுமிலை பூவுமிலை காயுமிலை என்னும்
உலகில் வருவிருந்தோ டுண்டு

❖ மதுரமொழி நல்லமையாள் சிறுவன் மலரடியை
முதிரநினை யவல் லார்க்கரி தோமுகில் போன்முழங்கி
அதிரவருகின்ற யானையும் தேரும் அதன்பின்வரும்
குதிரையும் காதம் கிழவியும் காதம் குலமன்னனே!

## 2. பாரதியார் பாடல்கள்

### பாப்பாப் பாட்டு

ஓடி விளையாடு பாப்பா!–நீ
ஓய்ந்திருக்க லாகாது பாப்பா!
கூடி விளையாடு பாப்பா!–ஒரு
குழந்தையை வையாதே பாப்பா!

சின்னஞ் சிறுகுருவி போலே–நீ
திரிந்து பறந்துவா பாப்பா!
வண்ணப் பறவைகளைக் கண்டு–நீ
மனதில் மகிழ்ச்சிகொள்ளு பாப்பா!

கொத்தித் திரியுமந்தக் கோழி–அதைக்
கூட்டி விளையாடு பாப்பா!

எத்தித் திருடுமந்தக் காக்காய்–அதற்கு
இரக்கப் படவேணும் பாப்பா!

பாலைப் பொழிந்துதரும் பாப்பா!–அந்தப்
பசுமிக நல்லதடி பாப்பா!
வாலைக் குழைத்துவரும் நாய்தான்–அது
மனிதர்க்கு தோழனடி பாப்பா!

வண்டி இழுக்கும்நல்ல குதிரை,–நெல்லு
வயலில் உழுதுவரும் மாடு,
அண்டிப் பிழைக்கும் நம்மை,ஆடு,–இவை
ஆதரிக்க வேணுமடி பாப்பா!

காலை எழுந்தவுடன் படிப்பு–பின்பு
கனிவு கொடுக்கும்நல்ல பாட்டு
மாலை முழுதும் விளையாட்டு–என்று
வழக்கப் படுத்திக்கொள்ளு பாப்பா!

பொய்சொல்லக் கூடாது பாப்பா!–என்றும்
புறஞ்சொல்ல லாகாது பாப்பா!
தெய்வம் நமக்குத்துணை பாப்பா!–ஒருன
தீங்குவர மாட்டாது பாப்பா!

பாதகஞ் செய்பவரைக் கணடால்–நாம்
பயங்கொள்ள லாகாது பாப்பா!
மோதி மிதித்துவிடு பாப்பா!–அவர்
முகத்தில் உமிழ்ந்துவிடு பாப்பா!

துன்பம் நெருங்கி வந்த போதும்–நாம்
சோர்ந்துவிட லாகாது பாப்பா!

அன்பு மிகுந்ததெய்வ முண்டு-துன்பம்
அத்தனையும் போக்கிவிடும் பாப்பா!

சோம்பல் மிகக்கெடுதி பாப்பா!-தாய்
சொன்ன சொல்லைத் தட்டாதே பாப்பா!
தேம்பி யழுங்குழந்தை நொண்டி,-நீ
திடங்கொண்டு போராடு பாப்பா!

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற-எங்கள்
தாயென்று கும்பிடடி பாப்பா!
அமிழ்தில் இனியதடி பாப்பா!-நம்
ஆன்றோர்கள் தேசமடி பாப்பா!

சொல்லில் உயர்வுதமிழ்ச் சொல்லே!-அதைத்
தொழுது படித்திடடி பாப்பா!
செல்வம் நிறைந்த 'ஹிந்துஸ்தானம்-அதைத்
தினமும் புகழ்ந்திடடி பாப்பா!

வடக்கில் இமயமலை பாப்பா!-தெற்கில்
வாழும் குமரிமுனை பாப்பா!
கிடக்கும் பெரியகடல் கண்டாய்-இதன்
கிழக்கிலும் மேற்கிலும் பாப்பா!

வேத முடையதிந்த நாடு,-நல்ல
வீரர் பிறந்ததிந்த நாடு;
சேதமில் லாத'ஹிந்து ஸ்தானம்-இதைத்
தெய்வமென்று கும்பிடடி பாப்பா!

சாதிகள் இல்லையடி பாப்பா!-குலத்
தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்;
நீதி உயர்ந்த மதி,கல்வி-அன்பு
நிறை உடையவர்கள் மேலோர்.

உயிர்க ளிடத்தில்அன்பு வேணும்;–தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும்;
வயிர முடையநெஞ்சு வேணும்;–இது
வாழும் முறைமையடி பாப்பா!

## பாரதியார் பாடல்கள்

பூமியிலே மாடுபோற் பொற்புடைய சாதியுண்டோ ?
மானிடருந் தம்முள் வலிமிகுந்த மைந்தர்தமை
மேனியுறுங் காளையென்று மேம்பா டுறப்புகழ்வார்
காளையர்தம் முள்ளே கனமிகுந்தீர் ஆரியரே!
நீள முகமும். நிமிர்ந்திருக்குங் கொம்பு களும்,
பஞ்சப் பொதிபோல் படர்ந்த திருவடிவும்
மிஞ்சு புறச்சுமையும். வீரத் திருவாலும்
வானத் திடிபோல "மா" வென் றுறுமுவதும்.
ஈளப் பறவை முதுகின்மிசை ஏறிவிட்டால்
வாலைக் குழைத்து வளைத்தடிக்கும் நேர்மையும். பல்
காலம்நான் கண்டு கடுமோக மெய்திவிட்டேன்

பாடல் எண் 18–28, பக்கம் எண் 6

## விநாயகர் நாண்மணி மாலை

### வெண்பா

(உண)ர்வீர், உணர்வீர்,உலகத்தீர்!இங்குப்
(புண)ர்வீர்,அமரருறும் போக(ம்)–கண(ப)தியைப்
(போத வடிவாகப் போற்றிப் பணிந்திடுமின்!
காதலுடன் கஞ்சமலர்க் கால்).

### கலித்துறை

காலைப் பிடித்தேன் கணபதி!நின்பதங் கண்ணி லொற்றி
நூலைப் பலபல வாகச் சமைத்து நொடிப்பொழு(தும்)
வேலைத் தவறு நிகழாது நல்ல வினைகள் செய்துன்
கோலை மனமெனும் நாட்டின் நிறுத்தல் குறியெனக்கே. 20

### விருத்தம்

எனக்கு வேண்டும் வரங்களை
இசைப்பேன் கேளாய் கணபதி!
மனத்திற் சலன மில்லாமல்,
மதியில் இருளே தோன்றாமல்,
நினைக்கும் பொழுது நின்மவுன
நிலைவந் திடநீ செயல்வேண்டும்.
கனக்குஞ் செல்வம், நூறுவயது:
இவையும் தரநீ கடவாயே.

### அகவல்

கடமை யாவன; தன்னைக் கட்டுதல்
பிறர்துயர் தீர்த்தல், பிறர் நலம் வேண்டுதல்
விநாயக தேவனாய், வேலுடைக் குமரனாய்,
நாரா யணனாய், நதிச்சடை முடியனாய்
பிறநாட் டிருப்போர் பெயர்பல கூறி,

அல்லா! யெஹோவா! எனத்தொழு தன்புறும்
தேவருந் தானாய், திருமகள், பாரதி,
உமையெனுந் தேவியர் உகந்தவான் பொருளாய்,
உலகெலாங் காக்கும் ஒருவனைப் போற்றுதல்,

இந்நான் கேயிப் பூமி லெவாக்கும்
கடமை யெனப்படும்;பயனிதில் நான்காம்;
அறம்;பொருள், இன்பம், வீடெனு முறையே,
தன்னை யாளுஞ் சமர்த்தெனக் கருள்வாய்,
மணக்குள விநாயகா!வான்மறைத் தலைவா!
தனைத்தான் ஆளுந் தன்மைநான் பெற்றிடில்.

எல்லாப் பயன்களும் தாமே எய்தும்,
அசையா நெஞ்சம் அருள்வாய்; உயிரெலாம்
இன்புற் றிருக்க வேண்டிநின் இருதாள்
பணிவதே தொழிலெனக் கொண்டு
கணபதி தேவா! வாழ்வேன் களித்தே.

# 3. பன்னிரு திருமுறை

## அ. பெரிய புராணம்

### சண்டேசுர நாயனார் புராணம்

தங்கும் அகில யோனிகட்கும் மேலாம் பெருமைத்
தகைமையென
பொங்கு புனித தீர்த்தங்கள் எல்லாம் என்றும் பொருந்துவன
துங்க அமரர் திருமுனிவர் கணங்கள் சூழ்ந்து பிரியாத
அங்கம் அனைத்தும் தாமுடைய அல்லவோ? நல் ஆனினங்கள்
ஆய சிறப்பினால் பெற்ற அன்றே மன்றுள் நடம் புரியும்
நாயனார்க்கு வளர் மதியும் நதியும் நகு
வெண்டலைத் தொடையும்
மேய வேணித் திரு முடிமேல் விரும்பி ஆடி
அருளுதற்குத்
தூய திருமஞ்சனம் ஐந்தும் அளிக்கும் உரிமைச்
சுரபிகள் தாம்
சீலமுடைய கோக்குலங்கள் சிறக்கும் தகைமைத்
தேவருடன்
காலம் முழுதும் உலகனைத்தும் காக்கும் முதல்
காரணர் ஆகும்
நீலகண்டர் செய்ய சடை நிருத்தர் சாத்து நீறுதரும்
மூலம் அவதாரம் செய்யும் மூர்த்தம் என்றால்
முடிவு என்னோ

❖❖❖❖

ஆன் நிரைகள் அரு அருந்தி
அசைவிடாது அணைந்து அயரப்
பால் நுரைவாய்த் தாய் முலையில்
பற்றும் இளங் கன்றினமும்
தான் உணவு மறந்தொழியத்
தடமருப்பின் விடைக் குலமும்
மான் முதலாம் கான் விலங்கும்
மயிர் மகிழ்ந்து வந்தணைய

❖❖❖❖

கன்றொடு பால்மறை நாகு
கறப்பன பால் ஆவும்
புன்தலை மென்சினை ஆனொடு
நீடு புனிற்றாவும்
வென்றி விடைக்குல மோடும்
இனம் தொறும் வெவ்வேறே
துன்றி நிறைந்துள சூழ
லுடன்பல தோழங்கள்

❖❖❖❖

ஆவின் நிறைக்குலம் அப்படி
பலக அளித்தென்றும்
கோவலர் ஏவல் புரிந்திட
ஆயர் குலம் பேனும்
காவலர் தம்பெரு மானடி
அன்புறு கானத்தின்
மேவு துணைக்கரு விக்குழல்
வாசனை மேல் கொண்டார்

## ஆ. ஆனாய நாயனார் புராணம்

ஆனிரை கூட வகன்புற விற்கொடு சென்றேறிக்
கானுறை தீய விலங்குறு நோய்கள் கடிந்தெங்குத்
தூநறு மென்புலருந்தி விரும்பிய தூநீருண்
டுனமி லாய முலப்பில பல்க வளித்துள்ளாா

❖❖❖❖

கன்றோடு பான்மறை நாகு கறப்பன பாலாவும்
புன்றலை மென்சினை யானொடு நீடு புனிற்றாவும்
வென்றி விடைக்குல மோடு மினந்தொறும் வெவ்வேறே
துன்றி நிறைந்துள சூழ லுடன் பல தோழங்கள்

❖❖❖❖

ஆவி னிரைக்குல மப்படி பல்க வளித்தென்றுங்
கோவல ரேவல் புரிந்திட வாயர் குலம்பேணுங்
காவலர் தம்பெரு மானடி யன்புறு கானத்தின்
மேவு துளைக்கரு விக்குழல் வாசைன மேல்கொண்டார்.

## எறிபத்த நாயனார் புராணம்

களியா னையினார் உரியாய் சிவதா
எளியார் வலியாம் இறைவா சிவதா
அளியார் அடியார் அறிவே சிவதா
தெளிவார் அமுதே சிவதா சிவதா

**முதல் திருமுறை** *(பதிகம் எண்: 009)* **பண்: நட்டபாடை**

படைப்புந்நிலை யிறுதிப்பயன் பருமையொடு நேர்மை
கிடைப்பல்கண முடையான்கிறி பூதப்படை யானூர்
புடைப்பாளையின் கமுகின்னொடு புன்னைமலர் நாற்றம்
விடைத்தேவரு தென்றன்மிகு வேணுபுர மதுவே.

**திருப்புகலி** – *(பதிகம் எண்: 104)* **பண்: வியாழக்குறிஞ்சி**

ஏல மலிகுழலா ரிசைபாடி யெழுந்தருளாற் சென்று
சோலை மலிசுனையிற் குடைந்தாடித் துதிசெய்ய
ஆலை மலிபுகைபோ யண்டர்வானத்தை மூடிநின்று நல்ல
மாலை யதுசெய்யும் புகலிப் பதியாமே.

**திருவையாறு** *(பதிகம் எண்: 36)* **பண்: தக்கராகம்**

கலையார் மதியோ டுரநீரும்
நிலையார் சடையா ரிடமாகும்
மலையா ரமுமா மணிசந்தோ
டலையார் புனல்சே ருமையாறே.

**திருக்கானூர்** *(பதிகம் எண்: 073)* **பண்: தக்கேசி**

வானார்சோதி மன்னுசென்னி வன்னி புனங்கொன்றைத்
தேனார்போது தானார்கங்கை திங்க ளொடுசூடி
மானேர்நோக்கி கண்டங்குவப்ப மாலை யாடுவார்
கானூர்மேய கண்ணார்நெற்றி யானூர் செல்வரே.

**திருச்சிராப்பள்ளி** *(பதிகம் எண்: 98)* **பண்: குறிஞ்சி**

நன்றுடையானைத் தீயதிலானை நரைவெள்ளே
றொன்றுடையானை யுமையொருபாக முடையானைச்
சென்றடையாத திருவுடையானைச் சிராப்பள்ளிக்
குன்றுடையானைக் கூறவென்னுள்ளங் குளிரும்மே.

**திருநறையூர்ச்சித்தீச்சரம்** *(பதிகம் எண்: 71)* **பண்: தக்கேசி**

பிறைகொள்சடையர் புலியினுரியர் பேழ்வாய் நாகத்தர்
கறைகொள்கண்டர் கபாலமேந்துங் கையர் கங்காளர்
மறைகொள்கீதம் பாடச்சேடர் மனையின் மகிழ்வெய்திச்
சிறைகொள்வண்டு தேனார்நறையூர்ச் சித்தீச் சரத்தாரே.

**திருக்குரங்கணின்முட்டம்** *(பதிகம் எண்: 31)*
**பண்: தக்கராகம்**

விழுநீர் மழுவாட் படையண் ணல்விளங்கும்
கழுநீர் குவளைம் மலரக் கயல்பாயும்
கொழுநீர் வயல்சூழ்ந் தகுரங் கணின்முட்டம்
தொழுநீர் மையர்தீ துறுதுன் பமிலரே.

**திருச்சேய்ஞலூர்** *(பதிகம் எண்: 48)* **பண்: பழந்தக்கராகம்**

நூலடைந்த கொள்கையாலே நுன்னடி கூடுதற்கு
மாலடைந்த நால்வர்கேட்க நல்கிய நல்லறத்தை
ஆலடைந்த நீழன்மேவி யருமறை சொன்னதென்னே
சேலடைந்த தண்கழனிச் சேய்ஞலூர் மேயவனே.?

## இ. நான்காம் திருமுறை

**திருவையாறு** **பண் : காந்தாரம்**

போழிளங் கண்ணியி னானைப் பூந்துகி லாளொடும் பாடி
வாழியம் யோற்றியென் றேத்தி வட்டமிட் டாடா வருவேன்
ஆழி வலவனின் றேத்தும் ஐயா றடைகின்ற போது
கோழி பெடையொடுங் கூடிக் குளிர்ந்து வருவன கண்டேன்
கண்டே னவர்திருப் பாதங் கண்டறி யாதன கண்டேன்.

# 4. நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்

## அ. திருப்பாவை

நோற்றுச்சுவர்க்கம் புகுகின்ற அம்மனாய்
மாற்றமும் தாராரோ? வாசல்திறவாதார்

நாற்றத்துழாய் முடி நாராயணன் நம்மால்
போற்றப்பறை தரும் புண்ணியனால் பண்டு ஒருநாள்
கூற்றறத்தின் வாய்வீழ்ந்த கும்பகர்ணனும்
தோற்றும் உனக்கே பெருந்துயில்தான் தந்தானோ
ஆற்ற அனந்தலுடையாய்! அருங்கலமே
தேற்றமாய் வந்து திறவேலொர் எம்பாவாய்.

❖❖❖❖

ஏற்ற கலங்கள் எதிர்பொங்கி மீதளிப்ப
மாற்றாதே பால்சொரியும் வள்ளல் பெரும் பசுக்கள்
ஆற்றப் படைத்தான் மகனே அறிவுறாய்
ஊற்றமுடையாய் பெரியாய் உலகினில்
தோற்றமாய் நின்ற சுடரே துயிலெழாய்
மாற்றார் உனக்கு வலிதொலைந்து உன்வாசற்கண்
ஆற்றாது வந்து உன்னடி பணியுமா போலே
போற்றியாம் வந்தோம் புகழ்ந்தேலொ ரெம்பாவாய் பா. எண் : 21

❖❖❖❖

கறவைகள் பின்சென்று கானம் சேர்த்துண்போம்
அறிவொன்றும் இல்லாத ஆய்க்குலத்து டு உன்தன்னைப்
பிறவி பெறுந்தனை புண்ணியம் யாமுடையோம்
குறைவொன்றுமில்லாத கோவிந்தா உன்தன்னோடு
உறவேல் நமக்கிங் கொழிக்க வொழியாது
அறியாத பிள்ளைகளோம் அன்பினால் உன்தன்னைச்
சிறுபேர் அழைத்தனவும் சீறி யருளாதே
இறைவாக நீ தாராய் பறையேலொ ரெம்பாவாய்

❖❖❖❖

உந்து மதங்களிற்றன், ஓடாத தோள் வலியன்.
நந்தகோபாலன் மருமகனே! நப்பின்னாய்!
கந்தம் கமழும் குழலி ! கடை திறவாய்
வந்தெங்கும் கோழி அழைத்தனகாண்: மாதவிப்
பந்தல்மேல் பல்கால் குயிலினங்கள் கூவினகாண் !

பந்தார்விரலி உன் மைத்துனன் பேர் பாடச்
செந்தா மரைக்கையால் சீரார் வளையொலிப்ப
வந்து திறவாய் மகிழ்ந்தேலோ ரெம்பாவாய்!

## ஆ. நாலாயிரத் திவ்விய பிரபந்தம்

பாம்பணைமேல் பாற்கடலுள்
பள்ளி யமர்ந்ததுவும்
காம்பணைதோள் பின்னைக்கா
ஏறுடனேழ் செற்றதுவும்
தேம்பணைய சோலை
மராமரமேழ் எய்ததுவும்
பூம்பிணைய தண்டுழாய்ப்
பொன்முடியும் போரேறே

பா. எண் 2835

பலபலவே யாபரணம்
பேரும் பலபலவே
பலபலவே சோதி
வடிவுபண் பெண்ணில
பலபல கண்டுண்டு
கேட்டுற்று மோந்தின்பம்
பலபலவே ஞானமும்
பாம்பணை மேலாற்கேயோ! பா. எண் 2834

தாழை தண்ணாம்பல் தடம்பெரும் பொய்கைவாய்
வாழு முதலை வலைப்பட்டு வாதிப்புண்
வேழ் துயர்கெட விண்ணோர் பெருமானாய்
ஆழிபணி கொண்டானால் இன்று முற்றும் பா. எண் 220

## இ. திருவாய்மொழி

### ஆறாம்பத்து (7)

மனம் பரிவோடு அழுக்கு மானிட
சாதியில் தான் பிறந்து
தனக்கு வேண்டு உருக்கொண்டு தான் தன்
சீற்றத்தினை முடிக்கும்
புனத் துழாய் முடி மாலை மார்பன் என்
அப்பன் தன் மாயங்களே
நினைக்கும் நெஞ்சு உடையேன் எனக்கு இனி
யார் நிகர் நீள் நிலத்தே?

❖❖❖❖

காத்த எம் கூத்தா ஓ மலை ஏந்திக் கல் மாரி தன்னை
பூத்தண் துழாய் முடியாய் புனை கொன்றை அம் செஞ்சடையாய்
வாய்த்த என் நான்முகனே வந்து என் ஆருயிர் நீ ஆனால்
ஏத்து அரும் கீர்த்தியினால் உன்னை உங்குத் தலைபெய்வனே?

❖❖❖❖

அம் கள் மலர்த் தண் துழாய் முடி அச்சுதனே அருளாய்
திங்களும் ஞாயிறும் ஆய் செழும் பல்சுடர் ஆய் இருளாய்
பொங்கு பொழி மழையாய் புகழாய் பழியாய் பின்னும் நீ
வெம் கண் வெம் கூற்றமும் ஆம் இவை என்ன விசித்திரமே!

## 5. அபிராமி அந்தாதி

தங்கச் சிலை கொண்டு தானவர் முப்புரம் சாய்ந்துமத
வெங்கண் கரி யுரி போர்த்த செஞ்சேவகன் மெய்யடையக்
கொங்கை குரும்பைக் குறியிட்ட நாயகி, கோகனச்
செங்கைக் கரும்பும் மலரும் எப்போதும் என் சிந்தையதே!
(62 ஆம் பாடல்)

❖❖❖❖

விரவும் புதுமலர் இட்டு நின் பாத விரைக் கமலம்
இரவும் பகலும் இறைஞ்ச வல்லார் இமையோர் எவரும்
பரவும் பதமும் அயிராவதமும் பகீரதியும்
உரவும் குலிசமும் கற்பகக் காவும் உடையவரே (83 ஆம் பாடல்)

❖❖❖❖

மெல்லிய நுண்இடைமின் அனையாளை விரிசடையோன்
புல்லிய மென் முலைப் பொன் அனையாளை, புகழ்ந்துமறை
சொல்லிய வண்ணம் தொழும் அடியாரைத் தொழுபவர்க்கு
பல்லியம் ஆர்த்து எழ வெண்பகடு ஊறும் பதம் தருமே

(91 ஆம் பாடல்)

## 6. கோளறு பதிகம்

பலப்பல வேடமாகும் பரன் நாரி பாகன்
பசுவேறும் எங்கள் பரமன்
சலமக ளோடெருக்கு முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
மலர்மிசை யோனுமாலும் மறையோடு தேவர்
வருகால மான பலவும்
அலைகடன் மேருநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே

## 7. சித்தர் பாடல்கள்

சைவ மானதடி ..... அகப்பேய்
தானாய் நின்றதடி
சைவம் இல்லையாகில்..... அகப்பேய்
சலம்வருங் கண்டாயே

❖❖❖❖

தானற நின்றவிடம்..... அகப்பேய்
சைவங் கண்டாயே
ஊனற நின்றவர்க்கே..... அகப்பேய்
ஊனமொன்று இல்லையடி.

❖❖❖❖

மாடும் மனைகளும் மக்களுஞ் சுற்றமும் வான்பொருளும்
வீடும் மணிகளும் வெண்பொன்னுஞ் செம்பொன்னுஞ் வெண்கலமும்
காடும் கரைகளும் கல்லாம் பணியுங் கரிபரியும்
தேடும் பலபண்டம் நில்லா சிவகதி சேர்மின்களே. 23

❖❖❖❖

ஆடுமயிலே நடமாடு மயிலே எங்கள்
ஆதியணி சேடனைக் கண்டாடுமயிலே!
கூடுபோகு முன்னங்கதி கொள்ளுமயிலே – என்றும்
குறையாமல் மோனநெறி கொள்ளுமயிலே

❖❖❖❖

மாமிச மானால் எலும்புண்டு சதை
வாங்கிஓடு கழன்று விடும்
ஆமிச மிப்படிச் சத்தியென்றே விளை
யாடிக் கும்மி அடியுங்கடி.

## 8. கந்தர் அனுபூதி

மகமாயை களைந்திட வல்லபிரான்
முகமாறு மொழிந்து மொழிந்திலனே
அகமாடை மடந்தையர் என்றயரும்
சகமாயையுள் நின்று தியங்குவதே.

❖❖❖❖

கார்மாமிசை காலன் வரிற்கலபத்
தேர்மாமிசை வந்தெதிரப் படுவாய்
தார்மார்ப வலாரிதலாரி யெனும்
சூர்மா மடியத் தொடு வேலவனே.

## 9. திருவெம்பாவை

பைங்குவளைக் கார்மலரால் செங்கமலப் பைம்போதால்
அங்கம் குருகினத்தால் பின்னும் அரவத்தால்
தங்கள் மலம் கழுவுவார் வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும் எம் கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவில் புகப் பாய்ந்து பாய்ந்து நம்
சங்கம் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல் பொங்கப்
பங்கயப் பூம்புனல் பாய்ந்து ஆடு ஏலொர் எம்பாவாய்.

❖❖❖❖

# வகுப்பு - IX

## 1. ஔவையார் பாடல்கள்

கூரிய வாளாற் குறைபட்ட கூன்பலா
ஓரிலையாய்க் கொம்பாய் உயர்மரமாய் – சீரிய
வண்டுபோற் கொட்டையாய் வன்காயாய்ப் பின்பழமாய்ப்
பண்டுபோல் நிற்கப் பணி

❖❖❖❖

வெய்தாய் நறுவிதாய் வேண்டளவும் தின்பதாய்
நெய்தான் அளாவி நிறம்பசந்து – பொய்ய
அடகென்று சொல்லி அமுதத்தை இட்டார்
கடகஞ் செறியாதோ கைக்கு

❖❖❖❖

தடவுநிலைப் பலவின் நாஞ்சிற் பொருநன்
மடவன் மன்ற செந்நாப் புலவீர்!
வளைக்கை விறலியர் படப்பைக் கொய்த
அடகின் கண்ணுறை யாக யாம் சில
அரிசி வேண்டினெம் ஆகத், தான்பிற
வரிசை அறிதலால், தன்னும் தூக்கி
இருங்கடறு வளைஇய குன்றத் தன்ன
பெருங்களிறு நல்கி யோனே அன்னதோர்
தேற்றா ஈகையும் உளது கொல்
போற்றார் அம்ம பெரியோர்தம் கடனே!

❖❖❖❖

ஆலைப் பலாவாக்க லாமோ அருஞ்சுணங்கள்
வாலை நிமிர்க் வசமாமோ – நீலநிறக்
காக்கைதனைப் பேசுவிக்க லாமோ கருணையிலா
மூர்க்கனைச் சீராக்க லாமோ?

# 2. பன்னிரு திருமுறை

## அ. தேவாரம்

கள்ளி முதுகாட்டில் ஆடி கண்டாய் காலனையும்
காலால் கடந்தான் கண்டாய்
புள்ளி உழை மானின் தோலான் கண்டாய் புலி
உரிசேர் ஆடைப் புனிதன் கண்டாய்
வெள்ளி மிளிர் பிறை முடிமேல் சூடி கண்டாய்
வெண் நீற்றான் கண்டாய் நம் செந்தில் மேய
வள்ளி மணாளற்குத் தாதை கண்டாய்–மறைக்காட்டு
உறையும் மணாளன் தானே.

மூரி முழங்கு ஒலிநீர் ஆனான் கண்டாய்
முழுத்தழல் போல் மேனி முதல்வன் கண்டாய்
ஏரி நிறைந்தனைய செல்வன் கண்டாய் இன்
அடியார்க்கு இன்பம் விளைவிப்பான் கண்டாய்
ஆரியன் கண்டாய் தமிழன் கண்டாய்
அண்ணாமலை உறையும் அண்ணல் கண்டாய்
வாரி மதகளிறே போல்வான்
கண்டாய்–மறைக்காட்டு உறையும் மணாளன் தானே.

## ஆ. திருவாசகம்

சச்சையனே மிக்கதண் புனல்
    விண்கால் நிலம் நெருப்பு ஆம்
விச்சையனே விட்டிடுதி கண்டாய்
வெளியாய் கரியாய்
பச்சையனே செய்ய மேனியானே
ஒண் பட அரவம்
கச்சையனே கடந்தாய் தடம்
தாள அடல் கரியே

## இ. முதல் திருமுறை

### கீழைத்திருக்காட்டுப்பள்ளி (பதிகம் எண்: 05)

**பண்: நட்டபாடை**

திரைகளெல் லாமல ருஞ்சுமந்து செழுமணி முத்தொடு பொன்வரன்றிக்
கரைகளெல் லாமணி சேர்ந்துரிஞ்சிக் காவிரி கால்பொரு காட்டுப்பள்ளி
உரைகளெல் லாமுணர் வெய்திநல்ல வுத்தம ராயுயர்ந் தாருலகில்
அரவமெல் லாமரை யார்த்தசெல்வர்க் காட்செய வல்ல லறுக்கலாமே.

### திருஇடும்பாவனம் – *(பதிகம் எண்: 17)* பண்: நட்டபாடை

மலையார்தரு மடவாளொரு பாகம்மகிழ் வெய்தி
நிலையார்தரு நிமலன்வலி நிலவும்புக ழொளிசேர்
கலையார்தரு புலவோரவர் காவன்மிகு குன்றில்
இலையார்தரு பொழில்சூழ்தரு மிடும்பாவன மிதுவே.

### திருவாலங்காடு – *(பதிகம் எண்: 45)* பண்: தக்கராகம்

கேடும்பிறவியு மாக்கினாருங் கேடிலா
வீடுமாநெறி விளம்பினாரெம் விகிர்தனார்
காடுஞ்சுடலையுங் கைக்கொண்டெல்லிக் கணப்பேயோ
டாடும்பழையனூ ராலங்காட்டெம் அடிகளே.

## ஈ. இரண்டாம் திருமுறை

### திருநாகேச்சுரம் – (பதிகம் எண்: 24) பண்: இந்தளம்

சிறவார் புரமூன் றெரியச் சிலையில்
உறவார் கணையுய்த் தவனே உயரும்
நறவார் பொழில்நா கேச்சுர நகருள்
அறவா எனவல் வினையா சறுமே.

### திருமறைக்காடு – *(பதிகம் எண்: 37)* பண்: இந்தளம்

சதுரம் மறைதான் றுதிசெய் துவணங்கும்
மதுரம் பொழில்சூழ் மறைக்காட் டுறைமைந்தா
இதுநன் கிறைவைத் தருள்செய் கவெனக்குன்
கதவந் திருக்காப்புக் கொள்ளுங் கருத்தாலே.

சங்கந் தரளம் மவைதான் கரைக்கெற்றும்
வங்கக் கடல்சூழ் மறைக்காட் டுறைமைந்தா
மங்கை யுமைபா கமுமா கவிதென்கொல்
கங்கை சடைமே லடைவித் தகருத்தே.

**திருச்சாய்க்காடு** – *(பதிகம் எண்: 38)* **பண்: இந்தளம்**

நித்த லுந்நிய மஞ்செய்து நீர்மலர் தூவிச்
சித்த மொன்றவல் லார்க்கரு ளுஞ்சிவன் கோயில்
மத்த யானையின் கோடும்வண் பீலியும் வாரித்
தத்துநீர்ப் பொன்னி சாகர மேவுசாய்க் காடே.

**திருச்சாய்க்காடு** – *(பதிகம் எண்: 41)* **பண்: சீகாமரம்**

மண்புகார் வான்புகுவர் மனமிளையார் பசியாலுங்
கண்புகார் பிணியறியார் கற்றாருங் கேட்டாரும்
விண்புகா ரெனவேண்டா வெண்மாட நெடுவீதித்
தண்புகார்ச் சாய்க்காட்டெந் தலைவன்றாள் சார்ந்தாரே.

**திருவெண்காடு** – *(பதிகம் எண்: 48)* **பண்: சீகாமரம்**

கண்காட்டு நுதலானுங் கனல்காட்டுங் கையானும்
பெண்காட்டு முருவானும் பிறைகாட்டுஞ் சடையானும்
பண்காட்டு மிசையானும் பயிர்காட்டும் புயலானும்
வெண்காட்டி லுறைவானும் விடைகாட்டுங் கொடியானே.

பேயடையா பிரிவெய்தும் பிள்ளையினோ டுள்ளநினை
வாயினவே வரம்பெறுவ ரையுறவேண் டாவொன்றும்
வேயனதோ ளுமைபங்கன் வெண்காட்டு முக்குளநீர்
தோய்வினையா ரவர்தம்மைத் தோயாவாந் தீவினையே

## 3. நாலாயிர திவ்வியப் பிரபந்தம்

இருளிரியச் சுடர்மணிக ளிமைக்கும் நெற்றி
இனத்துத்தி யணிபணமா யிரங்க ளார்த்த
அரவரசப் பெருஞ்சோதி யனந்த னென்னும்
அணிவிளங்கு முயர்வெள்ளை யணையை மேவி
திருவரங்கப் பெருநகருள் தெண்ணீர்ப் பொன்னி

திரைக்கையா லடிவருடப் பள்ளி கொள்ளும்
கருமணியைக் கோமளத்தைக் கண்டு கொண்டுஎன்
கண்ணினை களென்றுகொலொ களிக்கும் நாளே!

## 4. திரு அருட்பா

திருஓங்கு புண்ணிச் செயல்ஓங்கி அன்பருள்
திறல்ஓங்கு செல்வம் ஓங்கச்
செறிவோங்க அறிவோங்கி நிறைவான இன்பம்
திகழ்ந்தோங்க அருள்கொடுத்து
மருஓங்கு செங்கமல மலர்ஓங்கு வணம்ஓங்க
வளர்கருணை மயம்ஓங்கிஓர்
வரம்ஓங்கு தெள்ளமுத வயம்ஓங்கி ஆனந்த
வடிவாடிக ஓங்கிஞான
உருஒங்கும் உணர்வின் நிறை ஒளிஓங்கி ஓங்கும்மயில்
ஊர்ந்தோங்கி எவ்வுயிர்க்கும்
உறவோங்கும்நின்பதம்என் உளம்ஓங்கி வளம்ஓங்க
உய்கின்றநாள் எந்தநாள்
தருஓங்கு சென்னையில் கந்தகோட் டத்துள்வளர்
தலம்ஓங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே.

## 5. லலிதாம்பாள் சோபனம்

வெண்கலக் கோட்டையில் வஸந்தருதுகாவல்
வேலியும் கற்பக விருக்ஷமாகும்
தங்கச் செம்புக் கோட்டையில் வேலி ஹரிசந்தனம்
சுசியான கிரீஷ்மருதுகாவல்
ஈயக்கோட்டையின் வேலி சந்தன விருக்ஷங்கள்
எங்குஞ் சுற்றிக்காவல் வருஷருது
முன்னாலிரும்புக் கோட்டையின் வேலி மந்தாரை
வெளுத்த சரத்ருதுகாவல் சோபனம் சோபனம்

அப்புரந்தாமரைப் புஷ்பங்களின் வனம்
ஆறுயோஜனைக்கு நிறைந்திருக்கும்
விப்ரனே அதற்குக் கிழக்காகவே யெங்கும்
சுற்றிக் கதம்பவனம் சோபனம் சோபனம்

## 6. பாரதியார் பாடல்கள்

வயலிடையினிலே – செழுநீர் மடுக் கரையினிலே
அய லெவருமில்லை – தனியே ஆறுதல் கொள்ள வந்தேன்
காற்றடித் ததிலே – மரங்கள் கணக்கிடத் தகுமோ?
நாற்றி னைப் போல – சிதறி நாடெங்கும் வீழ்ந்தனவே
சிறிய திட்டையிலே – உளதோர் தென்னஞ் சிறு தோப்பு
வறியவ னுடைமை – அதனை வாயு பொடிக்கவில்லை
வீழ்ந்தன சிலவாம் – மரங்கள். மீந்தனபலவாம்
வாழ்ந்திருக்க வென்றே அதனை வாயு பொறுத்துவிட்டான்.

❖❖❖❖

ஆதியணி சேடனைக் கண்டு ஆடுமயிலே
கூடுபோகு முன்னங்கதி கொள்ளுமயிலே என்றும்
குறையாமல் மோனநெறி கொள்ளுமயிலே
காற்றுனூணைப் போல மனத்தைக் காட்டு மயிலே – வரும்
காலனையும் தூரத்தில் ஓட்டுமயிலே!

## பொய்யோ?மெய்யோ?

நிற்பதுவே நடப்பதுவே பறப்பதுவே நீங்களெல்லாம்
சொற்பனந் தானோ?–பல தோற்ற மயக்கங்களோ?
கற்பதுவே,கேட்பதுவே,கருதுவதே,நீங்க ளெல்லாம்
அற்பமாயைகளோ?–உம்முள் ஆழ்ந்த பொருளில்லையோ?

வானகமே இளவெயிலே மரச்செறிவே நீங்களெல்லாம்
கானலின் நீரோ?–வெறுங் காட்சிப் பிழைதானோ?
போன தெல்லாம் கனவினைப்போற் புதைந்தழிந்தே போனதனால்
நானுமோர் கனவோ?–இந்த ஞாலமும் பொய்தானோ?

கால மென்றே ஒரு நினைவும் காட்சியென்றே பலநினைவும்
கோலமும் பொய்களோ?–அங்குக் குணங்களும் பொய்களோ?
சோலையிலே மரங்க ளெல்லாம் தோன்றுவதோர் விதையிலென்றால்,
சோலை பொய்யாமோ?–இதைச் சொல்லொடு சேர்ப்பாரோ?

காண்பவெல்லாம் மறையுமென்றால் மறைந்ததெல்லாம்
காண்ப மன்றோ?
வீண்படு பொய்யிலே–நித்தம் விதிதொடர்ந் திடுமோ?
காண்பதுவே உறுதிகண்டோம் காண்பதல்லால் உறுதில்லை
காண்பது சக்தியாம்–இந்தக் காட்சி நித்தியமாம்.

## பாரதியாரின் குயில்பாட்டு

வானரதஞ் சாதிக்கு மாந்தர்நிக ராவாரோ ?
ஆனவரையும் அவர்முயன்று பார்த்தாலும்.
பட்டுமயிர் மூடப் படாத தமதுடலை
எட்டுடையால் மூடிஎதிருமக்கு வந்தாலும்
மீசையையும் தாடியையும் விந்தைசெய்து வானரர்தம்

❖❖❖❖

ஆசை முகத்தினைப்போ லாக்க முயன்றிடினும்
ஆடிக் குதிக்கும் அழகிலுமை நேர்வதற்கே
கூடிக் குடித்துக் குதித்தாலும் கோபுரத்தில்
ஏறத் தெரியாமல் ஏணிவைத்துச்சென்றாலும்.
வேறெத்தைச்செய்தாலும். வேகமுறப் பாய்வதிலே
வானரர்போ லாவரோ ? வாலுக்குப் போவதெங்கே?

❖❖❖❖

ஈனமுறுங் கச்சை இதற்கு நிகராமோ ?
பாகையிலே வாலிருக்கப் பார்த்ததுண்டு. கந்தைபோல்.
வேகமுறத்தாவுகையில் வீசி எழுவதற்கே
தெய்வங் கொடுத்த திருவாலைப்போலாமோ ?
சைவரத்த போசனமும். சாதுரியப் பார்வைகளும்
வானரர்போற் சாதியொன்று மண்ணுலகின் மீதுளதோ?

## விநாயகர் நான்மணி மாலை

### வெண்பா

களியுற்று நின்று கடவுளே!இங்குப்
பழியற்று வாழ்ந்திடக்கண் பார்ப்பாய்–ஒளிபெற்றுக்
கல்வி பலதேர்ந்து கடமையெலாம் நன்காற்றித்
தோல்விகட் டெல்லாம் துறந்து.

### கலித்துறை

துறந்தார் திறமை பெரிதி னும்பெரி தாகுமிங்குக்
குறைந்தா ரைக்காத் தெளியார்க் குணவீந்து குலமகளும்
அறந்தாங்கு மக்களும் நீடூழி வாழ்கென அண்ட மெலாம்
சிறந்தாளும் நாதனைப் போற்றிடுந் தொண்டர் செயுந்தவமே.

### விருந்தம்

தவமே புரியும் வகைய றியேன்,
சலியா துறநெஞ் சறியாது,
சிவமே நாடிப் பொழுதனைத்துந்
தியங்கித் தியங்கி நிற்பேனை
நவமா மணிகள் புனைந்தமுடி
நாதா!கருணா லயனே!தத்
துவமா கியதோர் பிரணவமே!
அஞ்செல் என்று சொல்லதியே

### அகவல்

சொல்லினுக் கரியனாய்ச் சூழ்ச்சிக் கரியனாய்ப்
பல்லுரு வாகிப் படர்ந்தவான் பொருளை,
உள்ளுயி ராகி உலகங் காக்கும்
சக்தியே தானாந் தனிச்சுடர்ப் பொருளை,
சக்தி குமாரனைச் சந்திர மவுலியைப்

பணிந்தவ னுருவிலே பாவனை நாட்டி,
ஓமெனும் பொருளை உளத்திலே நிறுத்தி,
சக்தியைக் காக்குந் தந்திரம் பயின்று

யார்க்கும் எளியனாய், யார்க்கும் வலியனாய்,
யார்க்கும் அன்பனாய்,யார்க்கும் இனியனாய்,

வாழ்ந்திடட விரும்பினேன்;மனமே!நீயதை
ஆழ்ந்து கருதிஆய்ந் தாய்ந்து பலமுறை
சூழ்ந்து, தெளிந்து, பின் சூழ்ந்தார்க் கெல்லாம்
கூறிக் கூறிக் குறைவறத் தேர்ந்து,
தேறித் தேறிநான் சித்திபெற் றிடவே.

நின்னா லியன்ற துணைபுரி வாயேல்,
பொன்னால் உனக்கொரு கோயில் புனைவேன்;
மனமே!எனைநீ வாழ்வித் திடுவாய்!
வீணே யுழலுதல் வேண்டா,
சக்தி குமாரன் சரண்புகழ் வாயே!

## 7. சித்தர் பாடல்கள்

### பாம்பாட்டிச் சித்தர்

தெளிந்து தெளிந்துதெளிந் தாடுபாம்பே – சிவன்
சீர்பாதங் கண்டுதெளிந் தாடுபாம்பே
ஆடும்பாம்பே தெளிந்தாடு பாம்பே – சிவன்
அடியினைக் கண்டோமென் றாடு பாம்பே.

நீடு பதம் நமக்கென்றுஞ் சொந்த மென்றே
நித்திய மென்றே பெரிய முத்தி யென்றே
பாடுபடும் போதுமாதி பாத நினைந்தே
பண்ணிப் பண்ணிப் பரவிநின் றாடுபாம்பே

அண்டபிண்டந் தந்த வெங்கள் ஆதிதேவனை
அகலாம மேல்நினைந் தன்புடன் பணிந்து
எண்திசையும் புகழ்ந்திட ஏத்தி யேத்தியே
ஏகமன மாகநாடி யாடு பாம்பே.

அருவாயும் உருவாயும் அந்தியாயும்
அந்தமாயும் ஒளயாயும் ஆகமமாயும்
திருவாயுங் குருவாயும் சீவனாயும்
செறிந்தவஸ் துவைப் போற்றி யாடு பாம்பே.

## 8. அபிராமி அந்தாதி

திங்கட் பகவின் மணம் நாறும்
சீறடி சென்னிவைக்க
எங்கட்(கு) ஒருதவம் எய்திய வாஎண்
ணிறந்த விண்ணோர்
தங்கட்கும் இந்தத் தவமெய்து
மோதரங் கக்கடலுள்
வெங்கட் பணியணை மேல்துயில்
கூடும் விழுப்பொருளே.

பாடல் எண் : 35

## 9. ராகு-கேது துதி

அரவெனும் ராகு அய்யனே போற்றி
கரவா தருள்வாய் கஷ்டங்கள் நீக்கி
ஆக அருள் புரி அனைத்திலும் வெற்றி
ராகுக் கன்னியே ரம்மியா போற்றி
கேதுத் தேவே கீர்த்தித் திருவே
பாதம் போற்றி பாவம் தீர்ப்பாய்
வாதம் வம்பு வழக்குகள் இன்றி
கேதுத் தேவே கேண்மியாய் ரக்ஷி

## 10. கந்தர் அனுபூதி

திணியான மனோசிலை மீதுனதாள்
அணியார் அரவிந்தம் அரும்புமதோ
பணியாஎன வள்ளி பதம்பணியும்
தணியா அதிமோக தயாபரனே.

கார்மாமிசை காலன் வரிற்கலபத்
தேர்மாமிசை வந்தெதிரப் படுவாய்
தார்மார்ப வலாரிதலாரி யெனும்
சூர்மா மடியத் தொடு வேலவனே.

காளைக்கும ரேசன் எனக் கருதித்
தாளைப் பணியத் தவம்எய் தியவா
பாளைக்குழல் வள்ளி பதம்பணியும்
வேளைச்சுர பூபதி மேருவையே.

கலையே பதறிக் கதறித் தலையூ
டலையே படுமா றதுவாய் விடவோ
கொலையேபுரி வேடர் குலப்பிடி தோய்
மலையே! மலை கூறிடு வாகையனே.

❖❖❖❖

# வகுப்பு - X

## 1. ஔவையார் பாடல்கள்

முத்தெறியும் பெண்ணை முதுநீர் அதுதவிர்ந்து
தத்திய நெய்பால் தலைப்பெய்து – குத்திச்
செருமலைத் தெய்வீகன் திருக்கோவ லூர்க்கு
வருமளவும கொண்டோடி வா.

❖❖❖❖

பொன்மாரி பெய்யும்ஊர் பூம்பருத்தி யாடையாய்
அந்நாள் வயலரிசி யாகுமூர் – எந்நாளும்
தேங்குபுக ழேபடைத்த சேதிமா நாடதனில்
ஓங்கும் திருக்கோவ லூர்

❖❖❖❖

வானம் உளதால் மழையுளதால் மண்ணுலகில்
தானம் உளதால் தயையுளதால் – ஆனபொழுது
எய்த்தோம் இளைத்தோமென் றேமாந் திருப்பாரை
எற்றோமற் றெற்றோமற் றெற்று.

❖❖❖❖

சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்
வைத்ததொரு கல்வி மனப்பழக்கம் – நித்தம்
நடையும் நடைப்பழக்கம் நட்பும் தயையும்
கொடையும் பிறவிக் குணம்

❖❖❖❖

வேழம் உடைத்து மலைநாடு; மேதக்க
சோழ வளநாடு சோறுடைத்து – பூமியர்கோன்
தென்னாடு முத்துடைத்து; தெண்ணீர் வயற்றொண்டை
நன்னாடு சான்றோர் உடைத்து

# 2. பன்னிரு திருமுறை

## அ. திருத்தொண்டர் புராணம்

மாடு விரைப்பொலி சோலையின் வான்மதி வந்தேறச்
சூடு பரப்பிய பண்ணை வரம்பு சுரும்பேற
வீடு பெருக்கிய போர்களின் மேக மிளைத்தேற
நீடு வளத்தது மேன்மழ நாடெனு நீர்நாடு

கொண்டல் வானத்தின் மணிசொரி வனகுலவரைப்பால்
தண்டுணாக்கொன்றை பொன்சொரி வனதள வயற்பால்
வண்டன் முத்தநீர் மண்டுகால் சொரிவன வயற்பாற்
கண்டன் முன்றுறைக் கரி சொரி வனகலங் கடற்பால் (8)

தேனிறைந்த செந்தினை யிடி தருமலைச் சீறூர்
பானிறைந்த புற் பதத்தன முல்லைநீள் பாடி
தூ நெலன்ன நெய் கன்னலின் கனிய தண்டுறையூர்
மீனிறைந்தபே ருணவின வேலைவைப் பிடங்கள்

மல்கு மப்பெரு நிலங்களில் வரைபுணர் குறிஞ்சி
எல்லை யெங்கணு மிறவுள ரேனன் முன் விளைக்கும்
பல் பெரும் புனம் பயில் வன படர் சிறைத் தோகை
சொல்லு மப்புனங் காப்பவுஞ் சுரி குழற் தோகை

பேறு வேறு சூழிமையவ ரரம்பையர் பிறந்து
மாறில் வேடரு மாதரு மாகவே வணங்கும்
ஆறு சூழ்சடை யண்ணலார் திருவிடைச் சுரமுஞ்
கூறு மேன்மையின் மிக்கதந் நாடுவண் குறிஞ்சி

அம்பொன் வார்குழற் கொடிச்சிய ருடரை மகளிர்
வம்புலா மலர்ச்சுனைபடிந்தாடு நீள் வரம்பின்
உம்பர் நாயகர் திருக்கழுக்குன்றமு முடைத்தாற்
கொம்பர் வண்டு சூழ் குறிஞ்சி செய் தவங்குறையுளதோ

சொல்லு  மெல்லையின் புறத்தன துணர்ச்சுரும் பலைக்கும்
பல் பெரும்புனற் கானியா றிடையிடை பரந்து
கொல்லை மெல்லிணர்க் குருந்தின்மேற் படர்ந்த பூம் பந்தர்
முல்லை மென் புதன் முயலுகைத் தடங்கு நீண் முல்லை

## ஆ. தேவாரம்

திருச்சிற்றம்பலம்!
புற்றினில் வாழும் அரவுக்கும் திங்கட்கும்   கங்கை என்னும்
சிற்றிடையாட்கும் செறி தரு  கண்ணிக்கும்  சேர்விடமாம்
பெற்றுடையான் பெரும்பேச்சுடையான் பிரியாது எனையாள்
விற்றுடையான் ஒற்றியூருடையான் தன் விரிசடையே
திருச்சிற்றம்பலம்!

❖❖❖❖

அங்கமாய் ஆதியாய் வேதமாகி
அருமறையோ ஐம்பூதம் தானோயாகி
பங்கமாய்ப் பல சொல்லும் தானேயாகி
பால்மதியோடு ஆதியாய்ப் பான்மையாகி
கங்கையாய்க் காவிரியாய்க் கன்னியாகி
எங்குமாய் ஏறூர்ந்த செல்வனாகி
எழுஞ்சுடராய் எம்அடிகள் நின்றவாரே
திருச்சிற்றம்பலம்

## இ. நான்காம் திருமுறை

### திருவையாறு

**பொது**

**பண் : பழந்தக்கராகம் - பாடல்-131**

மின்னானா யுருமானாய்
வேதத்தின் பொருளானாய்
பொன்னானாய் மணியானாய்
பொருகடல்வாய் முத்தானாய்

நின்னானா ரிருவர்க்குங்
காண்பரிய நிமிர்சோதி
அன்னானே யையாறர்க்
காளாய்நா னுய்ந்தேனே.

**திருவாரூர்** **பண் : சீகாமரம்**

பக்கமே பாரிடங்கள் சூழப் படுதலையில்
புக்ககூர்ப் பிச்சையேற் றுண்டு பொலிவுடைத்தாய்க்
கொக்கிறகின் றூவல் கொடியெடுத்த கோவணத்தோ
டக்கணிந்த வம்மானை நான்கண்ட தாரூரே.

❖❖❖❖

சேய வுலகமுஞ் செல்சார்வு மானானை
மாயப்போர் வல்லானை மாலைதாழ் மார்பானை
வேயொத்த தோளியர்த மென்முலைமேற் றண்சாந்தின்
ஆயத் திடையானை நான்கண்ட தாரூரே.

❖❖❖❖

காண்டலே கருத்தாய் நினைந்திருந்தேன் மனம்புகுந்
தாய் கழலடி
பூண்டுகொண் டொழிந்தேன்
புறம்போயினா லறையோ
ஈண்டுமாடங்க ணீண்டமா ளிகைமே லெழுகொடி
வானிளம்மதி
தீண்டிவந் துலவுந்
திருவாரூ ரம்மானே.

❖❖❖❖

அருமணித்தடம் பூண்முலை யரம்பையரொ
டருளிப் பாடியர்
உரிமையிற் றொழுவார்
உருத்திர பல்கணத்தார்
விரிசடைவிர திகளந்தணர் சைவர்பாசு
பதர் கபாலிகள்
தெருவினிற் பொலியுந்
திருவாரூ ரம்மானே.

**கோயில்** **பண் : கொல்லி**

மறையனார் மழுவொன் றேந்தி
மணிநிலா வெறிக்குஞ் சென்னி
இறைவனா ரெம்பி ரானா
ரேத்துவா ரிடர்க ளைப்பார்
சிறைகொணீர்த் தில்லை தன்னுட்
டிகழ்ந்தசிற் றம்ப லத்தே
அறைகழ லார்க்க நின்று
வனலெரி யாடு மாறே.

❖❖❖❖

பொய்யினைத் தவிர விட்டுப்
புறமலா வடிமை செய்ய
ஐயநீ யருளிச் செய்யா
யாதியே யாதி மூர்த்தீ
வையகந் தன்னின் மிக்க
மல்குசிற் றம்ப லத்தே
பையநுன் னாடல் காண்பான்
பரமநான் வந்த வாறே.

## ஈ. முதல் திருமுறை

**திருவேணுபுரம்** – *(பதிகம் எண்: 09)* **பண்: நட்டபாடை**

படைப்புந்நிலை யிறுதிப்பயன் பருமையொடு நேர்மை
கிடைப்பல்கண முடையான்கிறி பூதப்படை யானூர்
புடைப்பாளையின் கமுகின்னொடு புன்னைமலர் நாற்றம்
விடைத்தேவரு தென்றன்மிகு வேணுபுர மதுவே.

**திருப்புகலி** – *(பதிகம் எண்: 104)* **பண்: வியாழக்குறிஞ்சி**

ஆட லரவசைத்தா னருமாமறை தான்விரித்தான் கொன்றை
சூடிய செஞ்சடையான் சுடுகா டமர்ந்தபிரான்
ஏடவிழ் மாமலையா ளொருபாக மமர்ந்தடியா ரேத்த
ஆடிய வெம்மிறையார் புகலிப் பதியாமே

## உ. இரண்டாம் திருமுறை

### 1. திருநல்லூர் *(பதிகம் எண்: 57)*

**பண்: காந்தாரம்**

பெண்ணமருந் திருமேனி யுடையீர் பிறங்குசடைதாழப்
பண்ணமரும் நான்மறையே பாடியாடல் பயில்கின்றீர்
திண்ணமரும் பைம்பொழிலும் வயலுஞ்சூழ்ந்த திருநல்லூர்
மண்ணமருங் கோயிலே கோயிலாக மகிழ்ந்தீரே.

## 3. திருமுருகு ஆற்றுப்படை

### அருவி
### அருவியின் காட்சியும் இயற்கைவளமும்

பலவுடன்
வேறு பல் துகிலின் நுடங்கி, அகில் சுமந்து,
ஆர முழு முதல் உருட்டி, வேரல்
பூவுடை அலங்கு சினை புலம்ப, வேர் கீண்டு, விண்
பொரு நெடு வரைப் பரிதியின் தொடுத்த
தண் கமழ் அலர் இறால் சிதைய, நன் பல
ஆசினி முது சுளை கலாவ, மீமிசை
நாக நறு மலர் உதிர, யூகமொடு

மா முக முசுக்கலை பனிப்ப, பூ நுதல் இரும் பிடி
குளிர்ப்ப வீசி,பெருங் களிற்று முத்துடை வான்
கோடு தழீஇ,தத்துற்று
நன் பொன் மணி நிறம் கிளர,பொன் கொழியா, வாழை
முழு முதல் துமிய, தாழை
இளநீர் விழுக் குலை உதிர, தாக்கி,
கறிக் கொடிக் கருந் துணர் சாய, பொறிப் புற மட
நடை மஞ்ஞை பலவுடன் வெரீஇ.
கோழி வயப் பெடை இரிய, கேழலொடு இரும் பனை
வெளிற்றின் புன் சாய் அன்ன குரூஉ மயிர் யாக்கைக்

குடா வடி உளியம்
பெருங் கல் விடர்அளைச் செறிய,கருங் கோட்டு
ஆமா நல் ஏறு சிலைப்ப, சேண் நின்று
இழுமென இழிதரும் அருவி,
பழம் முதிர் சோலைமலை கிழவோனே!

## 4. திருஅருட்பா

நீர்உண்டு பொழிகின்ற கார்உண்டு விளைகின்ற
நிலன்உண்டு பலனும்உண்டு
நிதிஉண்டு துதிஉண்டு மதிஉண்டு கதிகொண்ட
நெறிகண்டு நிலையும்உண்டு
ஊர் உண்டு பேர்உண்டு மணிஉண்டு பணிஉண்டு
உடைஉண்டு கொடையும்உண்டு

❖❖❖❖

உண்டுண்டு மகிழவே உணவுண்டு சாந்தம்உறும்
உளம்உண்டு வளமும்உண்டு
தேர்உண்டு கரிஉண்டு பரிஉண்டு மற்றுள்ள
செல்வங்கள் யாவும்உண்டு
தேன்உண்டு வண்டுறு கடம்பணியும் நின்பதத்
தியானம்உண் டகில்அரசே

## 5. நாலாயிரத் திவ்ய பிரபந்தம்

மாலை யரியுருவன் பாத மலர ணிந்து,
காலை தொழுதெழுமின் கைகோலி – ஞாலம்
அளந்திடந் துண்டுமிழ்ந்த அண்ணலைமற் றல்லாமல்
உள்ளங்கிடந்த வாற்றா லுணர்ந்து.

❖❖❖❖

மலையேழும் மாநிலங்க ளேழும் அதிர,
குலைசூழ் குரைக்கடல்க ளேழும், – முலைசூழ்ந்த
நஞ்சுரத்துப் பெண்ணை நவின்றுண்ட நாவனென்று,
அஞ்சாதென் னெஞ்சே. ஆழை.

❖❖❖❖

நீயன் றுலகளந்தாய் நீண்ட திருமாலே,
நீயன் றுலகிடந்தா யென்பரல் – நீயன்று
காரோதம் முன்கடைந்து பின்னடைத்தாய் மாகடலை,
பேரோத மேனிப் பிரான்.

## 6. கம்பராமாயணம்

கொடிச்சியர் இடித்த சுண்ணம் குங்குமம் கோட்டம் ஏலம்
நடுக்குறு சாந்தம் சிந்தூரத்தொடு நரந்தம் நாகம்
கடுக்கை நாள் வேங்கை கோங்கு பச்சிலை கண்டில் வெண்ணெய்
அடுக்கலின் அளிந்த செந்தேன் அகிலொடு நாறும் அன்றே

## 7. கந்தர் அநுபூதி

கலையே பதறிக் கதறித் தலைஊ
டலையே படும் ஆறுஅதுஆய் விடவோ?
கொலையே புரிவே டர்குலப் பிடி தோய்
மலையே மலைகூறுஇடுவாகையனே

காளைக்கும ரேசன் எனக் கருதித்
தாளைப் பணியத் தவம்எய் தியவா
பாளைக்குழல் வள்ளி பதம்பணியும்
வேளைச்சுர பூபதி மேருவையே

அடியைக் குறியா தறியா மையினால்

முடியக் கெடவோ முறையோ முறையோ
வடிவிக் ரமவேல் மகிபா குறமின்
கொடியைப் புணருங் குணபூ தரனே

## 8. லலிதாம்பாள் சோபனம்

தேவிக்கு உயர நாற்பது முழத்திற்கு மேல்
தேசத்தில் ஒப்பில்லா மேல்கட்டிலில்
யமுனாகைஹாரமாகச் சுற்றியிருக்கின்றாள்.

# 9. பாரதியார் பாடல்கள்

## பாரதியாரின் குயில்பாட்டு

கானப் பறவை கலகலெனும் ஓசையிலும்.
காற்று மரங்களிடைக் காட்டும் இசையினிலும்.
ஆற்றுநீ ரோசை அருவி யொலியினிலும்
நீலப் பெருங்கடலெந் நேரமுமே தானிசைக்கும்
ஓலத் திடையே உதிக்கும் இசையினிலும்
மானுடப் பெண்கள் வளருமொரு காதலினால்
ஊனுருகப் பாடுவதில் ஊறிடுந்தேன் வாரியிலும்.
ஏற்றநீர்ப் பாட்டின் இசையினிலும். நெல்லிடிக்குங்
கோற்றொடியார் குக்குவெனக் கொஞ்சும் ஒலியினிலும்
சுண்ணமிடிப் பார்தஞ் சுவைமிகுந்த பண்களிலும்
பண்ணை மடவார் பழகுபல பாட்டினிலும்
வட்டமிட்டுப் பெண்கள் வளைக்கரங்கள் தாமொலிக்கக்
கொட்டி யிசைத்திடுமோர் கூட்டமுதப் பாட்டினிலும்.
வேயின் குழலொடு வீணைமுத லாமனிதர்
வாயினிலுங் கையாலும் வாசிக்கும் பல்கருவி
நாட்டினிலுங் காட்டினிலும் நாளெல்லாம் நன்றொலிக்கும்
பாட்டினிலும் நெஞ்சைப் பறிகொடுத்தேன் பாவியேன்.

## காளி ஸ்தோத்திரம்

யாதுமாகி நின்றாய்–காளி!–எங்கும் நீதி றைந்தாய்;
தீது நன்மையெல்லாம்–நின்தன்–செயல்க ளன்றி யில்லை.
போதும் இங்கு மாந்தர்–வாழும்–பொய்மை வாழ்க்கை யெல்லாம்
ஆதிசக்தி,தாயே!–என் மீ–தருள் புரிந்து காப்பாய்.

எந்த நாளும் நின்மேல்–தாயே!இசைகள் பாடி வாழ்வேன்;
கந்த னைப்ப யந்தாய்,–தாயே!கருணை வெள்ள மானாய்!
மந்த மாரு தத்தில்–வானில்–மலையி னுச்சி மீதில்,
சிந்தை யெங்கு செல்லும்–அங்குன்–செம்மை தோன்று மன்றே

கர்ம யோக மொன்றே-உலகில்-காக்கு மென்னும் வேதம்;
தர்ம நீதி சிறிதும்-இங்கே-தவற லென்ப தின்றி,
மர்ம மான பொருளாம்-நின்தன்-மலர டிக்கண் நெஞ்சம்,
செம்மை யுற்று நாளும்-சேர்ந்தே-தேசு கூட வேண்டும்.

என்தன் உள்ள வெளியில்-ஞானத்-திரவி யேற வேண்டும்;
குன்ற மொத்த தோளும்-மேருக்-கோல மொத்த வடிவும்,
நன்றை நாடு மனமும்-நீயெந்-நாளு மீதல் வேண்டும்;
ஒன்றை விட்டு மற்றோர்-துயரில்-உழலும் நெஞ்சம் வேண்டா.

வான கத்தி னொளியைக்-கண்டே-மனம கிழ்ச்சி பொங்கி,
யானெ தற்கும் அஞ்சேன்-ஆகி-எந்த நாளும் வாழ்வேன்;
ஞான மொத்த தம்மா!-உவமை-நானு ரைக்கொ ணாதாம்!
வான கத்தி னொளியின்-அழகை-வாழ்த்து மாறி யாதோ?

ஞாயி றென்ற கோளம்-தருமோர்-நல்ல பேரொ ளிக்கே
தேய மீதோர் உவமை-எவரே-தேடி யோத வல்லார்?
வாயி னிக்கும் அம்மா!-அழகாம்-மதியின் இன்ப ஒளியை
நேயமோ டுரைத் தால்-ஆங்கே-நெஞ்சி ளக்க மெய்தும்.

காளி மீது நெஞ்சம்-என்றும்-கலந்து நிற்க வேண்டும்;
வேளை யொத்த விறலும், பாரில்-வேந்த ரேத்து புகழும்,
யாளி யொத்த வலியும்-என்றும்-இன்பம் நிற்கும் மனமும்,
வாழி யீதல் வேண்டும்-அன்னாய்!வாழ்க நின்தன் அருளே!

## வையம் முழுதும்

**கண்ணிகள்**

வையம் முழுதும் படைத்தளிக் கின்ற
மஹாசக்தி தன்புகழ் வாழ்த்து கின்றோம்;
செய்யும் வினைகள் அனைத்திலும் வெற்றி
சேர்ந்திட நல்லருள் செய்க வென்றே!

பூதங்கள் ஐந்தில் இருந்தெங்குங் கண்ணிற்
புலப்படும் சக்தியைப் போற்று கின்றோம்;
வேதங்கள் சொன்ன படிக்கு மனிதரை
மேன்மையுறச் செய்தல் வேண்டு மென்றே!

வேகம் கவர்ச்சி முதலிய பல்வினை
மேவிடும் சக்தியை மேவு கின்றோம்;
ஏக நிலையில் இருக்கும் அமிர்தத்தை
யாங்கள் அறிந்திட வேண்டு மென்றே!

உயிரெனத் தோன்றி உணவுகொண் டேவளர்ந்
தோங்கிடும் சக்தியை ஓதுகின்றோம்;
பயிரினைக் காக்கும் மழையென எங்களைப்
பாலித்து நித்தம் வளர்க்க வென்றே.

சித்தத்தி லேநின்று சேர்வ துணரும்
சிவசக்தி தன்புகழ் செப்பு கின்றோம்;
இத்தரை மீதினில் இன்பங்கள் யாவும்
எமக்குத் தெரிந்திடல் வேண்டு மென்றே.

மாறுத லின்றிப் பராசக்தி தன்புகழ்
வையமிசை நித்தம் பாடு கின்றோம்;
நூறு வயது புகழுடன் வாழ்ந்துயர்
நோக்கங்கள் பெற்றிட வேண்டு மென்றே.

ஓம் சக்தி ஓம் சக்தி ஓம் சக்தி ஓம் சக்தி
ஓம் சக்தி என்றுரை செய்தி டுவோம்;
ஓம் சக்தி என்பவர் உண்மை கண்டார்;சுடர்
ஒண்மைகொண்டார்,உயிர் வண்மை கொண்டார்.

## விநாயகர் நான்மணி மாலை

### வெண்பா

புகழ்வோம் கணபதிநின் பொற்கழலை நாளும்
திகழ்வோம் பெருங்கீர்த்தி சேர்ந்தே-இகழ்வோமே
புல்லரக்கப் பாதகரின் பொய்யெலாம்;ஈங்கிதுகாண்
வல்லபைகோன் தந்த வரம். 13

### கலித்துறை

வரமே நமக்கிது கண்டீர் கவலையும் வஞ்சனையும்
கரவும் புலைமை விருப்பமும் ஐயமும காய்ந்தெறிந்து,
‘சிரமீது எங்கள் கணபதி தாள்மலர் சேர்த்தெமக்குத்
தரமேகொல் வானவர்’எனறுளத் தேகளி சார்ந்ததுவே 14

### விருத்தம்

சார்ந்து நிற்பாய் எனதுளமே,
சலமும் கரவும் சஞ்சலமும்
பேர்ந்து பரம சிவாநந்தப்
பேற்றை நாடி நாள்தோறும்
ஆர்ந்த வேதப் பொருள்காட்டும்
ஐயன்,சக்தி தலைப்பிள்ளை,
கூர்ந்த இடர்கள் போக்கிடுநங்
கோமான் பாதக் குளிர்நிழலே 15

### அகவல்

நிழலினும் வெயிலினும் நேர்ந்தநற் றுணையாய்த்
தழலினும் புனலினும் அபாயந் தவிர்த்து
மண்ணினும் காற்றினும் பானினும் எனக்குப்
பகைமை யொன்றின்றிப் பயந்தவிர்த் தாள்வான்,

மௌன வாயும் வரந்தரு கையும்,
உடையநம் பெருமான் உணர்விலே நிற்பான்,
ஓமெனும் நிலையில் ஒளியாத் திகழ்வான்,

வேத முனிவர் விரிவாப் புகழ்ந்த
பிருஹஸ் பதியும் பிரமனும் யாவும்

தானே யாகிய தனிமுதற் கடவுள்,
யானென தற்றார் ஞானமே தானாய்
முக்தி நிலைக்க மலவித் தாவான்,
சத்தெனத் தத்தெனச் சதுர்மறை யாளர்
நித்தமும் போற்றும் நிர்மலக் கடவுள்,

ஏழையர்க் கெல்லாம் இரங்கும் பிள்ளை,
வாழும் பிள்ளை, மணக்குளப் பிள்ளை,
வெள்ளாடை தரித்த விட்டுணு வென்று
செப்பிய மந்திரத் தேவனை
முப்பொழு தேத்திப் பணிவது முறையே

## 10. திருவிளக்கு ஸ்தோத்ரம்

விளக்கே திருவே வேந்தன் உடன் பிறப்பே
ஜோதிமணி விளக்கே ஸ்ரீதேவி பொன்மணியே
அந்தி விளக்கே அலங்கார நாயகியே
காஞ்சி விளக்கே காமாட்சி தாயாரே!

பசும்பொன் விளக்கு வைத்து பஞ்சு திரி போட்டு
குளம் போல் நெய்யை விட்டு கோலமுடன் ஏற்றி வைத்தேன்
பொட்டு மிட்டேன் குங்குமத்தால் பூமாலை சூட்டி வைத்தேன்
ஏற்றினேன் நெய் விளக்கு எந்தன் குடி விளங்க

வைத்தேன் திருவிளக்கை மாளிகையில் தான் விளங்க
மாளிகையில் ஜோதி உள்ள மாதாவை கண்டு கொண்டேன்
மாங்கல்ய பிச்சை மடி பிச்சை தாரும் அம்மா
சந்தான பிச்சையுடன் தனங்களையும் தாரும் அம்மா

பெட்டி  நிறைய பூஷணங்கள் தாரும் அம்மா
பட்டி நிறைப் பால் பசுவைத் தாருமம்மா
கொட்டில் நிறையக் குதிரைகளைத் தாருமம்மா
புகழுடம்பை தந்து  எந்தன் பக்கத்தில்  நில்லும்  அம்மா
அல்லும் பகலும் எந்தன் அகத்தினிலே வாழும் அம்மா

சேவி தொழுதுநின்றேன் தேவி வடிவம் கண்டேன்
வஜ்ர கிரீடம் கண்டேன் வைடூர்ய மேனி கண்டேன்
முத்து கொண்டை கண்டேன் முழு பச்சை மாலை கண்டேன்
சவுரி முடி கண்டேன் தாழைமடல் சூழ கண்டேன்

பின்னல் அழகு கண்டேன் பிறை போல நெற்றி கண்டேன்
சாந்துடன் நெற்றி கண்டேன் தாயார் வடிவம் கண்டேன்
குறுக்கிடும் நெற்றி கண்டேன்  கோவை கனி வாயும் கண்டேன்
செந்தாமரை பூமடல் போல் செவி இரண்டும் கண்டு கொண்டேன்

செண்பக பூப்போல் திருமுகம் கண்டு கொண்டேன்
மார்பில் பதக்கம் மின்ன மாலை அசைய கண்டேன்
காலில் சிலம்பு கொஞ்ச காலாழி பீழி கண்டேன்
பட்டாடை தான் உடுத்த படை இரண்டும் கண்டு கொண்டேன்

மங்கள நாயகியே உன்னை மனம் குளிர கண்டு கொண்டேன்
அன்பே அருள் துணையே உன்னை அடைந்த எந்தனுக்கு
வந்த  வினை அகற்றி மஹா பாக்கியம் தந்தருள்வாய்
தந்தை  தாய்  பிறவி  நீயே தற்காக்கும் ரக்ஷகி  நீயே

அந்தத்திற்கு உதவி செய்யும் ஆதாரமானவள்  நீயே
உந்தனையே  உறவாக நம்பி உற்றாரை கை விட்டேன் தாயே
சந்தானம்  சௌபாக்கியம் அளித்து
சக்திகளும் சேவைகளும் எனக்கருள்வாய்
பக்தி உள்ள மனிதருக்கே பர தேவி கிருபையுடன் அருள்வாய்.

## 11. சித்தர் பாடல்கள்

பிருதிவி பொன்னிறமே .....அகப்பேய்
பேதமை அல்லவடி
உருவது நீரடியோ .....அகப்பேய்
உள்ளது வெள்ளையடி.

தேயு செம்மையடி .....அகப்பேய்
திடனது கண்டாயே
வாயு நீலமடி .....அகப்பேய்
வான்பொருள் சொல்வேனே.

வான மஞ்சடியோ .....அகப்பேய்
வந்தது நீகேளாய்
ஊனமது ஆகாதே .....அகப்பேய்
உள்ளது சொன்னேனே.

கண்ணுள் மணியைக் கருதிய பேரொளியை
விண்ணின் மணியை விளக்கொளியைப் போற்றீரே.
மனம்வாக்குக் காயம்எனும் வாய்த்தபொறிக்கு எட்டாத
தினகரனை நெஞ்சமதில் சேவித்துப் போற்றீரே.
காலமூன் றுங்கடந்த கதிரொளியை உள்ளத்தால்
சாலமின்றிப் பற்றிச் சலிப்பறவே போற்றீரே.

## 12. திருவெம்பாவை

ஆர்த்த பிறவித் துயர்கெட நாம் ஆர்த்தாடும்
    தீர்த்தன்! நல் தில்லைச் சிற்றம்பலத்தே தீயாடும்
கூத்தன்! இவ்வானும் குவலயமும் எல்லாமும்
    காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைகள்
    ஆர்ப்பரவம் செய்ய அணிகுழல்மேல் வண்டார்ப்பப்!
பூத்திகழும் பொய்கை குடைந்து உடையான் பொற்பாதம்
    ஏத்தி இருஞ்சுனை நீர் ஆடு ஏலோர் எம்பாவாய்.

## 13. திருப்பள்ளியெழுச்சி

அருணன்இந் திரன்திசை அணுகினன் இருள்போய்
அகன்றது உதயம்நின் மலரத்திரு முகத்தின்!
கருணையின் சூரியன் எழஎழ நயனக்
கடிமலர் மலரமற் றண்ணலங் கண்ணாம்
திரள்நிரை அறுபதம் முரல்வன இவையோர்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே!
அருள்நிதி தரவரும் ஆனந்த மலையே
அலைகட லே! பள்ளி எழுந்தருளாயே!

❖❖❖❖

# வகுப்பு - XI

## 1. ஔவையார் பாடல்கள்

சேரலர்கோன் சேரல் செழும்பூந் திருக்கோவல்
ஊரளவும் தான் வருக உட்காதே – பாரிமகள்
அங்கவையைக் கொள்ள அரசர் மனமிசைந்தார்
சங்கவையை யுங்கூடத் தான்.

❖❖❖❖

திங்கட் குடையுடைச் சேரனும் சோழனும் பாண்டியனும்
மங்கைக்கு அறுகிட வந்துநின் றார்மணப் பந்தலிலே
சங்கொக்க வெண்குருத் தீன்றுபச் சோலை சலசலத்துக்
கொங்கிற் குறத்தி குவிமுறை போலக் குரும்பைவிட்டு
நுங்குக்கண் முற்றி யடிக்கண் கறுத்து நுனிசிவந்து

❖❖❖❖

எண்ணா யிரத்தாண்டு நீரிற் கிடந்தாலும்
உண்ணீரம் பற்றாக் கிடையேபோல – பெண்ணாவாய்
பொற்றொடி மாதர் புணர்முலைமேற் சாராரை
எற்றோமற் றெற்றோமற் றெற்று.
– ஈதலறம் தீவினைவிட் டீட்டல்பொருள் எஞ்ஞான்றும்
காத லிருவர் கருத்தொருமித் – தாதரவு
பட்டதே யின்பம் பரனைநினைந்து இம்மூன்றும்
விட்டதே பேரின்ப வீடு

❖❖❖❖

அழற்கட்டுக் கட்டிய வைவே லசதி யின்வரையின்
மழைக்கட்டுக் கட்டிய மாளிகை மேலொரு மங்கை நல்லாள்
உழக்கிட் டுரியிட்டு முவ்வழக் கிட்டுரி நாழியிட்டுக்
குழற்கட் டவிழ்த்துட னங்ஙனின் றேமயிர் கோதினளே.

❖❖❖❖

பறைபடப் பணிலம் ஆர்ப்ப இறைகொள்பு
ரொன்மூ தாலத்துப் பொதியில் தோன்றிய
நாலூர்க் கோசர் நன்மொழி போல
வாயா கின்ற தோழி - ஆய்கழல்
சேயிலை வெள்வேல் விடலையொடு
தொகுவளை முன்கை மடந்தை நட்பே

பத்தாவுக் கேற்ற பதிவிரதை உண்டானால்
எத்தாலுங் கூடி இருக்கலாம் - சற்றேனும்
ஏறுமா றாக இருப்பாளே யாமாகிற்
கூறாமற் சந்நியாசம் கொள்.

பாரி பறித்த பறியும் பழையனூர்க்
காரிஅன் றீந்த களைகொட்டும் - சேரமான்
வாராயோ என்றழைத்த வார்த்தையும் இம்மூன்றும்
நீலச் சிற்றாடைக்கு நேர்

வையைத் துறைவன மதுரா புரித்தென்னன்
செய்யத் தகாதென்று தேம்பாதே - தையலர்க்கு
வேண்டுவன கொண்டு விடியவீ றொன்பானாள்
ஈன்டு வருக வியைந்து

ஆயன் பதியில் அரன்பதிவந் துற்றளகம்
மாயனூ துங்கருவி யானாலும் - தூயமணிக்
குன்றுபோல் வீறு குவிமுலையார் தம்முடனீர்
இன்றுபோல் என்றும் இரும்.

செம்மான் கரத்தனருள் சேயா நெடியோனை
அம்மான் எனப் பெற்ற அருள்வேலா - இம்மான்
கரும்பிறைக்கும் வெண்பிறைக்கும் கண்ணம் பிறைக்கும்
அரும்பிறைக்கும் கூந்தல் அணை

கல்லாத ஒருவனையான் கற்றாய் என்றேன்
காடேறித் திரிவானை நாடா என்றேன்
பொல்லாத ஒருவனையான் நல்லாய் என்றேன்
போர்முகத்துக் கோழையையான் புலியே றென்றேன்
மல்லாரும் புயமென்றேன் தேம்பற் றோளை
வழங்காத கையனையான் வள்ளால் என்றேன்
இல்லாது சொன்னேனுக்கு இல்லை என்றான்
யானும் என்றன் குற்றத்தால் ஏகின்றேனே!

## 2. பன்னிரு திருமுறை

### அ. திருமந்திரம்

காலிதழ் ஆறில் அவிர்ந்தது தொண்ணூறு
தானிதழ் ஆனவை நாற்பத்து நாலுள
பாலிதழ் ஆனவள் பங்கய மூலமாய்த்
தானிதழ் ஆகித் தரித்திருந் தாளே

❖❖❖❖

தரித்திருந் தாள்அவள் தண்ணொளி நோக்கி
விரித்திருந் தாள்அவள் வேதப் பொருளைக்
குறித்திருந் தாள்அவள் கூறிய ஐந்து
மறித்திருந் தாள்அவள் மாதுநல் லாளே

❖❖❖❖

மாதுநல் லாளும் மணாளன் இருந்திடப்
பாதிநல் லாளும் பகவனும் ஆனது
சோதிநல் லாளைத் துணைப் பெய்ய வல்லிரேல்
வேதனை தீர்தரும் வெள்ளடை யாமே

❖❖❖❖

வெள்ளடை யான்இடு மாமிகு மாமலர்க்
கள்ளடை யாரக் கமழ்குழ லார்மனம்
மள்ளடை யானும் வகைத்திற மாய்நின்ற
பெண்ணொரு பாகம் பிறவிப் பெண் ஆமே

❖❖❖❖

## அ. பெரிய புராணம்

அங்கு முன்னெமை ஆளுடை நாயகி
கொங்கு சேர்குழற் காமலர் கொய்திடத்
திங்கள் வாள்முதகச் சேடியர் எய்தினார்
பொங்கு கின்ற கவினுடைப் பூவையார்

(பெரிய புராணம் – திருமலைச் சிறப்பு – 33)

அந்த மில்சீர் அணிந்திதை ஆய்குழல் (திருமலைச் சிறப்பு – 34)
கந்த மாலைக் கமலினி என்பவர்
கொந்து கொண்ட திருமலர் கொய்வுழி
வந்து வானவர் ஈசர் அருளென

வண்ணநீள் வரைதர வந்த மென்மையால்
எண்ணில்பேர் அறங்களும் வளர்க்கும் ஈகையால்
அண்ணல்பா கந்தையா ளுடைய நாயகி
உண்ணெகிழ் கருணையின் ஒழுக்கம் போன்றது

(திருமலைச் சிறப்பு – 56)

உழுதசால்மிக வூறித் தெளிந்த சேறு
இழுது செய்யினுள் இந்திரத் தெய்வதம்
தொழுது நாறு நாடுவார் தொகுதியே
பழுதில் காவிரி நாட்டின் பரம்பெலாம்

## இ. தேவாரம்

மங்கையர்க் கரசி வளவர்கோன் பாவை வரிவளைக் கைம்மட மானி
பங்கயச் செல்வி பாண்டிமா தேவி பணிசெய்து நாடொறும் பரவப்
பொங்கழ லுருவன் பூதநா யகயனால் வேதமும் பொருள்களும் அருளி
அங்கயற் கண்ணி தன்னொடும் அமர்ந்த ஆலவா யாவதும் இதுவே.

❖❖❖❖

வெற்றவே யடியார் அடிமிசை வீழும் விருப்பனன் வெள்ளைநீ றணியுங்
கொற்றவன் றனக்கு மந்திரி யாய குலச்சிறை குலாவி நின்றேத்தும்
ஒற்றைவெள் விடையன் உம்பரார் தலைவன் உலகினில் இயற்கையை
யொழிந்திட்
டற்றவர்க் கற்ற சிவனுறை கின்ற ஆலவா யாவதும் இதுவே.

செந்துவர் வாயாள் சேலன கண்ணாள் சிவன்திரு நீற்றினை வளர்க்கும்
பந்தணை விரலாள் பாண்டிமா தேவி பணிசெயப் பாரிடை நிலவுஞ்
சந்தமார் தரளம் பாம்புநீர் மத்தந் தண்ணெருக் கம்மலர் வன்னி
அந்திவான் மதிசேர் சடைமுடி யண்ணல் ஆலவா யாவதும் இதுவே.

❖❖❖❖

கணங்களாய் வரினுந் தமியராய் வாச்னும் அடியவர் தங்களைக் கண்டால் குணங்கொடு பணியுங் குலச்சிறை பரவுங் கோபுரஞ் சூழ்மணிக் கோயில் மணங்கமழ் கொன்றை வாளரா மதியம் வன்னிவண் கூவிள மாலை அணங்குவீற் றிருந்த சடைமுடி யண்ணல் ஆலவா யாவதும் இதுவே.

## ஈ. நான்காம் திருமுறை

### திருவாரூர் — பண் : காந்தாரம்

ஊர்திரை வேலையுள் ளானு
முலகிறந் தொண்பொரு ளானும்
சீர்தரு பாடலுள் ளானுஞ்
செங்கண் விடைக்கொடி யானும்
வார்தரு பூங்குழ லாளை
மருவி யுடன்வைத் தவனும்
ஆர்திரை நாளுகந் தானு
மாரூ ரமர்ந்தவம் மானே.

### திருக்கழிப்பாலை — பண் : காந்தாரம்

வண்டுலவு கொன்றை வளர்புன்
சடையானே யென்கின் றாளால்
விண்டலர்ந்து நாறுவதொர் வெள்ளெருக்க
நாண்மலருண் டென்கின் றாளால்
உண்டயலே தோன்றுவதொ ருத்தரியப்
பட்டுடைய னென்கின் றாளால்
கண்டயலே தோன்றுங் கழிப்பாலைச்
சேர்வானைக் கண்டாள் கொல்லோ.

## ஈ. முதல் திருமுறை

## உ. இரண்டாம் திருமுறை

### 1. திருவையாறு *(பதிகம் எண்: 006)* பண்: இந்தளம்

பண்ணி னல்லமொழி யார்பவ ளத்துவர் வாயினார்
எண்ணி னல்லகுணத் தாரிணை வேல்வென்ற கண்ணினார்
வண்ணம் பாடிவலி பாடித்தம் வாய்மொழி பாடவே
அண்ணல் கேட்டுகந் தானுமை யாறுடை யையனே

## ஊ. மூன்றாம் திருமுறை

### திருப்புகலி *(பதிகம் எண்: 007)* பண்: காந்தார பஞ்சமம்

சாம்பலொ டுந்தழ லாடினா னுஞ்சடை யின்மிசைப்
பாம்பினோ டும்மதி சூடினா னும்பசு வேறியும்
பூம்படு கல்லிள வாளைபா யும்புக லிந்நகர்க்
காம்பன தோளியொ டும்மிருந் தகட வுளன்றே.

### பொது

**பண் : 'சிவனெனுமோசை' பியந்தைக் காந்தாரம்**

தேய்பொடி வெள்ளை பூசி யதன்மேலொர் திங்கள்
திலகம் பதித்த நுதலர்
காய்கதிர் வேலை நீல வொளிமா மிடற்றர்
கரிகாடர் காலோர் கழலர்
வேயுட னாடு தோளி யவள்விம்ம வெய்ய
மழுவீசி வேழ வுரிபோர்த்
தேயிவ ராடு மாறு மிவள்காணு மாறு
மிதுதா னிவர்க்கொ ரியல்பே.

### திருக்கெடிலவாணர் பண் : காந்தார பஞ்சமம்

அங்கையி லனலெரி யேந்தி யாறெனும்
மங்கையைச் சடையிடை மணப்பர் மால்வரை
நங்கையைப் பாகமும் நயப்பர் தென்றிசைக்
கெங்கைய தெனப்படுங் கெடில வாணரே.

❖❖❖❖

கிடந்தபாம் பருகுகண் டரிவை பேதுறக்
கிடந்தபாம் பவளையோர் மயிலென் றையுறக்
கிடந்தநீர்ச் சடைமிசைப் பிறையு மேங்கவே
கிடந்துதா னகுதலைக் கெடில வாணரே.

**திருப்பழனம்** **பண் : பழந்தக்கராகம்**

கூவைவாய் மணிவரன்றிக்
கொழித்தோடுங் காவிரிப்பூம்
பாவைவாய் முத்திலங்கப்
பாய்ந்தாடும் பழனத்தான்
கோவைவாய் மலைமகள்கோன்
கொல்வேற்றின் கொடியாடைப்
பூவைகாள் மழலைகாள்
போகத பொழுதுளதே.

**திருப்புகலூர்** **பண் : இந்தளம்**

மேகந லூர்தியர் மின்போன் மிளிர்சடைப்
பாக மதிநுத லாளையொர் பாகத்தர்
நாக வளையினர் நாக வுடையினர்
போகர் புகலூர்ப் புரிசடை யாரே.

**திருவாரூர் அரநெறி** **பண் : இந்தளம்**

வீரமும் பூண்பர் விசயனொ டாயதொர்
தாரமும் பூண்பர் தமக்கன்பு பட்டவர்
பாரமும் பூண்பர்நற் பைங்கண் மிளிர
வாரமும் பூண்ப ரரநெறி யாரே.

## 3. நாலாயிரத் திவ்ய பிரபந்தம்

குரவகத்து குடைந்தாடிக் குளிர்நறவங் கொப்பளித்தார்த்
தரவவண்டின் னிசைபாட வருவிநீ ரளைந்துராய்
விரை மலர்ந்த துண்ர்வீசி விரைஞாற வருதென்றல்
புரவலன்றன் றிருமுடிமேற் போதலர வசைத்ததே

ஏரியணிந்த விளம்பிண்டி யிணரார்ந்த விடமெல்லாம்
பொரியணிந்த புன்குதிர்ந்து பூநாறுந் துறையெல்லாம்
வரியணி ந்து வண்டுத வளர்கின்ற விளவேனில்
புரியணிந்த குழலீர்நுஞ் செல்வம்போற் பொலிந்ததே

## 4. கம்பராமாயணம்

மை அவாம் குவளை எல்லாம் மாதர் கண்மலர்கள் பூத்த
ஐவ அவாம் உருவத்தார் தம் கண்மலர் குவளை பூத்த
செய்ய தாமரைகள் எல்லாம் தெரியவையர் முகங்கள் பூத்த
தையலார முகங்கள் செய்ய தாமரை பூத்த அன்றே

## 5. பாரதியார் பாடல்கள்

### பாரதியார் கவிதைகள்

நாணும் அச்சமும் நாய்கட்கு வேண்டுமாம்
ஞான நல்லறம் வீர சுதந்திரம்
பேணு நற்குடிப் பெண்ணின் குணங்களாம்
பெண்மைத் தெய்வத்தின் பேச்சுகள் கேட்டிரோ,

### பெண்கள் விடுதலைக் கும்பி (பெண்ணுரிமை)

மாட்டை யடித்து வசக்கித் தொழுவினில்
மாட்டும் வழக்கத்தைக் கொண்டு வந்தே
வீட்டினில் எம்மிடங் காட்ட வந்தாரதை
வெட்டி விட்டோமென்று கும்மியடி! (கும்மி)

நல்ல விலை கொண்டு நாயை விற்பாரந்த
நாயிடம் யோசனை கேட்பதுண்டோ?
கொல்லத் துணிவின்றி நம்மையும் அந்நிலை
கூட்டிவைத் தார் பழி கூட்டி விட்டார்! (கும்மி)
கற்பு நிலையென்று சொல்லவந்தார். இரு
கட்சிக்கும் அஃது பொதுவில் வைப்போம்.
வற்புறுத்திப் பெண்ணைக் கட்டிக் கொடுக்கும்
வழக்கத்தைத் தள்ளி மிதித்திடுவோம். (கும்மி)

## பெண் விடுதலை

பெண்ணுக்கு விடுதலையென் றிங்கோர் நீதிபிறப்பித்தேன்;
அதற்குரிய பெற்றி கேளீர்;
மண்ணுக்குள் எவ்வுயிரும் தெய்வ மென்றால்
மனையாளும் தெய்வமன்றோ? மதிகெட்டீரே!
விண்ணுக்குப் பறப்பதுபோல் கதைகள் சொல்வீர்.
விடுதலையென் பீர்கருணை வெள்ள மென்பீர்.
பெண்ணுக்கு விடுதலைநீ ரில்லை யென்றால்
பின்னிந்த உலகினிலே வாழ்க்கை யில்லை,

## தாய் மாண்பு

உண்டாக்கிப் பாலூட்டி வளர்த்த தாயை
உமையவளென் றறியீரோ? உணர்ச்சிகெட்டீர்?
பண்டாய்ச்சி ஔவை அன்னை யும்பி தாவும்
பாரிடை "முன் னறிதெய்வம்" என்றாள் அன்றோ?
தாய்க்குமேல் இங்கேயோர் தெய்வ முண்டோ?
தாய்பெண்ணே யல்லளோ? தமக்கை. தங்கை
வாய்க்கும் பெண் மகவெல்லாம் பெண்ணே யன்றோ?
மனைவியொருந் தியையடிமைப் படுத்த வேண்டித்
தாய்க்குலத்தை முழுதடிமைப் படுத்தலாமோ?
"தாயைப்போ லேபிள்ளை" என்று முன்னோர்
வாக்குளதன் றோபெண்மை அடிமையுற்றார்
மக்களெலாம் அடிமையுறல் வியப்பொன் றாமோ?

# விநாயகர் நான்மணி மாலை

## வெண்பா

முறையே நடப்பாய், முழுமூட நெஞ்சே!
இறையேனும் வாடாய் இனிமேல்–கறையுண்ட
கண்டன் மகன்வேத காரணன் சக்திமகன்
தொண்டருக் குண்டு துணை.

### கலித்துறை

துணையே! எனதுயிருள்ளே யிருந்து கடர்விடுக்கும்
மணியே! எனதுயிர் மன்னவனே! என் றன் வாழ்வினுக்கோர்
அணியே! எனுள்ளத்தி லாரமு தே! என தற்புதமே!
இணையே துனக்குரைப்பேன், கடைவானில் எழுஞ்சுடரே!

### விருத்தம்

சுடரே போற்றி! கணத்ததேவர்
துரையே போற்றி! எனக்கென்றும்
இடரே யின்றிக் காத்திடுவாய்,
எண்ணாயிரங்கால் முறையிட்டேன்!
படர்வான் வெளியிற் பலகோடி
கோடி கோடிப் பல்கோடி
இடறா தோடும் அண்டங்கள்
இசைத்தாய், வாழி இறையவனே!

### அகவல்

இறைவி இறைவன் இரண்டும்ஒன் றாகித்
தாயாய்த் தந்தையாய், சக்தியும் சிவனுமாய்
உள்ளொளி யாகி உலகெலாந் திகழும்
பரம்பொரு ளேயோ! பரம்பொரு ளேயோ!
ஆதி மூலமே! அனைத்தையும் காக்கும்

தேவா தேவா! சிவனே! கண்ணா
வேலா! சாத்தா! விநாயகா! மாடா!
இருளா! சூரியா! இந்துவே! சக்தியே!
வாணீ! காளீ! மாமக ளேயோ!
ஆணாய்ப் பெண்ணாய் அலியாய், உள்ளது

யாதுமாய் விளங்கும் இயற்கை தெய்வமே!
வேதச் சுடரே, மெய்யாங் கடவுளே!
அபயம் அபயம் அபயம் நான் கேட்டேன்;
நோவு வேண்டேன், நூற் றாண்டு வேண்டினேன்,
அச்சம் வேண்டேன், அமைதி வேண்டினேன்;

உடைமை வேண்டேன், உன்துணை வேண்டினேன்;
வேண்டா தனைத்தையும் நீக்கி
வேண்டிய தனைத்தையும் அருள்வதுன் கடனே.

## 6. திருவிளக்கு ஸ்தோத்ரம்

விளக்கே திருவே வேந்தன் உடன் பிறப்பே
ஜோதிமணி விளக்கே ஸ்ரீதேவி பொன்மணியே
அந்தி விளக்கே அலங்கார நாயகியே
காஞ்சி விளக்கே காமாட்சி தாயாரே!

பசும்பொன் விளக்கு வைத்து பஞ்சு திரி போட்டு
குளம் போல் நெய்யை விட்டு கோலமுடன் ஏற்றி வைத்தேன்
பொட்டு மிட்டேன் குங்குமத்தால் பூமாலை சூட்டி வைத்தேன்
ஏற்றினேன் நெய் விளக்கு எந்தன் குடி விளங்க

வைத்தேன் திருவிளக்கை மாளிகையில் தான் விளங்க
மாளிகையில் ஜோதி உள்ள மாதாவை கண்டு கொண்டேன்
மாங்கல்ய பிச்சை மடி பிச்சை தாரும் அம்மா
சந்தான பிச்சையுடன் தனங்களையும் தாரும் அம்மா

பெட்டி நிறைய பூஷணங்கள் தாரும் அம்மா
பட்டி நிறைப் பால் பசுவைத் தாருமம்மா
கொட்டில் நிறையக் குதிரைகளைத் தாருமம்மா
புகழுடம்பை தந்து எந்தன் பக்கத்தில் நில்லும் அம்மா
அல்லும் பகலும் எந்தன் அகத்தினிலே வாழும் அம்மா

சேவி தொழுதுநின்றேன் தேவி வடிவம் கண்டேன்
வஜ்ர கிரீடம் கண்டேன் வைடூர்ய மேனி கண்டேன்
முத்து கொண்டை கண்டேன் முழு பச்சை மாலை கண்டேன்
சவுரி முடி கண்டேன் தாழைமடல் சூழ கண்டேன்

பின்னல் அழகு கண்டேன் பிறை போல நெற்றி கண்டேன்
சாந்துடன் நெற்றி கண்டேன் தாயார் வடிவம் கண்டேன்
குறுக்கிடும் நெற்றி கண்டேன் கோவை கனி வாயும் கண்டேன்
செந்தாமரை பூமடல் போல் செவி இரண்டும் கண்டு கொண்டேன்

செண்பக பூப்போல் திருமுகம் கண்டு கொண்டேன்
மார்பில் பதக்கம் மின்ன மாலை அசைய கண்டேன்
காலில் சிலம்பு கொஞ்ச காலாழி பீலி கண்டேன்
பட்டாடை தான் உடுத்த படை இரண்டும் கண்டு கொண்டேன்

மங்கள நாயகியே உன்னை மனம் குளிர கண்டு கொண்டேன்
அன்பே அருள் துணையே உன்னை அடைந்த எந்தனுக்கு
வந்த வினை அகற்றி மஹா பாக்கியம் தந்தருள்வாய்
தந்தை தாய் பிறவி நீயே தற்காக்கும் ரக்ஷகி நீயே

அந்தத்திற்கு உதவி செய்யும் ஆதாரமானவள் நீயே
உந்தனையே உறவாக நம்பி உற்றாரை கை விட்டேன் தாயே
சந்தானம் சௌபாக்கியம் அளித்து
சக்திகளும் சேவைகளும் எனக்கருள்வாய்
பக்தி உள்ள மனிதருக்கே பர தேவி கிருபையுடன் அருள்வாய்.

❖❖❖❖

# வகுப்பு - XII

## 1. ஔவையார் பாடல்கள்

சுரதந் தனில்இளைத்த தோகை; சுகிர்த
விரதந் தனில்இளைத்த மேனி; நிரதம்
கொடுத்திளைத்த தாதா; கொடுஞ்சமரிற் பட்ட
வடுத்துளைத்த கல்அபிரா மம்

❖❖❖❖

காதுசேர் தாழ்குழையாய் கன்னித் துறைச் சேர்ப்ப
போதுசேர் நார்மார்ப போர்ச்செழிய – நீதியாய்
மண்ணமுத மங்கையர்தோள் மாற்றாரை யேற்றார்க்கு
நுண்ணிய வாய பொருள்

## 2. பன்னிரு திருமுறை

### அ. பெரிய புராணம்

வரிவில் கதை சக்கரம் உற்கரம் வாள்
சுரிகைப் படை சத்திகழுக் கடைவேல்
எரி முத்தலை கப்பணம் எல் பயில் கோல்
முரி உற்றன உற்றன மெய்க் களமே (26)

வடிவேல் அதிகன் படைமாள அவரைக்
கடிசூழ் அரணக் கணவாய் நிரவிக்
கொடி மா மதில் நீடு குறும் பொறையூர்
முடி நேரியனார் படை முற்றியதே (27)

முற்றும் பொரு சேனை முனை தலையில்
கல் திண் புரிசைப் பதி கட்டு அழியப்
பற்றும் துறை நொச்சிப் பரிந்து உடையச்
சுற்றும் படை வீரர் துணித்தனரே (28)

மாறு உற்ற விறல் படை வாள் அதிகன்
நூறு உற்ற பெரும்படை நூழில் படப்
பாறு உற்ற எயில் பதி பற்று அற விட்டு
ஏறு உற்றனன் ஓடி இரும் சுரமே (29)

அதிகன் படை போர் பெருத அற்றதலை
பொதியின் குவை எண்இல போயின் பின்
நிதியின் குவை மங்கையர் நீள் பரிமா
எதிரும் கரி பற்றினர் எண் இலரே (30)

## ஆ. இரண்டாம் திருமுறை

### திருக்கைச்சினம் *(பதிகம் எண் : 045)*

**பண்: சீகாமரம்**

பண்டமரர் கூடிக் கடைந்த படுகடல்நஞ்
சுண்டபிரா னென்றிறைஞ்சி யும்பர் தொழுதேத்த
விண்டவர்கள் தொன்னகர மூன்றுடனே வெந்தவியக்
கண்டபிரான் மேவியுறை கோயில் கைச்சினமே.

வரியரவே நாணாக மால்வரையே வில்லாக
எரிகணையான் முப்புரங்க ளெய்துகந்த வெம்பெருமான்
பொரிசுடலை யீமப் புறங்காட்டான் போர்த்ததோர்
கரியுரியான் மேவியுறை கோயில் கைச்சினமே.

### திருவாக்கூர்த் தான்றோன்றிமாடம் *(பதிகம் எண் : 042)*

**பண்: சீகாமரம்**

நீரார வார்சடையான் நீறுடையா னேறுடையான்
காரார்பூங் கொன்றையினான் காதலித்த தொல்கோயில்
கூரரல் வாய்நிறையக் கொண்டயலே கோட்டகத்தில்
தாராமல் காக்கூரிற் றான்றோன்றி மாடமே.

**திருஅனேகதங்காவதம்** *(பதிகம் எண் : 005)* **பண்: இந்தளம்**

சூல முண்டுமழு வுண்டவர் தொல்படை சூழ்கடல்
ஆல முண்டபெரு மான்ற னனேகதங் காவதம்
நீல முண்டதடங் கண்ணுமை பாக நிலாயதோர்
கோல முண்டள வில்லை குலாவிய கொள்கையே.

**திருமழபாடி** *(பதிகம் எண் : 009)* **பண்: இந்தளம்**

களையும் வல்வினை யஞ்சனெஞ் சேகரு தார்புரம்
உளையும் பூசல்செய் தானுயர் மால்வரை நல்விலா
வளைய வெஞ்சரம் வாங்கியெய் தான்மதுத் தும்பிவண்
டளையுங் கொன்றையந் தார்மழ பாடியு ளண்ணலே.

**திருமங்கலக்குடி** *(பதிகம் எண் : 010)* **பண்: இந்தளம்**

சீரி னார்மணி யும்மகில் சந்துஞ் செறிவரை
வாரி நீர்வரு பொன்னி வடமங் கலக்குடி
நீரின் மாமுனி வன்னெடுங் கைகொடு நீர்தனைப்
பூரித் தாட்டியர்ச் சிக்க விருந்த புராணனே.

**திருமணஞ்சேரி** *(பதிகம் எண் : 016)* **பண்: இந்தளம்**

அயிலாரு மம்பத னாற்புர மூன்றெய்து
குயிலாரு மென்மொழி யாளொரு கூறாகி
மயிலாரு மல்கிய சோலை மணஞ்சேரிப்
பயில்வானைப் பற்றிநின் றார்க்கில்லை பாவமே.

**திருவேணுபுரம்** *(பதிகம் எண் : 017)* **பண்: இந்தளம்**

நிலவும் புனலும் நிறைவா ளரவும்
இலகுஞ் சடையார்க் கிடமா மெழிலார்
உலவும் வயலுக் கொளியார் முத்தம்
விலகுங் கடலார் வேணு புரமே.

**திருஅழுந்தூர்** *(பதிகம் எண் : 20)* **பண்: இந்தளம்**

தொழுமா றுவல்லார் துயர்தீ ரநினைந்
தெழுமா றுவல்லார் இசைபா டவிம்மி
அழுமா றுவல்லார் அழுந்தை மறையோர்
வழிபா டுசெய்மா மடம்மன் னினையே.

❖❖❖❖

கடலே றியநஞ் சமுதுண் டவனே
உடலே உயிரே உணர்வே யெழிலே
அடலே றுடையாய் அழுந்தை மறையோர்
விடலே தொழுமா மடமே வினையே.

## 3. திரு அருட்பா

அன்பர்பால் நீங்காஎன் அம்மையே தாமரைமேல்
பொன் பொருவு மேனி அயன்பூவின் – மன்பெரிய
வாக்கிறைவி நின் தாள் மலர்ச்சரணம் போந்தேனைக்
காக்கக் கடன் உனக்கே காண்.

❖❖❖❖

தவளமலர்க் கமலமிசை வீற்றிருக்கும்
அம்மனையைச் சாந்தம் பூத்த
குவளைமலர்க் கண்ணாளைப் பெண்ணாளும்
பெண்ணமுதைத் கோதி லாத
பவள இதழ்ப் பசுங்கொடியை நான்முகனார்
நாவோங்கும் பாவை தன்னைக்
கவளமத கயக் கொம்பின் முலையாளைக்
கலைமாதைக் கருதுவோமே.

❖❖❖❖

கலைபயின்ற உளத்தினிக்கும் கரும்பினைமுக்
கனியை அருட் கடலை ஓங்கும்
நிலைபயின்ற முனிவரும் தொழுதேத்த
நான்முகனார் நீண்ட நாவில்
தலைபயின்ற மறைபயின்று மூவுலகும்
காக்கின்றதாயை வாகைச்
சிலைபயின்ற நுதலாளைக் கலைவாணி
அம்மையை நாம் சிந்திப் போமே
சங்கம் வளர்ந்திட வளர்ந்த தமிழ்க் கொடியைச்
சரசுவதி தன்னை அன்பர்
துங்கமுறக் கலைபயிற்றி உணர்வளிக்கும்

கலைஞானத் தோகை தன்னைத்
திங்கள்நுதல் திருவை அருட் குருவைமலர்
ஓங்கியபெண் தெய்வத் தன்னைத்
தங்கமலை முலையாளைக் கலையாளைத்
தொழுதுபுகழ் சாற்றுசிற்பாம்

## 4. லலிதாம்பாள் சோபனம்

ராஜேச்வரியாள் மஹிமை யகஸ்தியரும்
ஆதரவாய்ச் சொல்லச் சொன்னதற்கு
நாடு செழிக்க அவதரித்துவந்த
மாதவர் அறிவித்தார் சோபனம் சோபனம்.

## 5. பாரதியார் பாடல்கள்

### தேச பக்தி – எங்கள் நாடு

பன்னரும் உபநிடநூ லெங்கள் நூலே
பார்மிசை யேஒரு நூல் இதுபோலே?
பொன்னொளிர் பாரதநா டெங்கள் நாடே
போற்றுவம் இஃதை எமக்கில்லை ஈடே
மாரத வீரர் மலிந்தநன் னாடு
மாமுனி வோர்பலர் வாழ்ந்த பொன்னாடு
நாரத கான நலந்திகழ் நாடு
நல்லன யாவையும் நாடுறு நாடு
பூரண ஞானம் பொலிந்தநன் னாடு
புத்தர் பிரானருள் பொங்கிய நாடு
பாரதநாடு பழம்பெரும் நாடே
பாடுவம் இஃதை எமக்கில்லை ஈடே
விண்ணில் விதனை விற்று விட்டெவரும் போய்
மின்மினி கொள்வாரோ ?
கண்ணினும் இனிய சுதந்திரம் போனபின்
கை தட்டிப் பிழைப்பாரோ ? (வீர)

## சத்ரபதி சிவாஜி

பாரதப்பூமி பழம்பெரும் பூமி;
நீரதன் புதல்வர்; இந் நினைவகற் றாதீர்!
பாரத நாடு பார்க்கெலாம் திலகம்
நீரதன் புதல்வர்; இந் நினைவகற் றாதீர்!
வானக முட்டும் இமயமால் வரையும்
ஏனைய திசைகளில் இருந்திரை கடலும்
காத்திடு நாடு! கங்கையும் சிந்துவும்
தூத்திரை யமுனையும் சுனைகளும் புனல்களும்
இன்னரும் பொழில்களும் இணையிலா வளங்களும்
உன்னத மலைகளும் ஒளிர்தரு நாடு!

## தேசப்பக்திப்பாடல் (சுதந்திரப் பெருமை)
## வீர சுதந்திரம் வேண்டி நின்றார் – பின்னர்

வேறொன்று கொள்வாரோ ? – என்றும்
ஆரமு துண்ணுதற் காசை கொண்டார் கள்ளில்
அறிவைச் செலுத்து வாரோ ? (வீர)

புகழு நல்லறமுமே யன்றியெல்லாம் வெறும்
பொய்யென்று கண்டாரேல் – அவர்
இகழுறும் ஈனத்தொண்டியற்றியும் வாழ்வதற்கு
இச்சையுற்றிருப்பாரோ ? (வீர)

## பாரத தேவி வாழ்த்து

பொன்னிறக் கதிர்விளை நன்செயிற் புத்தொளிர்
வடிவமர் அன்னாய். நின்னெழில் வாழ்க!
கணுவகல் கரும்பின் இனியநற் சாறும்
கதலியும் செந்நெலும் உடையை நீ வாழ்க
தென்றலின் குளிரும் தேன்சுவைப் பழமும்
நன்றியல் சோலை நலத்தினாய் வாழ்க
வானுயர் பனிமலை வண்புனற் கங்கையென்

றுலகெலாம் உரைக்கும் பெரும் புகழ் உடையை  நீ
முப்பது கோடியர் முனிவராய் வீரராய்ப்
பெற்றிடும் தேவிநீ வீறுகொள் பெற்றியாய்
கலிப்பகை வென்றே தலைநிமிர் குன்றனாய்
கடையுகம் முற்றினும் திறல் கெடாக் காளி நீ!
அறமெனும் வயிரக் குலிசத் தோளுடை
அன்னை நீ வாழ்க? அன்னை நீ வாழ்க.

## திருமகள் வணக்கம்

கலகம் புரக்கும் பெருமாள்தன்
உளத்தும் புய்த்தும் அமர்ந்தருளி
உலகை அளிக்கும் பேரின்ப
உருவே எல்லாம் உடையாளே
திலகம் செறிவாள் நுதற் கரும்பே
தேனே கனிந்து செழுங்கனியே
தெவிட்டா தன்பர் உளத்துள்ளே
திக்கித்தெழும் ஓர் தெள்ளமுதே
மலகஞ் சுகத்தேற் கருள்அளித்த
வாழ்வே என்கண் மணியே என்
வருந்தத் தவிர்க்க வருகுருவாம்
வடிவே ஞான மணி விளக்கே
சலகந்தரம்போல் கருணைமொழி
தடங்கண்
திருவே கண்ணமங்கைத்
தாயே சரணம் இது
தருணம் கருணை தருவாயே

## விநாயகர் நான்மணி மாலை

### வெண்பா

கடமைதா னேது!கரிமுகனே! வையத்
திடம் யருள்செய்தாய், எங்கள்-உடைமைகளும்
இன்பங் களுமெல்லாம் ஈந்தாய்நீ யாங்களுனக்கு
என் புரிவோம் கைம்மா றியம்பு? 21

### கலித்துறை

இயம்பு மொழிகள் புகழ்மறை யாகும்;எடுத்தவினை
பயன்படும்; தேவர் இருபோதும் வந்து பதந்தருவார்;
அயன்பதி முன்னோன் கணபதி சூரியன் ஆனைமுகன்
வியன்புகழ் பாடிப் பணிவார் தமக்குறும் மேன்மைகளே. 22

### விருத்தம்

மேன்மைப் படுவாய் மனமே! கேள்
  விண்ணின் இடிமுன் விழுந்தாலும்,
பான்மை தவறி நடுங்காதே,
  பயத் தாலேதும் பயனில்லை;
யான்முன் னுரைத்தேன் கோடிமுறை,
இன்னுங் கோடி மறைசொல்வேன்,
  ஆன்மா வான கணபதியின்
அருளுண்டு அச்சம் இல்லையே. 23

### அகவல்

அச்ச மில்லை அமுங்குத லில்லை.
நடுங்குத லில்லை நாணுத லில்லை,
பாவ மில்லை பதுங்குத லில்லை
ஏது நேரினும் இடர்பட மாட்டோம்;
அண்டஞ் சிதறினால் அஞ்ச மாட்டோம்;

கடல்பொங்கி எழுந்தாற் கலங்கமாட்டோம்;
யார்க்கும் அஞ்சோம் எதற்கும் அஞ்சோம்;

எங்கும் அஞ்சோம் எதற்கும் அஞ்சோம்;
வான முண்டு, மாரி யுண்டு;
ஞாயிறும் காற்றும் நல்ல நீரும்

தீயும் மண்ணும் திங்களும் மீன்களும்
உடலும் அறிவும் உயிரும் உளவே;
தின்னப் பொருளும் சேர்ந்திடப் பெண்டும்,
கேட்கப் பாட்டும், காணநல் லுலகும்,
களிதுரை செய்யக் கணபதி பெயரும்
என்றுமிங் குளவாம்; சலித்திடாய்;ஏழை
நெஞ்சே! வாழி! நேர்மையுடன் வாழி!
வஞ்சகக் கவலைக் கிடங்கொடேல் மன்னோ!
தஞ்ச முண்டு கொன்னேன்
செஞ்சுடர்த் தேவன் சேவடி நமக்கே.

❖❖❖❖

# இராமாயணம் – கேள்வி பதில்கள்

1. அயோத்தி நாட்டின் அரசர் யார்?
   பதில் : தசரதர்.
2. தசரதரின் குலகுரு பெயர் என்ன?
   பதில் : வசிஷ்டர்.
3. தசரதருக்கு என்ன குறை?
   பதில் : குழந்தை இல்லை.
4. பிள்ளையில்லாக் குறை தீர, தசரதரை என்ன செய்யச் சொன்னார் வசிஷ்டர்?
   பதில் : யாகம்.
5. தசரதர் பிள்ளைப் பேற்றுக்காக என்ன யாகம் செய்தார்?
   பதில் : புத்திர காமேஷ்டி யாகம்.
6. அகலிகையின் கணவர் யார்?
   பதில் : கௌதமர்.
7. கௌதமரின் மகன் பெயர் என்ன?
   பதில் : சதானந்தர்.
8. அகலிகை மகன் சதானந்தர் எந்த தேசத்தில் இருந்தார்?
   பதில் : மிதிலா தேசத்தில்
9. மிதிலா தேசத்தின் அரசர் யார்?
   பதில் : ஜனகர்.
10. ஜனகர் பூமியை உழும்போது என்னகிடைத்தது?
    பதில் : ஒரு பெண் குழந்தை கிடைத்தது.
11. ஜனகரின் மகள் பெயர் என்ன?
    பதில் : சீதை.
12. ஜனகரின் மற்றொரு மகள் யார்?
    பதில் : ஊர்மிளை.
13. ஜனகரின் சகோதரர் யார்?
    பதில் : குசத்வஜர்.
14. ஜனகரின் சகோதரருக்கு எத்தனை குழந்தைகள்?
    பதில் : இரண்டு.

15. ஜனகர் சகோதரரின் குழந்தைகள் பெயர்கள் என்ன?
பதில் : மாண்டவி; ச்ருத கீர்த்தி.

16. லக்ஷ்மணன் யாரை மணந்தான்?
பதில் : ஊர்மிளையை.

17. மாண்டவியின் கணவன் பெயர் என்ன?
பதில் : பரதன்.

18. சத்ருக்னனின் மனைவி யார்?
பதில் : ச்ருத கீர்த்தி.

19. பரதனின் தாய் மாமன் யார்?
பதில் : யுதாஜித்.

20. யுதாஜித் (தாய்மாமன்) பரத-சத்ருக்னர்களை எப்போது கூட்டிப் போனார்?
பதில் : சீதா கல்யாணம் முடிந்தவுடன்.

21. யுதாஜித், பரத-சத்ருக்னர்களை எங்குகூட்டிப் போனார்?
பதில் : கேகய தேசத்திற்கு.

22. ஸ்ரீராமர் வருகிறார் என்றதும், தேவேந்திரன் அழைத்தும் சொர்க்கம் செல்ல மறுத்த முனிவர்யார்?
பதில் : சர பங்கர்.

23. நீர் கொண்டு வரப்போன லக்ஷ்மணனால் கொல்லப்பட்ட அரக்கி யார்?
பதில் : அயோமுகி.

24. கர-தூஷண வதத்திற்குப்பின்,அதைப்பற்றி ராவணனிடம் ஓடிப்போய் சொன்னவன் யார்?
பதில் : அகம்பனன்.

25. தசரதற்குச் செய்யமுடியாத ஈமக்கடன்களை ஸ்ரீராமர் யாருக்குச்செய்தார்?
பதில் : ஜடாயுவிற்கு.

26. கைகேயி தசரதரிடம் எத்தனை வரங்கள் கேட்டாள்?
பதில் : இரண்டு.

27. கைகேயிக்கு இருவரங்கள் எப்போது கொடுக்கப்பட்டன?
பதில் : சம்பராசுர யுத்தத்தின் போது

28. அந்தப்போரில் கைகேயி என்ன செய்தாள்?
பதில் : தசரதரின் தேரை ஓட்டினாள்.

29. கைகேயிக்கு எதற்காக வரங்கள் தரப்பட்டன?
பதில் : தசரதரின் உயிரைக் காத்ததற்காக.

30. தசரதரின் மந்திரிகளில் முக்கியமானவர் யார்?
பதில் : சுமந்திரர்.

31. ஸ்ரீராம-லக்ஷ்மணர் சீதையைத்தேடி வரும் போது, சுக்ரீவனை எங்கு சந்தித்தார்கள்?
பதில் : ருஷ்யமூக மலையில்.

32. சுக்ரீவன் ஏன் ருஷ்ய மூகமலையில் இருந்தான்?
பதில் : வாலியிடம் பயந்து.

33. வாலியிடம் சுக்ரீவனுக்கு பயம் ஏன்?
பதில் : வாலி சுக்ரீவனைக் கொல்ல முயன்றதால்.

34. வாலி ஏன் அவ்வாறு செய்யவேண்டும்?
பதில் : சுக்ரீவன்,தன் அரசைவிரும்புகிறான் எனத் தவறாக எண்ணியதால்.

35. ருஷ்யமூக மலைக்குவந்து, வாலிகொல்ல மாட் டானா?
பதில் : மாட்டான்.

36. வாலி ருஷ்ய மூகமலைக்கு வரமாட்டான்;ஏன்?
பதில் : மதங்க முனிவரின் சாபம்.

37. மதங்க முனிவர் என்ன சாபம் கொடுத்தார்?
பதில் : தன்ஆசிரம எல்லைக்குள்வந்தால் வாலி இறந்து போய் விடுவான்-என்று.

38. மதங்க முனிவர் வாலிக்கு என்ன சாபமளித்தார்?
பதில் : துந்துபி எனும் அரக்கனைக் கொன்று, மதங்க முனிவரின் ஆசிரமத்தில் வீசியதால்.

39. ஸ்ரீராமரும் சுக்ரீவனும் பேசிக் கொண்டிருந்த போது,இடது கண் துடித்தது. எத்தனை பேருக்கு?
பதில் : மூவருக்கு.

40. ஸ்ரீராமரும் சுக்ரீவனும் நட்பு பூண்டபோது, யார்- யாருக்கு இடது கண் துடித்தது?
பதில் : சீதை, வாலி, ராவணன்

41. இடதுகண் துடித்தால் யாருக்கு நல்லது; யாருக்கு கெட்டது?
பதில் : பெண்களுக்கு இடதுகண் துடித்தால் நல்லது;
ஆண்களுக்கு இடதுகண் துடித்தால் கெட்டது.

42. சுக்ரீவன் ஸ்ரீராமரிடம் எதைக்காட்டினான்?
பதில் : சிறு துணிமூட்டையில்இருந்தநகைகளை.

43. சுக்ரீவன் ஸ்ரீராமரிடம் காட்டிய நகைகள் யாருடையவை?
பதில் : சீதையினுடையவை.

44. சீதையின் நகைகள் சுக்ரீவனிடம் எப்படிக் கிடைத்தன?
பதில் : ராவணன் சீதையைக் கவர்ந்து, விமானத்தில்
போகும்போது,சீதை கீழே போட்டவை

45. சீதையின்நகைகளைக்கண்ட லக்ஷ்மணன்என்ன சொன்னான்?
பதில் : நூபுரங்களைக் கண்டதும்," அவை சீதையினு டையவை"
என்றான்.

46. சீதையின் நூபுரங்களை லக்ஷ்மணன்எப்படித் தெரிந்து
கொண்டான்?
பதில் : தினந்தோறும் சீதையை நமஸ்கரித்ததால் கண்ட
அடையாளம்.

47. சீதையைத் தேடிப்பே பானவர்களுக்கு எவ்வளவு, காலக்கெடு
கொடுக்கப்பட்டது?
பதில் : ஒரு மாத காலம்.

48. ஹனுமார் முதலானோர் சீதையைத் தேடி, எந்தத் திசைக்கு
அனுப்பப்பட்டனர்?
பதில் : தென்திசைக்கு

49. சீதையைத் தேடிப்போனவர்களுக்குக் கொடுக்கப்பட்ட காலக்கெடு
எவ்வளவு?
பதில் : இரண்டு மாதங்கள்.

50. ஹனுமான் முதலானவர்கள் சீதையைத்தேடி எந்தத் திசையில்
சென்றார்கள்?
பதில் : தென்திசையில்.

51. எந்த மலை மீது ஏறி ஆஞ்சநேயர் கடலைத்தாண்டத் தாண்டத்
தொடங்கினார்.
பதில் : மஹேந்திர மலைமீது.

52. மாருதி கடலைத்தாண்டும்போது,எத்தனை தடை கள் தோன்றின?
பதில் : மூன்று.

53. மாருதி கடலைத் தாண்டும் போது, முதலில் தோன்றிய தடை எது?
பதில் : மைநாக மலை.

54. மைநாக மலை ஆஞ்சநேயரிடம் என்ன சொன்னது?
பதில் : சற்றுதங்கி ஓய்வெடுத்துப் போகச் சொன்னது

55. ஆஞ்சநேயர் கடலைத்தாண்டும்போது இரண்டாவதாக வந்த தடை எது?
பதில் : சுரசை எனும் நாகதேவதை.

56. சுரசை எனும் நாகதேவதை மாருதியிடம் என்ன சொன்னது?
பதில் : தன் வாய்வழியே புகுந்துபோகச்சொன்னது

57. கடல்தாண்டும் போது, ஆஞ்சநேயருக்கு வந்த மூன்றாவது தடை என்ன?
பதில் : ஸிம்ஹிகை அல்லது அங்காரதாரை.

58. ஆஞ்ச நேயரைத் தடுத்த 'ஸிம்'ஹிகை' எது?
பதில் : அது ஒரு விசித்திரமான உருவம்.

59. ஸிம்ஹிகையின் சக்தி என்ன?
பதில் : நிழலைப்பிடித்து உண்ணும்.

60. ஆஞ்சநேயர் கடலைத் தாண்டும் போது தேவர்கள் என்ன செய்தார்கள்?
பதில் : தேவர்கள் மலர்மாரி பொழிந்தார்கள்.

61. மாருதி கடலைத் தாண்டும்போது, தேவர்கள் தூவியபூக்கள் பூமியில் விழுந்தனவா?
பதில் : அம்மலர்கள் பூமியில் விழவில்லை

62. தேவர்கள் மாருதிமீது தூவிய பூக்கள் பூமியில் விழுந்தால் என்னவாகும்?
பதில் : பூமியில் விழுந்தால் வாசம் அறிந்து ராவணன், உடனே ஆஞ்சநேயரைப் பிடித்து விடுவான்.

63. ஆஞ்சநேயர் லங்கையில், யாரைப்பார்த்ததும் சீதை எனத்தவறாக நினைத்தார்?
பதில் : மண்டோதரியைப் பார்த்ததும்.

64. சீதையை ராவணன்எங்கு வைத்திருந்தான்?
பதில் : அசோக வனத்தில்.

65. சீதையை ராவணன் எந்தமரத்தடியில் வைத்து இருந்தான்?
பதில் : சிம்சுபா மரத்து அடியில்.

66. சிம்சுபா வ்ருக்ஷத்தில் என்ன விசேஷம்?
பதில் : அதன் இலைகளும் பட்டைகளும் வானரத் தின் மேல் தோலைப்போல இருக்கும்.

67. வால்மீகி சிம்சுபா வ்ருக்ஷத்தைச் சொல்லக்காரணம் என்ன?
பதில் : ஆஞ்சநேயர் வந்து அதில் மறைந்திருந்தால், வெளியே தெரியாது என்பதற்காக.

68. சிம்சுபா வ்ருக்ஷத்தின் இலை-பட்டைமுதலியவை, வானரத்தின் மேல் தோலைப் போலிருக்கும்; இத்தகவலைச் சொன்னவர் யார்?
பதில் : காஞ்சீ ஸ்ரீ மஹாபெரியவா

69. அசோக வனத்தை அழித்தஆஞ்சநேயரை யார் பிடித்தார்?
பதில் : இந்திரஜித்.

70. அசோகவனத்தை அழித்த ஆஞ்சநேயரை இந்திர ஜித் எப்படிப் பிடித்தான்?
பதில் : பிரம்மாஸ்திரத்தால்.

71. ராஜசபையில் புத்திமதி சொன்ன ஹனுமாரைக் கொல்ல ராவணன் தீர்மானித்த போது, அவனைத் தடுத்தது யார்?
பதில் : விபீஷணன்.

72. இலங்கையில் இருந்து திரும்பிய ஆஞ்சநேயர், ஸ்ரீராமரிடம் முதலில் சொன்னது என்ன?
பதில் : கண்டேன் சீதையை.

73. கடற்கரையில் இருந்த ஸ்ரீராமரைத் தேடிவந்தது யார்?
பதில் : விபீஷணன்.

74. விபீஷணன் ஸ்ரீராமரைத் தேடி ஏன் வந்தான்?
பதில் : ராவணன் கொல்வதாகச் சொன்னதால்.

75. ராவணன் ஏன் இவனைக் கொல்லவேண்டும்?
பதில் : சீதையை விடு என்று இவன் சொன்னதால்.

76. விபீஷணன் ஸ்ரீராமரைத் தேடிவந்தபோது, அவனுடன் எத்தனை பேர் வந்தார்கள்?
பதில் : நான்கு பேர்கள்.

77. விபீஷணன் ஸ்ரீராமரைத் தேடி வந்த போது,அவனுடன் வந்த நால்வர் பெயர்கள் என்ன?
பதில் : அநலன்,சரபன்,சம்பாதி,பிகஸன்.

78. ஸ்ரீராமர் கடற்கரையில் எத்தனை நாட்கள இருந்தார்?
பதில் : மூன்று இரவுகள்.

79. கடற்கரையில் மூன்று நாட்கள் இருந்த ஸ்ரீராமர் என்ன செய்தார்?
பதில் : வருணன்மீது கோபம்கொண்டு அம்பு தொடு த்தார்.

80. ஸ்ரீராமர் வருணனை எண்ணி அம்பு தொடுத்த போது என்ன நடந்தது?
பதில் : பயந்தோடி வந்தான்.

81. ஸ்ரீராமரிடம் வருணன் என்ன சொன்னான்?
பதில் : த்ரும குல்யம் என்னுமிடத்தில்உள்ளதீயவர் கள் மீது,அம்பை ஏவச்சொன்னான்.

82. ஸ்ரீராமரும் மற்றவர்களும் எவ்வாறு கடலைத் தாண்டினார்கள்?
பதில் : அணைகட்டி, இலங்கைக் கரையை அடைந்தார்கள்.

83. அணைகட்ட எத்தனை நாட்களாயின?
பதில் : ஐந்து நாட்களாயின.

84. அணைகட்டும் போது, முதல்நாள் எவ்வளவு தூரம் அணைகட்டினார்கள்?
பதில் : பதினான்கு யோஜனை தூரம்.

85. அணைகட்டும் போது, 2-ம் நாள் எவ்வளவு தூரம் அணைகட்டினார்கள்?
பதில் : 20-யோஜனை தூரம்.

86. அணைகட்டும் போது, 3-ம் நாள் எவ்வளவு தூரம் அணை கட்டினார்கள்?
பதில் : 21-யோஜனை தூரம்.

87. அணைகட்டும்போது, 4-ம் நாள் எவ்வளவு தூரம் அணை கட்டினார்கள்?
பதில் : 22-யோஜனை தூரம்.

88. அணைகட்டும் போது, 5-ம் நாள் எவ்வளவு தூரம் அணை கட்டினார்கள்?
பதில் : 23-யோஜனை தூரம்.

89. ஒரு யோஜனை என்பது, இக்காலக்கணக்குப்படி எவ்வளவு தூரம்?
பதில் : 8-மைல் அல்லது 12.கி.மீ.

90. ராவணனுக்கு புத்திமதி சொன்னதுயார்?
பதில் : உறவுக்காரர்கள் பலரும்.

91. ராவணனுக்குப் புத்திமதி சொன்ன உறவினரின் பெயர்கள் என்ன?
பதில் : தாத்தா மால்யவான்; மனைவி மண்டோதரி; தம்பிகள்-கும்பகர்ணன், விபீஷணன்; மகன்-இந்திர ஜித்.

92. ராவணன் சொல்லைக் கேட்டு, மாயமானாக வந்த அரக்கன் யார்?
பதில் : மாரீசன்.

93. ராவணன் சீதையைக் கவர்ந்து போகும்போது, தடுத் துப் போரிட்டு, உயிர் துறந்த உத்தமப் பறவை எது?
பதில் : ஜடாயு.

94. மதங்க முனிவரின் ஆசிரமத்தில் இருந்தபடியே ராம-லக்ஷ்மணர்களை உபசரித்து, பழங்கள் அளித்தவர் யார்?
பதில் : சபரி.

95. சீதையைத் தேடிப்போன ஆஞ்சநேயரிடம் ஸ்ரீராமர், அடையாளமாகத் தந்தது என்ன?
பதில் : மோதிரம்.

96. ஆஞ்சநேயரும் மற்ற வானர வீரர்களும் சந்தித்த, ஜடாயுவின் சகோதரன் யார்?
பதில் : சம்பாதி.

97. கடல்தாண்டி, இலங்கைக் கரையை அடைந்த ஆஞ்ச நேயரைத் தடுத்துத் தண்டனை பெற்ற பெண் யார்?
பதில் : இலங்கிணி எனும் லங்கா நகரக் காவல் தேவதை.

98. அசோக வனத்தில் தன்னை வந்து சந்தித்த ஆஞ்ச நேயரிடம் சீதாதேவி எதைத் தந்தாள்?
பதில் : சூடாமணி.

99. போர்க் களத்தில் தோற்றுப்போன ராவணனிடம், ஸ்ரீராமர் சொன்னது என்ன?
பதில் : இன்று போய் போருக்கு நாளைவா என்றார்.

100. போரின்போது,இந்திரஜித் நடத்திய யாகம் எது?
பதில் : நிகும்பலா யாகம்.

101. சீதையைமீட்டுத்திரும்பிய ஸ்ரீராமர்,முனிவர் ஒரு வரின் ஆசிரமத்தில் உணவுண்டார்.அந்தஆசிரமத் தில் இருந்தமுனிவர் யார்?
பதில் : பரத்வாஜர்.

102. ஸ்ரீராமர் அயோத்தி திரும்பும் முன்னால்,ஆஞ்சநே யர் வேகமாகவந்து,அயோத்தியில் ஒருவன் இறப்ப தைத்தடுத்தார். அவன் பெயர் என்ன?
பதில் : பரதன்.

103. ஸ்ரீராமரின் வனவாசம்,எத்தனை ஆண்டுகள்?
பதில் : 14 ஆண்டுகள்.

104. ஸ்ரீராம சகோதரர்களின் மனைவியர் பெயர்கள் என்ன?
பதில் : ஸ்ரீராமர்–சீதை; பரதன்–மாண்டவி; லக்ஷ்மண ன்–ஊர்மிளை; சத்ருக்னன்–ச்(சு)ருதகீர்த்தி.

105. ஸ்ரீசீதாராம பட்டாபிஷேகத்தின்போது,மணிமுடி சூட்டியவர் யார்?
பதில் : வசிஷ்டர்.

106. தமிழில் ராமாயணத்தை எழுதியபெரும்புலவர் யார்?
பதில் : கம்பர்.

107. சீதா கல்யாணத்தின் போது, ஸ்ரீராமர் வளைத்த வில்லின் பெயர் என்ன?
பதில் : சிவ தனுஸ்.(வில்)

108. சீதாகல்யாணம் முடிந்து ஸ்ரீராமர்வரும்போது, அவரைப்போட்டிக்கு அழைத்தவர் யார்?
பதில் : பரசுராமர்.

109. சீதாகல்யாணம்முடிந்து,ஸ்ரீராமரும்சீதையும் அயோத்தியில் எத்தனை வருஷகாலம் இருந்தா ர்கள்?
பதில் : 12 வருஷங்கள்.

110. ஸ்ரீராமர் காட்டிற்குப் போகக் காரணமாக இருந்தவள் யார்?
பதில் : மந்தரை எனும் கூனி.

111. ஸ்ரீராமருடன் வனவாசத்திற்காகக்கூடப் போனவர் கள் யார்?
பதில் : சீதையும் லக்ஷ்மணனும்.

112. அம்மூவரும் வனவாசத்திற்காகப் போனபோது, சந்தித்த படகோட்டியின் பெயர் என்ன?
பதில் : குகன்.

113. காட்டில் அவர்கள் தங்கிய முக்கியமான ஓர் இட த்தைக்கூறு!
பதில் : பஞ்சவடி.

114. ஸ்ரீராமர் முதலானமூவரும் பஞ்சவடியில் தங்கி இருந்தபோது,அவர்களைச்சந்தித்து தண்டனை பெற்றவள் யார்?
பதில் : சூர்ப்ப நகை.

115. சூர்ப்பநகையின் பேச்சைக்கேட்டு, ஸ்ரீராமருடன் போரிட்டு மடிந்தவர்கள் யார்?
பதில் : கரன்,திரிசிரன்,தூஷணன் எனும் மூவர்.

116. இதிஹாசங்கள் எத்தனை?
பதில் : மூன்று.

117. அவற்றின் பெயர்களைக்கூறு !
பதில் : ராமாயணம்; மஹாபாரதம்; சிவரகசியம்.

118. ராமாயணத்தை எழுதியவர் யார்?
பதில் : வால்மீகி முனிவர்.

119. ராமாயணத்தை முதன்முதலில் மக்கள் மத்தியில் பாடியது யார்?
பதில் : லவன்-குசன்.

120. ராமாயணத்தில் எத்தனை காண்டங்(பகுதி)கள் உள்ளன?
பதில் : ஆறு காண்டங்கள்.

121. ஸ்ரீராமரின் பெற்றோர் யார்?
பதில் : தசரதர்-கோசலை.

122. ஸ்ரீராமரின் அவதாரத் திருநாளைக் கூறு ?
பதில் : சித்திரை மாதம்;நவமி திதி; புனர்வஸு நக்ஷ த்திரம்.

123. ஸ்ரீராமரின் சகோதரர்கள் யார்?
பதில் : பரதன்,லக்ஷ்மணன்,சத்ருக்னன்.

124. ஸ்ரீராமரை வளர்த்தது யார்?
பதில் : கைகேயி.

125. லக்ஷ்மணன்-சத்ருக்னன்ஆகியோரின் தாய் யார்?
பதில் : சுமித்திரை.

126. கைகேயியின் மகன் பெயர் என்ன?
பதில் : பரதன்.

127. விஸ்வாமித்திரர் ஸ்ரீராம-லக்ஷ்மணர்களை எதற்காகக் கூட்டிக் கொண்டு போனார்?
பதில் : யாகத்தைக் காப்பதற்காக.

128. கௌசல்யா ஸுப்ரஜா ராமா-என்று பாடியவர் யார்?
பதில் : விஸ்வாமித்திரர்.

129. ஸ்ரீராமர் முதன்முதலில் கொன்ற அரக்கி யார்?
பதில் : தாடகை

130. விஸ்வாமித்திரரின் யாகத்திற்கு இடையூறு செய்தவர்கள் யார்?
பதில் : சுபாகு; மாரீசன்.

131. கல்லாய் இருந்த ஒருவள் ஸ்ரீராமர் அருளால், பெண்ணாக மாறினாள்.அவள் யார்?
பதில் : அகலிகை.

132. சீதா கல்யாணத்தின்போது ஸ்ரீராமர் வளைத்த வில்லின் பெயர் என்ன?
பதில் : சிவ தனுசு.

133. திருமணம் முடிந்து வரும்போது ஸ்ரீராமருடன் வாதம் செய்தவர் யார்?
பதில் : பரசுராமர்.

134. திருமணத்திற்குப் பிறகு ஸ்ரீராமர், அயோத்தியில் எத்தனை ஆண்டுகள் இருந்தார்?
பதில் : 12 ஆண்டுகள்.

135. ஸ்ரீராம பட்டாபிஷேகத்திற்கு இடையூறு செய்த கூனியின் பெயர் என்ன?
பதில் : மந்தரை.

136. கைகேயி எத்தனை ஆண்டுகள் ஸ்ரீராமரைக் காட் டிற்குப் போகச் சொன்னாள்?
பதில் : 14 ஆண்டுகள்.

137. ஸ்ரீராமருடன் காட்டிற்குச் சென்றவர்கள் யார்?
பதில் : சீதை;லக்ஷ்மணன்.

138. ஸ்ரீராமர் வனவாசத்திற்காகப் போனபோது, பரதனும் சத்ருக்னனும் எங்கு இருந்தார்கள்?
பதில் : கேகய நாட்டில்.

139. ஸ்ரீராமரைத் தேடிவந்த படகோட்டி யார்?
பதில் : குகன்.

140. அரசைமறுத்தபரதன்,ஸ்ரீராமரைத்தேடிப்போய், எதைப்பெற்று வந்தான்?
பதில் : பாதுகைகளை.

141. பாதுகைகளை எங்குவைத்து வழிபட்டான்?
பதில் : நந்தி கிராமத்தில்.

142. வனவாசத்தின் போது ஸ்ரீராமர் முதலானோர் தங்கிய,முக்கியமான ஓர் இடம் எது?
பதில் : பஞ்சவடி.

143. பஞ்சவடியில் வந்து லக்ஷ்மணனால்,மூக்கு அறு பட்ட அரக்கி யார்?
பதில் : சூர்ப்பனகை.

144. அவள் ராவணனுக்கு என்ன உறவு?
பதில் : தங்கை.

145. சூர்ப்பனகையின் பேச்சைக்கேட்டு ஸ்ரீராமருடன் போரிட்டு மடிந்தோர் யார்?
பதில் : கரன், திரிசிரன், தூஷணன்.

146. மானாக வந்த அரக்கன் பெயர் என்ன?
பதில் : மாரீசன்.

147. சீதையைக் கவர்வதற்காக ராவணன் எந்த வேஷத்தில் வந்தான்?
பதில் : துறவி வேஷத்தில்.

148. ராவணன் சீதையைக் கவர்ந்து போன போது,போரிட்டு உயிர் துறந்த பறவையின் பெயர் என்ன?
பதில் : ஜடாயு.

149. ஸ்ரீராமருக்குப் பழம்தந்து உபசரித்த முதியவள் யார்?
பதில் : சபரி.

150. ஸ்ரீராமர், சொல்லின் செல்வன் – என யாரைஅழை த்தார்?
பதில் : ஆஞ்சநேயரை.

151. வாலியால் கொல்லப்பட்ட இரு அரக்கர்கள் யார்?
பதில் : மாயாவி;துந்துபி.

152. வாலியின் மைந்தன் யார்?
பதில் : அங்கதன்.

153. அங்கதனின் தாயார் பெயர் என்ன?
பதில் : தாரை.

154. சீதையைத் தேடிப்போன ஆஞ்சநேயரிடம்ஸ்ரீராமர் என்ன கொடுத்து அனுப்பினார்?
பதில் : மோதிரம்.

155. ஆஞ்சநேயர் கடலைத்தாண்டி லங்கைக் கரையை அடைந்தபோது, அவரைத்தடுத்து தண்டனை பெற்ற வள் யார்?
பதில் : லங்காநகரக் காவல்தேவதை-லங்கிணி.

156. சீதை ஆஞ்சநேயரிடம் என்ன கொடுத்தாள்?
பதில் : சூடாமணி.

157. ஆஞ்சநேயரைக்கட்டிக் கொண்டுபோய் ராவண னிடம் நிறுத்தியவன் யார்?
பதில் : ராவணன் மகன் இந்திரஜித்.

158. போரில் வெற்றிபெற இந்திரஜித், என்ன யாகம் செய்தான்?
பதில் : நிகும்பலா தேவி யாகம்.

159. ராவணன் கூடப்பிறந்தவர்கள் யார்?
பதில் : கும்பகர்ணன்,விபீஷணன்,சூர்ப்பனகை.

160. போருக்கு முன் ராவணனிடம்தூதுபோனதுயார்?
பதில் : அங்கதன்.

161. சீதையை மீட்டுவந்த ராமர் எந்தமுனிவரின் ஆசி ரமத்தில் விருந்து உண்டார்?
பதில் : பரத்வாஜ முனிவரின் ஆசிரமத்தில்.

162. தீக்குதிக்கப் போன பரதனைத் தடுத்தது யார்?
பதில் : ஆஞ்சநேயர்.

163. ஸ்ரீராமரின் சகோதரர் மனைவியர் பெயர்கள் என்ன?
பதில் : பரதன்-மாண்டவி; லக்ஷ்மணன்-ஊர்மிளை; சத்ருக்னன்-ச்ருதகீர்த்தி.

164. ஸ்ரீராமருக்கு மணிமகுடம் சூட்டியது யார்?
பதில் : வசிஷ்டர்.

165. ராமாயணத்தைத் தமிழில் எழுதியவர் யார்?
பதில் : கம்பர்.

## மகாபாரதம் – கேள்வி பதில்கள்

1. மஹறா பாரதம் யாரால் உருவாக்கப்பட்டது?
பதில் : வியாசரால்.
2. வியாசர் சொல்லச்சொல்ல,எழுதியவர் யார்?
பதில் : விநாயகர்.
3. மஹறா பாரதத்தில் எத்தனை பர்வங்கள் உள்ளன?
பதில் : 18.
4. மஹறாபாரதத்தில் எத்தனை ஸ்லோகங்கள் உள்ளன?
பதில் : ஒரு லக்ஷம் ஸ்லொகங்கள்
5. பாரதத்திற்கும் ராமாயணத்திற்கும் வேறுபாடு என்ன?
பதில் : பாரதம் – மண்ணாசை; ராமாயணம் – பெண்ணாசை.
6. பாரதம் எந்த அரசர்களின் வரலாறு?
பதில் : சந்திர குல அரசர்களின்கதை.
7. ராமாயணம் எந்த அரசர்களின் வரலாறு?
பதில் : சூரிய குல அரசர்களின் வரலாறு.
8. பீஷ்மரின் தந்தை யார்?
பதில் : சந்தனு.
9. சந்தனுவின் மனைவி பெயர் என்ன?
பதில் : கங்காதேவி.
10. பீஷ்மர் என்றால் என்ன பொருள்?
பதில் : பயங்கரமானவிரதத்தைஉடையவர்.
11. முற்பிறவியில் பீஷ்மர் யாராகஇருந்தார்?
பதில் : அஷ்டவசுக்களில் ஒருவராக.
12. முற்பிறவியில் பீஷ்மரின் பெயர்என்ன?
பதில் : பிரபாசன்.
13. பாண்டவர்களின் தந்தை யார்?
பதில் : பாண்டு.
14. பாண்டுவிற்கு எத்தனை மனைவியர்?
பதில் : இருவர்.
15. பாண்டு மன்னரின் மனைவியர் பெயர் என்ன?
பதில் : குந்தி, மாத்ரி.

16. குந்தியின் பிள்ளைகள் யார்?னு
பதில் : தர்மர், பீமன், அர்ஜுனன்.

17. மாத்ரியின் பிள்ளைகள் யார்?
பதில் : நகுலன், சகாதேவன்.

18. கௌரவர்களின் பெற்றோர் யார்?
பதில் : திருதராஷ்டிரன்-காந்தாரி.

19. காந்தாரியின் விசேஷம் என்ன?
பதில் : இரு கண்களையும் துணியால் மூடிக்கொண்டவள்.

20. காந்தாரி ஏன் கண்களைத்துணியால் மூடிக்கொண்டாள்?
பதில் : கணவருக்குப் பார்வைஇல்லை என்பதால்

21. காந்தாரி எவ்வாறு இருக்க விரும்பினாள்?
பதில் : கணவரைப்போலவே தானும் பார்வை இல்லாமல் இருக்க

22. காந்தாரிக்கு எத்தனை பிள்ளைகள்?
பதில் : 100.

23. காந்தாரிக்கு எத்தனை பெண் குழந்தைகள்?
பதில் : 1

24. காந்தாரியின் மகள் பெயர் என்ன?
பதில் : துச்சலை.

25. துச்சலையின் கணவன் யார்?
பதில் : ஜயத்ரதன்.

26. தர்ம தேவதையின் அம்சம் யார்?
பதில் : விதுரர்,தர்மர்.

27. பீமன் யாருடைய அம்சம்?
பதில் : வாயு பகவான்.

28. அர்ஜுனன் யாருடைய அம்சம்?
பதில் : இந்திரனின் அம்சம்.

29. நகுல-சகாதேவர்கள்.....
பதில் : அச்வினி தேவர்கள் அம்சம்.

30. பாண்டவ,கௌரவர்களை வளர்த்தவர்யார்?
பதில் : பீஷ்மர்.

31. பாண்டவ,கௌரவர்களின் குரு யார்?
பதில் : துரோணாசாரியார்.

32. துரோணரின் பிள்ளைபெயர் என்ன?
பதில் : அசுவத்தாமா.

33. சகுனி துரியோதனனுக்குஎன்னஉறவு?
பதில் : தாய் மாமன்.

34. பாண்டவர்களை அழிக்க துரியோதனன் என்ன செய்தான்?
பதில் : அரக்கு மாளிகையில் வைத்து எரிக்கப் பார்த்தான்.

35. பாண்டவர் அரக்கு மாளிகையிலிருந்து எவ்வாறு தப்பினார்கள்?
பதில் : விதுரரின் உதவியால்

36. அரக்கு மாளிகையிலிருந்து தப்பிப்போகும்போது பீமன் யாரைக் கொன்றான்?
பதில் : இடும்பன் என்ற அசுரனை

37. இடும்பனின் தங்கை யார்?
பதில் : இடும்பி-பீமனின் மனைவி.

38. அரக்கு மாளிகையிலிருந்து தப்பிய பாண்டவர் எப்படி இருந்தார்கள்?
பதில் : அந்தண வேடத்தில்.

39. பீமனால் கொல்லப்பட்ட மற்றோர் அரக்கன்யார்?
பதில் : பகாசுரன்.

40. பாஞ்சால மன்னர் யார்?
பதில் : துருபதன்.பாண்டவர்களின் மாமனார்.

41. துருபதனின் மகள் பெயர் என்ன?
பதில் : பாஞ்சாலி-திரௌபதி.

42. பாஞ்சாலியின் சகோதரன் யார்?
பதில் : திருஷ்டத்யும்னன்.

43. திருஷ்டத்யும்னனும் திரௌபதியும் தோன்றியது எப்படி?
பதில் : யாக அக்கினியில் இருந்து.

44. திரௌபதியின் திருமணத்தில் நிபந்தனை என்ன?
பதில் : மச்சயந்திரத்தை அடிக்கவேண்டும்.

45. திரௌபதிக்கான போட்டியில் வெற்றி பெற்றவர் யார்?
பதில் : அர்ஜுனன்.

46. பாஞ்சாலி மணத்திற்குப் பின் நடந்தது என்ன?
பதில் : பாண்டவர் அஸ்தினாபுரம் திரும்பினர்.

47. பாண்டவரை அழைத்து வந்தது யார்?
பதில் : விதுரர்.

48. பாஞ்சாலி மணத்திற்குப்பின் பாண்டவரை எங்கு அனுப்பினார்கள்?
பதில் : இந்திரப்பிரஸ்தத்திற்கு.

49. இந்திரப்பிரஸ்தத்தில் பாண்டவர்க்கு உதவியவர் யார்?
பதில் : கண்ணன்.

50. காண்டவ வனம் யாருக்காக எரிக்கப்பட்டது?
பதில் : அக்கினி பகவானுக்காக.

51. காண்டவ வனத்தை எரித்தவர்கள் யார்?
பதில் : அர்ஜுனன்-கண்ணன்.

52. காண்டவ வனம் எரியும்போது, தப்பிப் பிழைத்தவன் ஒருவனைச் சொல்க.!
பதில் : மயன்.

53. நாரதர், தர்மரை என்ன யாகம் செய்யச் சொன்னார்?
பதில் : ராஜசூய யாகம்.

54. ராஜசூய யாகம் யாருக்காக நடத்தப்பட்டது?
பதில் : தர்மரை சக்கரவர்த்தியாக்குவது.

55. ராஜசூய யாகத்திற்காகப்பீமன் யாரைக்கொன்றான்?
பதில் : ஜராசந்தனை.

56. ராஜசூய யாகத்தில் முதல்மரியாதை யாருக்கு?
பதில் : கண்ணனுக்கு.

57. கண்ணனுக்குத் தந்த முதல் மரியாதையை எதிர்த்தவன் யார்?
பதில் : சிசுபாலன்.

58. சிசுபாலனைக் கண்ணன் ஏன் கொன்றார்?
பதில் : பாண்டவர்களைக் கொல்வேன் என்றதால்.

59. ராஜசூய யாகத்தைக்கண்ட துரியோதனன் நிலை என்ன?
பதில் : பொறாமையில் தத்தளித்தான்.

60. பாண்டவர் செல்வத்தைப்பார்த்துதுரியோதனன் பொறாமை பட்டதன் விளைவு என்ன?
பதில் : அவமானப்படுத்தப்பட்டான்.

61. ராஜசூய யாகத்தில் அவமானப்பட்ட துரியோதனன் என்ன செய்தான்?
பதில் : பழிவாங்கத்துடித்தான்.

62. துரியோதனனுக்கு உதவியவர் யார்? பதில் : சகுனி.

63. சகுனியும் துரியோதனனும் என்ன செய்தார்கள்?
பதில் : சூதாட்டம் நடத்த நினைத்தார்கள்.

64. சூதாட்டம் நடந்ததா?
பதில் : நடந்தது.

65. சூதாட்டத்தில் வெற்றி பெற்றது யார்?
பதில் : சகுனி.

66. சூதாட்டத்தால் விளைந்த விபரீதம் என்ன?
பதில் : பாண்டவர் அடிமையானார்கள்.

67. திரௌபதியின் நிலை என்ன?
பதில் : மானபங்கப் படுத்தப்பட்டாள்.

68. திரௌபதி யாரால் மானபங்கப் படுத்தப்பட்டாள்?
பதில் : துச்சாதனனால்.

69. துச்சாதனன் திரௌபதியைத் துகில்உரிந்த போது காத்தது யார்?
பதில் : கண்ணன்.

70. சூதாட்டத்திற்குப் பின் பாண்டவர் என்ன செய்தார்கள்?
பதில் : 12வருடவனவாசம்;1வருடஅக்ஞாதவாசம்.

71. அக்ஞாதவாசம் என்றால் என்ன?
பதில் : மறைந்திருந்து வாழ்வது.

72. மறைந்துவாழும் காலத்தில் பாண்டவர் கண்டு பிடிக்கப்பட்டால் என்னவாகும்?
பதில் : மறுபடியும் வனவாசம் தான்.

73. வனவாசத்தின்போது முதலில்நடந்தது என்ன?
பதில் : அக்ஷய பாத்திரம் கிடைத்தது.

74. தர்மருக்கு அக்ஷயபாத்திரம் தந்தது யார்?
பதில் : சூரிய பகவான்.

75. அக்ஷயபாத்திரத்தின் விசேஷம் என்ன?
பதில் : அளவில்லாமல் உணவு தரும்.

76. அக்ஷய பாத்திரத்தின் மற்றொரு விசேஷம் என்ன?
பதில் : திரௌபதிஉண்டபின் உணவு தராது.

77. வனவாசத் துவக்கத்தின் போது வியாஸர் வந்து என்ன சொன்னார்?
பதில் : அர்ஜுனனைத்தவம் செய்யப்போகச் சொன்னார்.

78. அர்ஜுனன் பெற்ற மந்திரோபதேசம் என்ன?
பதில் : பிரதி ஸ்ம்ருதி.

79. அர்ஜுனன் எதற்காகத்தவம் செய்தான்?
பதில் : பாசுபதாஸ்திரம் பெற.

80. அர்ஜுனன் யாரிடமிருந்து பாசுபதாஸ்திரம் பெற்றான்?
பதில் : சிவபெருமானிடம் இருந்து.

81. அதன்பின் அர்ஜுனனெங்கு போனான்?
பதில் : இந்திரலொகம்.

82. அர்ஜுனனுக்கு இந்திரலோகத்தில் என்ன கிடைத்தது?
பதில் : சாபம்.

83. அர்ஜுனன் இந்திரலோகத்தில் யாரிடமிருந்து சாபம் பெற்றான்?
பதில் : ஊர்வசியிடம் இருந்து.

84. அர்ஜுனனுக்கு ஊர்வசி என்னசாபம் தந்தாள்?
பதில் : அர்ஜுனன் திருநங்கையாகப் போக வேண்டும் என்று.

85. ஊர்வசிதந்த சாபத்தை இந்திரன் எப்படி மாற்றினான்?
பதில் : சாபத்தை ஒருவருட காலமென்று.

86. வனத்தில் பீமனிடம் திரௌபதி என்னகேட்டாள்?
பதில் : சௌகந்திக மலர்.

87. சௌகந்திக மலர் பறிக்கப்போன பீமன் யாரைச் சந்தித்தான்?
பதில் : ஆஞ்சநேயரை.

88. பாண்டவர் வனத்திலிருந்த போது, துரியோதனன் என்ன நினைத்தான்?
பதில் : பாண்டவரை மேலும் வருத்தப்பட வைக்க.

89. வனத்திலிருந்த பாண்டவரை வருத்தப்படுத்த துரியோதனன் என்ன செய்தான்?
பதில் : படைகளுடன்காட்டிற்குப்போனான்.

90. காட்டில் துரியோதனன் என்ன செய்தான்?
பதில் : பாண்டவர்எதிரில்கும்மாளம்போட்டான்.

91. பாண்டவரைத் துயரத்திலாழ்த்த நினைத்த துரியோதனன் என்னவானான்?
பதில் : கந்தர்வனால் கௌரவர் சிறைப்பட்டனர்.

92. காட்டில் கௌரவரைச் சிறைப்படுத்திய கந்தர் வன் பெயர் என்ன?
பதில் : சித்திரசேனன்.

93. கந்தர்வன் துரியோதனனைச் சிறைப்படுத்தியது கண்டு,தர்மர் என்ன சொன்னார்?
பதில் : நமக்குள் பகைவந்தால், கௌரவர் 100பேர் - நாம் 5 பேர். வெளியார் பகை என்றால், நாம்105பேர்.

94. கந்தர்வனிடமிருந்து காக்கச் சொல்லி துரியோதனன் கூவினானே,அது பலித்ததா?
பதில் : கௌரவர் மீட்கப்பட்டனர்.

95. கந்தர்வனிடமிருந்து கௌரவரைக் காத்தது யார்?
பதில் : அர்ஜுனனும் பீமனும்.

96. கந்தர்வனால் அவமானப்படுத்தப்பட்ட பிறகாவது துரியோதனன் திருந்தினானா?
பதில் : இல்லை.

97. காட்டிலிருந்த பாண்டவர்க்குத் துரியோதனன் என்ன கேடு நினைத்தான்?
பதில் : பாண்டவரை அழிக்க நினைத்தான்.

98. துரியோதனன் பாண்டவர்களிடம் உண்பதற்காக யாரை அனுப்பினான்?
பதில் : துர்வாசரை.

99. பாண்டவரிடம் உணவு கேட்டுப் போன துர்வாசர், அவர்களுக்குச்சாபம் கொடுத்தாரா?
பதில் : இல்லை

100. துர்வாசரால் ஆபத்து வராதபடி பாண்டவரைக் காத்தது யார்?
பதில் : கண்ணன்காப்பாற்றி விட்டார்.

101. பாண்டவருக்கு அடுத்தஆபத்து யாரால்வந்தது?
பதில் : ஜயத்ரதனால்.

102. பாண்டவர் வனத்திலிருந்தபோது, ஜயத்ரதன் என்ன செய்தான்?
பதில் : திரௌபதியைக் கவர்ந்தான்.

103. ஜயத்ரதன் கவர்ந்துபோன திரௌபதியை மீட்டது யார்?
பதில் : அர்ஜுனனும் பீமனும்.

104. பாண்டவரால் அவமதிக்கப்பட்ட ஜயத்ரதன் என்ன செய்தான்?
பதில் : தவம் செய்தான்.

105. ஜயத்ரதன் யாரை நோக்கித்தவம் செய்தான்?
பதில் : சிவபெருமானை.

106. ஜயத்ரதன் சிவபெருமானிடம் என்ன வரம் பெற்றான்?
பதில் : அர்ஜுனனைத் தவிர மற்ற நால்வரை ஒரு நாள் தடுக்க.

107. ஜயத்ரதன் சிவபெருமானிடம் பெற்ற வரத்தை எப்போது உபயோகப்படுத்தினான்?
பதில் : அபிமன்யு வதத்தின்போது.

108. வனவாச முடிவில் பாண்டவர்க்கு வந்த ஆபத்து என்ன?
பதில் : குளத்து நீரைக் குடிக்கப் போன, பாண்டவரில் நால்வர் இறந்தனர்.

109. வனவாசத்தின் போது, குளத்து நீரைக் குடித்த பாண்டவர் நால்வரைக் கொன்றது யார்?
பதில் : யக்ஷன் ஒருவன்.

110. பாண்டவரை யக்ஷன் ஏன் கொன்றான்?
பதில் : யக்ஷன் கேள்விக்கு, பதில் சொல்லாததால்.

111. யக்ஷனால் கொல்லப்பட்ட தன் சகோதரர்களை, தர்மர் எவ்வாறு மீட்டார்?
பதில் : யக்ஷன் கேள்விக்கு பதில்சொல்லி.

112. யக்ஷன் தர்மருக்கு என்ன வரம் தந்தான்?
பதில் : ஒருவனை உயிருடன் தருவதாக.

113. யக்ஷனிடம் தர்மர் யாரை உயிருடன் கேட்டார்?
பதில் : நகுலனை.

114. யக்ஷனிடம் தர்மர், நகுலனை உயிருடன் கேட்டது ஏன்?
பதில் : மற்றொரு தாயான மாத்ரிக்கும் மகன் வேண்டுமென.

115. தர்மருக்கு யக்ஷன் என்ன வரம் தந்தான்?
பதில் : நால்வரையும் உயிருடன் எழுப்பினான்.
*(வன பர்வம் நிறைவு; விராட பர்வம் துவக்கம்)*

116. பாண்டவர் அக்ஞாத வாசத்தில் எங்கிருந்தனர்?
பதில் : விராட நகரில்.

117. அக்ஞாதவாச காலத்தில்பாண்டவர் எப்படி இருந்தனர்?
பதில் : மாறு வேஷத்தில்.

118. அக்ஞாதவாச காலத்தில் தர்மர் என்ன வேஷத்திலிருந்தார்?
பதில் : அந்தண வடிவில்.

119. விராட நாட்டில் தர்மர் என்னபெயரில்இருந்தார்?
பதில் : கங்க பட்டர்.

120. விராடநாட்டில் பீமன்என்ன வேஷத்தில் இருந்தான்?
பதில் : சமையல்கார வேஷத்தில்.

121. விராடநாட்டிலிருந்தபோது பீமன்பெயர் என்ன?
பதில் : பலாயனன்.

122 விராடநாட்டில் அர்ஜுனன் எப்படி இருந்தான்?
பதில் : திருநங்கையாக,பிருகன்னளை என்ற பெயரில்.

123 விராடநாட்டில் நகுலனின் வேஷமும் பெயரும் என்ன?
பதில் : குதிரைபாதுகாப்பு;தாமக்கிரந்தி பெயரில்.

124 விராடநாட்டில் சகாதேவனின் வேஷமும் பெயரும் என்ன?
பதில் : மாடுபராமரிப்பு; தந்திரிபாலன் பெயரில்.

125 விராடநாட்டில் திரௌபதி என்ன வேஷத்தில் இருந்தாள்?
பதில் : பணிப்பெண் வேஷத்தில்.

126 விராடநாட்டில் திரௌபதி என்ன பெயரில் இருந்தாள்?
பதில் : சைரந்தரி.

127 விராடநாட்டில் திரௌபதிக்கு இடையூறு விளைவித்தவன் யார்?
பதில் : கீசகன்

128. கீசகன் யாருக்கு என்ன உறவு?
பதில் : அரசி சுதக்ஷிணைக்கு சகோதரன்

129. கீசகனைக் கொன்றவன் யார்?
பதில் : பீமன்.

130. கீசகன் இறந்ததை அறிந்த, துரியோதனன் என்ன செய்தான்?
பதில் : பசுமாடுகளைக் கவரத் தீர்மானித்தான்.

131. துரியோதனன் யார் மூலமாக, விராட மன்னனின் பசுக்களைக் கவர நினைத்தான்?
பதில் : சுசர்மா மூலமாக.

132. சுசர்மா என்பவன் யார்?
பதில் : திரிகர்த்த தேசாதிபதி.

133. சுசர்மா விராடநாட்டில் பசுக்களைக்கவரும் போது,அவற்றை யார் காத்தார்கள்?
பதில் : பாண்டவர்கள்.

134. விராட நாட்டில், துரியோதனன் பாண்டவரிடம் தோற்றபின் என்ன செய்தான்?
பதில் : பாண்டவரைமறுபடி வனத்திற்குப்போகச் சொன்னான்.

135. துரியோதனன் பாண்டவரை மறுபடியும், ஏன் வனவாசம் போகச் சொன்னான்?
பதில் : குறித்த காலத்திற்கு முன் பார்த்து விட்டானாம்

136. மறுபடியும் வனவாசம் போகப் பாண்டவர் ஒப்புக்கொண்டார்களா?
பதில் : இல்லை.

137. பாண்டவர் மறுபடியும் வனவாசம் போக,பீஷ்மர் ஒப்புக் கொண்டாரா?
பதில் : இல்லை.

138. அக்ஞாதவாச முடிவில், விராடநாட்டில் என்ன நடந்தது?
பதில் : அபிமன்யு-உத்தரை திருமணம் நடந்தது.

139. அபிமன்யு யார்?
பதில் : அர்ஜுனனுக்கும் சுபத்திரைக்கும் மகன்.

140. அபிமன்யுவின் மனைவி உத்தரை யார்?
பதில் : விராட மன்னன் மகள்.

141. அபிமன்யு திருமணத்திற்குப் பின் என்ன நடந்தது?
பதில் : தூது அனுப்பத் தீர்மானித்தார்கள்.
*(விராடபர்வம் நிறைவு ; உத்யோக பர்வம் துவக்கம்)*

142. பாண்டவர் தங்கள்சார்பாக யாரைத்தூது அனுப்பத் தீர்மானித்தார்கள்?
பதில் : கண்ணனை.

143. துரியோதனனிடம் போய்க் கண்ணனை என்ன கேட்கச் சொன்னார் தர்மர்?
பதில் : தங்கள் நாட்டைக் கேட்கச் சொன்னார்.

144. துரியோதனன் நாடு தராவிட்டால் வேறு என்ன கேட்கச் சொன்னார் தர்மர்?
பதில் : ஐந்து ஊராவது கேட்கச் சொன்னார்.

145. தூதுபோன கண்ணன் எங்கு தங்கினார்?
பதில் : விதுரரின் வீட்டில்.

146. துரியோதனன் பாண்டவருடன் சமாதானத்திற்கு ஒப்புக் கொண்டானா?
பதில் : மறுத்தான்.

147. தூதுபோன கண்ணனைத் துரியோதனன்ள ன்ன செய்தான்?
பதில் : கண்ணனையே கட்டிப்போட முயன்றான்.

148. துரியோதனன் தன்னைக் கட்டிப்போட முயன்ற போது கண்ணன் என்ன செய்தார்?
பதில் : விஸ்வரூபம் எடுத்துக்காட்டினார்.

149. தூதுபோன கண்ணன் விஸ்வரூபம் காட்டிய போது என்ன நடந்தது?
பதில் : திருதராஷ்டிரனுக்குப் பார்வை தெரிந்தது.

150. பார்வை தெரிந்த திருதராஷ்டிரன் கண்ணனிடம் என்ன கேட்டார்?
பதில் : பார்வை வேண்டாம் என்றார்.

151. கண்ணனிடம், மறுபடியும் பார்வையற்ற தன்மையையே திருதராஷ்டிரன் கேட்டார். ஏன்?
பதில் : கண்ணனைத் தரிசித்த கண்ணால், மற்ற எதையும் பார்க்க விரும்பவில்லை.

152. தூதுவந்த கண்ணனின் விஸ்வரூபத்தைக் கண்ட பிறகாவது, துரியோதனன் திருந்தினானா?
பதில் : இல்லை.

153. தூதுவந்த கண்ணனிடம் துரியோதனன் என்ன முடிவு சொன்னான்?
பதில் : போர் தான் முடிவு என்றான்.

154. தூதுபோன கண்ணன் வேறு யாரைச் சந்தித்தார்?
பதில் : கர்ணனைச் சந்தித்தார்.

155. தூது போன கண்ணன் கர்ணனிடம் என்ன சொன்னார்?
பதில் : நீ குந்தியின் பிள்ளை என்றார்.

156. குந்தியின் பிள்ளை நீ என்ற கண்ணனிடம் கர்ணன் என்ன சொன்னான்?
பதில் : அதை யாரிடமும் சொல்ல வேண்டாம் என்றான்.

157. தான் குந்தியின் பிள்ளை என்பதை யாரிடமும் கூற வேண்டாம் எனக் கர்ணன் கேட்கக் காரணம் என்ன?
பதில் : தன்னை ஆதரிக்கும் துரியோதனனுக்காக.

158. கர்ணன் துரியோதனனுடன் இருக்கவே விரும்பினான். அதற்குக்காரணம் என்ன?
பதில் : செஞ்சோற்றுக்கடன் தீர்க்க.

159. அதன்பின் கண்ணன் யாரைச்சந்தித்தார்?
பதில் : குந்தியை.

160. தூதுபோன கண்ணன் குந்தியிடம் என்ன கூறினார்?
பதில் : கர்ணன் அவள்பிள்ளை என்றார்.

161. கர்ணனிடம் இருந்து குந்தியை என்ன பெறச் சொன்னார் கண்ணன்?
பதில் : இரு வரங்கள் பெறச்சொன்னார்.

162. கர்ணனிடம் குந்தி கேட்ட,ஒரு வரம் என்ன?
பதில் : நாகாஸ்திரத்தை இரண்டாவதுமுறை உபயோகிக்கக்கூடாது.

163. கர்ணனிடம் குந்தி கேட்ட இரண்டாவது வரம் என்ன?
பதில் : அர்ஜுனனைத் தவிர,மற்ற நால்வரையும் கொல்லக்கூடாது

164. குந்தி கேட்ட வரங்களைக் கர்ணன் கொடுத்தானா?
பதில் : கொடுத்தான்.

165. கண்ணன் தூதுக்குப்பிறகு துரியோதனன் செய்த தவறு என்ன?
பதில் : விதுரரை மிகவும் இழிவாகப் பேசினான்.

166. துரியோதனன் இழிவாகப் பேசியதைக் கேட்ட விதுரர் என்ன செய்தார்?
பதில் : தன்வில்லை முறித்தார்.

167. பாண்டவர்க்கும் கௌரவர்க்கும் போர் என முடிவான பின் என்ன நடந்தது?
பதில் : படைகளைத் திரட்டினார்கள்.

168. பாரத யுத்தம் தீர்மானம் ஆனபோது, கண்ணனைத் தேடி யார் போனார்கள்?
பதில் : அர்ஜுனன், துரியோதனன்.

169. தன்னைத் தேடிவந்த அர்ஜுனன்-துரியோதனன் இருவரில், யாருக்குக் கண்ணன் உதவினார்?
பதில் : இருவருக்கும்.

170. கண்ணன், அர்ஜுனனுக்காக என்ன செய்தார்?
பதில் : அர்ஜுனனுக்குத் தேரோட்டியாக இருந்தார்

171. போரில் உதவி வேண்டி வந்த துரியோதனனுக்கு கண்ணன் என்ன செய்தார்?
பதில் : படைகளைத் தந்தார்.

*(உத்யோக பர்வம் நிறைவு ; பீஷ்ம பர்வம் ஆரம்பம்)*

172. போர்த் தொடக்கத்தில் என்ன நடந்தது?
பதில் : அர்ஜுனன் கலக்கமடைந்தான்.

173. போரின் தொடக்கத்தில் அர்ஜுனன் ஏன் கலங்கினான்?
பதில் : உறவினர்களைக் கொல்லவேண்டுமா என.

174. அர்ஜுனனின் கலக்கத்தைக் கண்ணன் எவ்வாறு நீக்கினார்?
பதில் : கீதை உபதேசித்ததன் மூலம்.

175. கீதையில் எத்தனை ஸ்லோகங்(பாடல்)கள் உள்ளன?
பதில் : 745.

176. கீதையின் சுருக்கம் என்ன?
பதில் : கடமையைச் செய்! பலனை எதிர்பாராதே!

177. கடமையைச் செய்! பலனை எதிர்பாராதே! – என்கிறாரே கண்ணன் சம்பளம் இல்லாமல் வேலை செய்ய முடியுமா?
பதில் : பதவி உயர்வுக்காக வேலை செய்யாதே!

178. போரின்போது பாண்டவர் பக்கம் தலைமை வகித்தது யார்?
பதில் : திருஷ்டத்யும்னன்

179. போரின்போது கௌரவர் பக்கம் தலைமை வகித்தவர் யார்?
பதில் : பீஷ்மர்.

180. போர் துவங்குமுன் தர்மர் என்னசெய்தார்?
பதில் : பீஷ்மர், துரோணர் ஆகியோரை வணங்கினார்.

181. போரை, திருதராஷ்டிரனுக்குச் சொன்னவர் யார்?
பதில் : சஞ்சயன்.

182. திருதராஷ்டிரனுக்குப் போரை நேர்முக வர்ணனை செய்த சஞ்சயனுக்கு அந்த சக்தி எப்படிக் கிடைத்தது?
பதில் : வியாசர் அருளால்.

183. வியாஸர் சஞ்சயனுக்கு என்ன சக்தி கொடுத்தார்?
பதில் : ஞான திருஷ்டி.

184. பீஷ்மர் எத்தனை நாட்கள் தலைமை வகித்தார்?
பதில் : பத்து நாட்கள்.

185. பீஷ்மரை வெல்லக் காரணமாயிருந்தவன் யார்?
பதில் : சிகண்டி

186. பீஷ்மர் சிகண்டியுடன் போர் புரிய மறுத்தது ஏன்?
பதில் : பீஷ்மர் அவனுடன் போர் புரிய மாட்டார்.

187. பீஷ்மர் சிகண்டியுடன் போர் புரிய காரணம் என்ன?
பதில் : பெண்ணாயிருந்து ஆணாக மாறியவன்.

188. பீஷ்மரை வீழ்த்தியது யார்?
பதில் : அர்ஜுனன்

189. அர்ஜுனன் பீஷ்மரை எப்படி வென்றான்?
பதில் : சிகண்டியை முன்நிறுத்தி.
*(பீஷ்ம பர்வம் நிறைவு; துரோண பர்வம் துவக்கம்)*

190. துரோணர் தலைமையின் கீழ் கர்ணன் போர் புரிந்தானா?
பதில் : துரோணர்.

191. அப்போது கர்ணன் போர் புரிந்தானா?
பதில் : போர்புரிந்தான்.

192. முதல்பத்துநாட்கள்கர்ணன்ஏன்போரிடவில்லை?
பதில் : பீஷ்மருடனிருந்த மனத்தாங்கலால்.

193. போரின்போது துரோணரிடம் துரியோதனன் என்ன கேட்டான்?
பதில் : தர்மரைக்கட்டித்தன்னிடம்ஒப்படைக்கும்படி.

194 தர்மரைக்கட்டித் துரியோதனனிடம்,துரோணர் ஒப்படைத்தாரா?
பதில் : அவரால் முடியவில்லை.

195. தர்மரை நெருங்காதபடித் துரோணரைத் தடுத்தது யார்?
பதில் : அர்ஜுனன்தடுத்துவிட்டான்.

196. துரோணர் என்ன வியூகம் அமைத்தார்?
பதில் : துரோணர் பத்ம வியூகம் அமைத்தார்.

197. பத்ம வியூகம் என்றால் என்ன?
பதில் : தாமரை போல வீரர்களை நிறுத்துவது.

198. பத்ம வியூகத்தில்சிக்கிக் கொல்லப்பட்டவன் யார்?
பதில் : அபிமன்யு கொல்லப்பட்டான்.

199. அபிமன்யு கொல்லப்பட்டபோது அர்ஜுனன் அங்கு இல்லையா?
பதில் : அர்ஜுனன் அங்கு இல்லை.

200. அபிமன்யு கொல்லப்பட்டபோது அர்ஜுனன் எங்கு போயிருந்தான்?
பதில் : சம்சப்தகர்களுடன் போரிடப் போய் விட்டான்

201. சம்சப்தகர்கள் என்றால் யார்?
பதில் : எதிரியைக் கொல்வது அல்லது தாம் இறப்பது என்றிருப்பவர்.

202. அபிமன்யு எப்படி இறந்தான்?
பதில் : பத்ம வியூகத்தில் அகப்பட்டு.

203. பத்ம வியூகத்தில் அகப்பட்டு அபிமன்யு இறந்தது ஏன்?
பதில் : அதிலிருந்து வெளிவரத் தெரியாது அவனுக்கு.

204. பத்ம வியூகத்தைப்பற்றி அபிமன்யுவிற்கு என்ன தெரியும்?
பதில் : வியூகத்திற்குள் போகமட்டுமே தெரியும்.

205. அபிமன்யு வியூகத்தில் அகப்பட்டபோது, தர்மர் முதலானோர் அவனுக்கு ஏன் உதவ முடியவில்லை.?
பதில் : ஜயத்ரதன் அவர்களைத் தடுத்து விட்டான்.

206. ஜயத்ரதன் பாண்டவர்களை எப்படித் தடுத்தான்?
பதில் : சிவன் தந்த வரத்தால்.

207. அபிமன்யுவின் முடிவைப் பற்றி அறிந்த அர்ஜுனன் என்ன செய்தான்?
பதில் : சபதம் செய்தான்.

208. ஜயத்ரதன்தான் அபிமன்யுவின் முடிவிற்குக் காரணம் என்றதும், அர்ஜுனன் என்ன சபதம் செய்தான்?
பதில் : நாளை மாலைக்குள் ஜயத்ரதனைக் கொல்வேன் என்று.

209. ஜயத்ரதனைக் கொல்ல முடியாவிட்டால், அர்ஜுனன் என்ன செய்வதாகச் சொன்னான்?
பதில் : தீயில்விழுந்து இறப்பேன் என்றான்.

210. அர்ஜுனனிடமிருந்து ஜயத்ரதனைக் காப்பாற்ற கௌரவர் என்ன செய்தார்கள்?
பதில் : ஜயத்ரதனை மறைத்து வைத்து விட்டார்கள்.

211. ஜயத்ரதனைக் கொல்ல, அர்ஜுனனுக்குக் கண்ணன் எவ்வாறு உதவினார்?
பதில் : சக்ராயுதத்தால் சூரியனை மறைத்து விட்டார்.

212. ஜயத்ரதனைக் கொல்ல அர்ஜுனன் முயலும் போது, சூரியன் மறைந்தது கண்டு அர்ஜுனன் என்ன செய்தான்?
பதில் : மாலையானதென்று தீப்புகப் போனான்.

213. ஜயத்ரதனைக் கொல்லமுடியாமல், அர்ஜுனன் தீக்குளிக்க முயலும் போது,வேடிக்கை பார்க்க வந்தது யார்?
பதில் : ஜயத்ரதன்.

214. அர்ஜுனன் தீக்குளிப்பதை,வேடிக்கை பார்க்க வந்த ஜயத்ரதனைப் பார்த்ததும் கண்ணன் என்ன செய்தார்?
பதில் : சக்ரத்தை நீக்கினார்.

215. சக்ராயுதத்தால் சூரியனை மறைத்திருந்த கண்ணன், சக்ராயுதத்தை நீக்கியதும் என்ன நடந்தது?
பதில் : சூரியன் வெளிப்பட்டான்.

216. மறைந்திருந்த சூரியன் வெளிப்பட்டதைக் கண்டதும் அர்ஜுனன் என்ன செய்தான்?
பதில் : அம்பை ஏவி ஜயத்ரதன் தலையை எடுத்தான்.

217. அர்ஜுனனால் கொல்லப்பட்ட ஜயத்ரதன் தலையைக் கண்ணன் என்ன செய்யச் சொன்னார்?
பதில் : விருத்தக்ஷத்ரன் மடியில் தள்ளச் சொன்னார்.

218. விருத்தக்ஷத்ரன் யார்?
பதில் : ஜயத்ரதனின் தந்தை.

219. ஜயத்ரதன் தலை, அவன் தந்தை மடியில் விழுந்ததும் என்ன நடந்தது?
பதில் : தலை வெடித்து அவர் இறந்து போனார்.

220. ஜயத்ரதன் தந்தை, தலைவெடித்து இறக்கக் காரணம் என்ன?
பதில் : அவர் பெற்ற வரம்.

221. ஜயத்ரதனின் தந்தை பெற்ற வரம் என்ன?
பதில் : மகன் தலையைக் கீழே தள்பவன் மரணம் அடையவேண்டும்.

222. அப்படியென்றால்....?
பதில் : அவர் பெற்ற வரம் அவரையே கொன்றது.

223. ஜயத்ரதனின் தந்தை பெற்ற வரத்தால் என்ன விளைந்தது?
பதில் : கடுமையாகப்போரிட்டான்.

224. ஜயத்ரதன் இறந்தபின் கர்ணனை எதிர்த்து வந்தவன் யார்?
பதில் : கடோத்கஜன்.

225. கடோத்கஜன் யார்?
பதில் : பீமனுக்கும் இடும்பிக்கும் பிறந்த பிள்ளை.

226 கடோத்கஜனைக் கர்ணன் எவ்வாறு கொன்றான்?
பதில் : சக்தி ஆயுதத்தைப்போட்டு.

227. சக்தி ஆயுதத்தை யாருக்காகக் கர்ணன் வைத்திருந்தான்?
பதில் : அர்ஜுனனுக்காக.

228. கடோத்கஜன் இறந்ததைக்கண்ட பாண்டவர் நிலை என்ன?
பதில் : துரோணரைக்கொல்ல நினைத்தார்கள்.

229. துரோணரைக் கொல்வதற்கான வழியைச் சொன்னவர் யார்?
பதில் : கண்ணன்.

230. துரோணரைக் கொல்வதற்கான வழியைச் சொன்ன கண்ணன் என்ன செய்யச் சொன்னார்?
பதில் : தர்மரை ஒருபொய் சொல்லச்சொன்னார்.

231. கண்ணன் தர்மரை என்ன பொய் சொல்லச் சொன்னார்?
பதில் : அச்வத்தாமா இறந்து விட்டதாக.

232. துரோணரைக் கொல்லும் முயற்சியில் தர்மர் பொய் சொன்னாரா?
பதில் : மறுத்து விட்டார்.

233. அச்வத்தாமா இறந்து விட்டதாகப் பொய் சொல்லத் தர்மர் மறுத்ததும், கண்ணன் என்ன செய்தார்?
பதில் : மாளவ மன்னனின் யானையைக் கொல்லச் சொன்னார்.

234. மாளவ மன்னனின் யானையைக் கொல்லும் படியாகக் கண்ணன் யாரிடம் கூறினார்?
பதில் : பீமனிடம்.

235. மாளவ மன்னனின் யானையைக் கொல்லும்படியாகக் கண்ணன் கூறியது ஏன்?
பதில் : அந்த யானையின் பெயர் அச்வத்தாமா.

236. மாளவமன்னனின் யானையைப் பீமன் கொன்றானா?
பதில் : கொன்றான்.

237. அச்வத்தாமா என்ற பெயருள்ள யானை கொல்லப்பட்டதும், தர்மர் என்ன சொன்னார்?
பதில் : அச்வத்தாமா ஹதகுஞ்சர

228. அச்வத்தாமா ஹதகுஞ்சர என்றதைக் கேட்டதும் துரோணர் என்ன செய்தார்?
பதில் : அச்வத்தாமா இறந்ததாக எண்ணினார்.

239. அச்வத்தாமா இறந்ததாக எண்ணிய நிலையில் துரோணரின் செயல்பாடு என்ன?
பதில் : ஆயுதங்களை நீக்கி உட்கார்ந்து விட்டார்.

240. ஆயுதம் இல்லாத நிலையில், துரோணரைக் கொன்றது யார்?
பதில் : திருஷ்டத்யும்னன்.

241. துரோணர் இறக்கும்வரை, எத்தனை நாட்கள் போர் நடந்தது?
பதில் : 15 நாட்கள்.

242. அதில் பீஷ்மர் எத்தனை நாட்கள் போரிட்டார்?
பதில் : 10 நாட்கள்.

243. துரோணர் எத்தனை நாட்கள் போரிட்டார்?
பதில் : 5 நாட்கள்.

244. கர்ணன் எத்தனை நாட்கள் தலைமை தாங்கினான்?
பதில் : 2 நாட்கள்.

245. கர்ணனுக்குத் தேரோட்டியவர் யார்?
பதில் : சல்லியன்.

246. சல்லியன் யார்?
பதில் : மாத்ரியின் சகோதரர்.

247. நகுல-சகாதேவர்களுக்கு,சல்லியன் என்ன உறவு?
பதில் : தாய் மாமன்.

248. துச்சாதனனைக் கொன்றது யார்?
பதில் : பீமன்.

249. துச்சாதனன் இறந்ததைக் கண்ட கர்ணன் என்ன செய்தான்?
பதில் : நாகாஸ்திரத்தை எய்தான்.

250. கர்ணன் நாகாஸ்திரத்தை எய்ததும்,கண்ணன் என்ன செய்தார்?
பதில் : தேரை அழுத்தினார்.

251. கர்ணனின் நாகாஸ்திரம் வரும் போது, கண்ணன் செயலால், அர்ஜுனன் தேர் என்னவானது?
பதில் : பூமியில் பதிந்தது.

252. கர்ணன் எய்த நாகாஸ்திரம் என்ன செய்தது?
பதில் : அர்ஜுனனின் கிரீடத்தைத் தள்ளியது.

253. கர்ணன் மறுபடி, நாகாஸ்திரத்தை எய்தானா?
பதில் : இல்லை.

254. கர்ணன் இரண்டாவது முறை நாகாஸ்திரத்தைத் தொடுக்காதது ஏன்?
பதில் : குந்திக்கு வரம் தந்திருந்ததால்.

255. போர்க்களத்தில் கர்ணனுக்கு நேர்ந்த இடையூறு என்ன?
பதில் : கர்ணனின் தேர் சக்கரம் பூமியில் பதிந்தது.

256. கர்ணனின் தேர்ச்சக்கரம் பூமியில் பதிந்த போது, கர்ணன் அம்பு போடாதது ஏன்?
பதில் : இல்லை.

257. கர்ணனுக்குப் போர்க் களத்தில், அவன் கற்ற வித்தைகள் பலனளிக்க வில்லை ஏன்?
பதில் : அவன் கற்ற வித்தை பலனளிக்கவில்லை.

258. கர்ணனிடம் இருந்து அர்ஜுனனைக் காப்பாற்ற கண்ணனைத் தவிர, வேறு யார் உதவினார்கள்?
பதில் : தேவேந்திரன்.

259. தேவேந்திரன் அர்ஜுனனுக்கு எவ்வாறு உதவினான்?
பதில் : கர்ணனின் கவச, குண்டலங்களைத் தானமாகப் பெற்றதன் மூலம்.

260. கர்ணன் எப்படி இறந்தான்?
பதில் : அர்ஜுனனின்அஸ்திரங்களால்.
*(கர்ண பர்வம் நிறைவு; சல்லிய பர்வம் துவக்கம்)*

261. 18-வதுநாள் போருக்குத் தலைமை ஏற்றது யார்?
பதில் : சல்லியன்.

262. சல்லியனைக் கொன்றது யார்?
பதில் : தர்மர்.

263. சகுனி யாரால் கொல்லப்பட்டான்?
பதில் : சகாதேவனால்.

264. சகுனி இறந்தபின் துரியோதனன் நிலை என்ன?
பதில் : ஒரு குளத்தில் போய் ஒளிந்தான்.

265. போரின்போது துரியோதனன் குளத்தில் ஒளிந்ததை, தர்மர் எவ்வாறு அறிந்தார்?
பதில் : வேடர்கள் வந்து சொன்னார்கள்.

266. போரின்போது துரியோதனன் குளத்தில் இருந்ததை அறிந்த தர்மர் என்ன செய்தார்?
பதில் : அங்கு போய் துரியோதனனை அழைத்தார்.

267. துரியோதனனும் பீமனும் எப்படிப்பட்ட போரில் ஈடுபட்டார்கள்?
பதில் : துரியோதனனுக்கும் பீமனுக்கும் கதா யுத்தம் நடந்தது.

268. துரியோதனனுக்கும் பீமனுக்கும் நடந்த கதா யுத்தத்தில், வெற்றி பெற்றது யார்?
பதில் : பீமன்.

269. பீமன் துரியோதனனை எப்படி வென்றான்?
பதில் : துரியோதனன் தொடைகளில் அடித்து.

270. பீமன் துரியோதனனைத் தொடையில் அடிக்கக் காரணம் என்ன?
பதில் : அவ்வாறு செய்வதாக சபதம் செய்திருந் தான்.

271. பீமன் கதையால் அடிபட்ட துரியோதனன் நிலை என்ன?
பதில் : ரத்த வெள்ளத்தில் கிடந்தான்.

*(சல்லியபர்வம் நிறைவு)*

272. துரியோதனன் அடிபட்டுக் கீழே கிடந்ததைக் கண்ட அச்வத்தாமா என்ன செய்தான்?
பதில் : திருஷ்டத்யும்னனைக் கொன்றான்.

273. திருஷ்டத்யும்னனைக் கொன்றபின் அச்வத்தாமா என்ன செய்தான்?
பதில் : உப பஞ்ச பாண்டவர்களைக் கொன்றான்.

274. உப பஞ்ச பாண்டவர் இறந்ததை அறிந்ததும் அர்ஜுனன் யாரைக் கொல்ல முயன்றான்?
பதில் : அசுவத்தாமனைக் கொல்லமுயன்றான்.

275. அச்வத்தாமாவை அர்ஜுனன் கொன்றானா?
பதில் : இல்லை.

276. அச்வத்தாமாவை அர்ஜுனன் ஏன் கொல்ல வில்லை?
பதில் : திரௌபதி தடுத்தாள்.

277. அச்வத்தாமாவை அர்ஜுனன் கொல்லாதவாறு திரௌபதி என்ன சொல்லித் தடுத்தாள்?
பதில் : தாய்க்கு, அவன் ஒரே பிள்ளை என்று.

278. துரியோதனன் இறந்ததும் பாண்டவர்கள் என்ன செய்தார்கள்?
பதில் : அஸ்தினாபுர அரண்மனைக்குத் திரும்பினர்.

279. துரியோதனன் இறந்தபின் பாண்டவர் அஸ்தினாபுரம் திரும்பியதும் என்ன நடந்தது?
பதில் : காந்தாரியும் திருதராஷ்டிரனும் கோபப்பட்டார்கள்.

280. துரியோதனன் முதலானோர் கொல்லப்பட்டதற்காகப் பாண்டவர்களிடம் கோபப்பட்ட காந்தாரி க்கும் திருதராஷ்டிரனுக்கும் சமாதானம் சொன்னவர் யார்?
பதில் : வியாசர்.

281. தர்மருக்கு முடி சூட்டியது யார்?
பதில் : பகவானான ஸ்ரீ கிருஷ்ணர்.

# ஸ்ரீமத் பாகவதம் - கேள்வி பதில்கள்

1. ஸ்ரீ மத்பாகவதம் எதை ப்பற்றிக்கூறுகிறது?
பதில் : மஹா விஷ்ணுவைப்பற்றியும் அவரது அவதாரங்களைப்பற்றியும் கூறுகிறது.

2. பாகதத்தில் எத்தனை ஸ்கந்தங்கள் (பிரிவுகள்) உள்ளன?
பதில்:12.

3. பாகவதத்தில் உள்ள ஸ்லோகங்கள் எவ்வளவு?
பதில்:18.ஆயிரம்.

4. பாகவதத்தை எழுதியது யார்?
பதில்:வியாசாசாரியார்.

5. வியாசாசாரியாரை பாகவதம் எழுதும்படித்தூண்டியவர் யார்?
பதில்:நாரதர்.

6. நாரதர் முற்பிறவியில் யாராக இருந்தார்?
பதில்:வேலைக்காரியின் மகனாக.

7. பாகவதத்தைச்சொன்னவர் யார்?
பதில்:வியாசரின் மகனான சுகாசாரியார்.

8. சுகாசாரியார் யாருக்கு,பாகவதம் சொன்னார்?
பதில்:பரீக்ஷித்திற்கு.

9. பரீக்ஷித்து ஏன் பாகவதம் கேட்டார்?
பதில்:முனிகுமாரனான ச்ருங்கி என்பவரின்சாபத்தால்.

10. ச்ருங்கி பரீக்ஷித்திற்கு என்ன சாபம் கொடுத்தார்?
பதில்:7நாட்களில் பாம்பு கடித்து இறக்கவேண்டுமென்று.

11. ச்ருங்கியிடம் இருந்து சாபம்பெறும்படியாகப் பரீக்ஷித்து என்ன தவறு செய்தார்?
பதில்:ச்ருங்கியின் தந்தையான சமீகரின் கழுத்தில் ஒரு பாம்பைப்போட்டார்.

12. சமீகரின் கழுத்தில் பரீக்ஷித்து ஏன்பாம்பைப் போட்டார்?
பதில்:தன் தாகத்திற்குத் தண்ணீர் தரவில்லை;பதிலும் சொல்லவில்லை என்றதால்.

13. பரீக்ஷித்து சாபம் பெற்றது எப்போது?
பதில்:வேட்டையாடப்போனபோது.

14. பரீக்ஷித்து,ச்ருங்கியின் சாபம்பெற்றதும் என்ன செய்தார்?
பதில்:7நாட்கள் உண்ணாவிரதமிருந்து உயிர்துறக்க எண்ணினார்.அப்போதுதான் பாகவதம் கேட்டார்.

15. வராஹ அவதாரம் உருவாகக்காரணம் என்ன?
பதில்:ஹிரண்யாக்ஷன்என்பவனிடமிருந்து பூமியை மீட்க

16. ஹிரண்யாக்ஷன் யார்?
பதில்:அவன் ஓர் அசுரன்.

17. ஹிரண்யாக்ஷன்போனபிறவியில் யாராகஇருந்தான்?
பதில்:வைகுண்டத்தில் துவாரபாலகரில் ஒருவனாக.

18. அவன் ஏன் அசுரப்பிறவி எடுத்தான்?
பதில்:வைகுண்டத்தில் நுழையவிடாமல் சனகாதி முனி வர்களைத்தடுத்ததால்.

19. சனகாதியர் எத்தனை பேர்?
பதில்:நால்வர்.

20. அவர்கள் பெயர் என்ன?
பதில்:சனகர்,சனந்தனர்,சனாதனர்,சனத்குமாரர்.

21. அசுரனாகப்பிறந்த ஹிரண்யாக்ஷனைக்கொன்றது யார்?
பதில்:வராஹ அவதாரம் எடுத்த பெருமாள்.

22. ஹிரண்யாக்ஷனின் பெற்றோர் யார்?
பதில்:கச்யபர்–திதி.

23. துருவனின் பெற்றோர் யார்?
பதில்:உத்தானபாதன்–சுநீதி.

24. துருவனுக்கு என்னஇடையூறு நேர்ந்தது?
பதில்:தந்தையின் மடிமீது ஏறாதபடி மாற்றாந்தாய் அவ னைத்தடுத்தாள்.

25. துருவனின் மாற்றாந்தாய் பெயர் என்ன?
பதில்:சுருசி.

26. துருவனின் தாயார் என்ன சொன்னாள்?
பதில்: நாராயணரை நோக்கித்தவம்செய்யச்சொன்னாள்.

27. துருவனுக்கு உபதேசம் செய்தது யார்?
பதில்:நாரதர்.

28. துருவம் எத்தனைகாலம் தவம் செய்தான்?
பதில்:ஐந்து மாதங்கள்.

29. மஹாவிஷ்ணு துருவனுக்குஎவ்வாறு அருள்புரிந்தார்?
பதில்:துருவ நக்ஷத்திரமாக.

30. துருவனின் சகோதரன் பெயர் என்ன?
பதில்:உத்தமன்.

31. ஜடபரதர் முற்பிறவியில் யாராக இருந்தார்?
பதில்:ரிஷபதேவரின் மகன் பரதனாக.

32. ரிஷபதேவரின் மகன் பரதனின் மனைவி யார்?
பதில்:விஸ்வரூபனின் மகள் பஞ்சஜனி.

33. ரிஷபதேவரின்மகன் பரதன் ஏன்மானாகப்பிறந்தார்?
பதில்:தவத்தைவிட்டு,மானையேநினைத்து இறந்ததால்.

34. மானாக இருந்த பரதன், ஜடபரதனாகப்பிறந்தபோது, என்ன கோத்திரத்தில் பிறந்தார்?
பதில்:ஆங்கிரஸ கோத்திரத்தில்.

35. ஜடபரதரைக்காளிக்குப் பலிகொடுக்க நினைத்தது யார்?
பதில்:திருடர்களின்தலைவன்.

36. ஜடபரதரின் உயிரைக்காத்தது யார்?எப்படி?
பதில்:காளி.திருடர்தலைவனைக்கொன்று.

37. ஜடபரதரிடம் உபதேசம் பெற்றது யார்?
பதில்:ரஹூகணன் என்ற மன்னர்.

38. அஜாமிளன் என்பவன் கடைசி காலத்தில் என்ன சொல்லி அழைத்தான்?
பதில்:நாராயணா.

39. அஜாமிளன்கதையிலிருந்து அறிவது என்ன?
பதில்:தெய்வ நாமம் பாவங்களை நீக்கும்.

40. ப்ரஹ்லாதனின் பெற்றோர் யார்?
பதில்:ஹிரண்யகசிபு-கயாது.

41. ஹிரண்யகசிபு மஹாவிஷ்ணுவிடம்கோபம்கொள்ளக்காரணம் என்ன?
பதில்:அவன் சகோதரனான ஹிரண்யாக்ஷனை மஹா விஷ்ணு கொன்றதால்.

42. ஹிரண்யகசிபு முற்பிறவியில் யாராக இருந்தான்?
பதில்:வைகுண்டத்தில் துவாரபாலகரில் ஒருவனாக.

43. ஹிரண்யகசிபு யாரால் கொல்லப்பட்டான்?
பதில்:நரசிம்மஅவதாரம் எடுத்த மஹாவிஷ்ணுவால்.

44. கஜேந்திரன்என்ற யானை,முதலையிடம் அகப்பட்ட போது,அது என்னசொல்லி அழைத்தது?
பதில்:ஆதிமூலமே.

45. முதலையிடம்அகப்பட்டகஜேந்திரனைக்காத்தது யார்? பதில்:மஹாவிஷ்ணு.

46. கஜேந்திரனென்ற யானை முற்பிறவியில் யாராக இருந்தது?
பதில்:பாண்டியமன்னர்-இந்த்ரத்யும்னன்.

47. பாண்டியமன்னர் ஏன் யானையாகப் பிறந்தார்?
பதில்:அகஸ்திய முனிவரை அவமானப்படுத்தியதால்.

48. மஹாபலி யார்?
பதில்:ப்ரஹ்லாதனின் பேரன்;விரோசனனின் பிள்ளை.

49. வாமனரின் பெற்றோர் யார்?
பதில்:கச்யபர்-அதிதி.

50. அதிதி என்ன விரதமிருந்து வாமனரைப்பெற்றாள்?
பதில்:பயோவிரதம்.

51. வாமனாவதாரம் நிகழ்ந்த நாளைக்கூறு!
பதில்:ஆவணி-வளர்பிறை-துவாதசி-திருவோணத்தன்று.

52. மஹாபலியிடம் வாமனர் என்னகேட்டார்?
பதில்:மூன்றடி மண்-தன் காலால் அளந்து.

53. மச்சாவதாரம் ஏற்படக்காரணமான மன்னர் யார்?
பதில்:பாண்டிய மன்னர் ஸத்யவ்ரதன்.

54. அம்பரீஷமன்னரைக்கொல்ல துர்வாசர் முயன்ற போது,காப்பாற்றியது யார்?எப்படி?
பதில்:மஹாவிஷ்ணு;சக்ராயுதத்தால்.

55. பரசுராமரின் பெற்றோர் யார்?
பதில்:ஜமதக்னி-ரேணுகாதேவி.

56. பரசுராமரின் தாயைக்கொன்றது யார்?
பதில்:பரசுராமர்.

57. பரசுராமர் ஏன் தாயைக்கொன்றார்?
பதில்:தந்தையின் கட்டளைப்படி.

58. ரேணுகாதேவியைக்கொல்லும்படி,ஜமதக்னி ஏன் உத்தரவிட்டார்?
பதில்:அவள் தவறு செய்ததால்.

59. பூர்ணாவதாரம் என்று கூறப்படுவது எது?
பதில்:கிருஷ்ணாவதாரம்.

60. கண்ணனின் பெற்றோர் யார்?
பதில்:வசுதேவர்-தேவகி.

61. கண்ணன் அவதரித்தது எங்கு?
பதில்:கம்சனின் சிறைச்சாலையில்.

62. வசுதேவர்,தேவகி ஆகியோரைக்கம்சன்ஏன் சிறையிட்டான்?
பதில்:தேவகியின் எட்டாவதுகர்ப்பம்,அவனைக் கொல் லும் என அசரீரி கூறியதால்.

63. சிறைச்சாலையில் அவதரித்த கண்ணன்,எங்கு யாரால் வளர்க்கப்பட்டார்?
பதில்:கோகுலத்தில்;நந்தகோபர்-யசோதையால்.

64. கண்ணனைமுதன்முதலில் கொல்லவந்தஅரக்கியார்?
பதில்:பூதனை.

65. கண்ணனின் மூத்தசகோதரர் யார்?
பதில்:பலராமன்.

66. கண்ணனை யசோதை எதில் கட்டினாள்?
பதில்:உரலில்.

67. உரலில்கட்டப்பட்டகண்ணன் என்ன செய்தார்?
பதில்:உரலோடு இருமரங்களுக்கு இடையில்சென்றார்.

68. கண்ணன் உரலோடு,மரங்களுக்குஇடையில் சென்ற போது என்ன நடந்தது?
பதில்:இருமரங்களும் விழுந்தன.

69. கண்ணன் உரலோடுபோனபோது,கீழேதள்ளப்பட்ட மரங்கள் முற்பிறவியில் யாராக இருந்தார்கள்?
பதில்:குபேரனின்பிள்ளைகளானநளகூபர-மணிக்கிரீவன்.

70. கண்ணன்ஏறிநின்று ஆடியபாம்பின்பெயர் என்ன?
பதில்:காளியன்/காளிங்கன்.

71. இந்திரன்மழைபொழிந்து,கோபாலர்களை அழிக்க நினைத்தபோது கண்ணன்எப்படிக்காப்பாற்றினார்?
பதில்:கோவர்தனமலையைக் குடையாகப்பிடித்து.

72. மலையைக்குடையாகப்பிடித்துக்காப்பாற்றிய கண்ண னுக்கு என்ன பெயர் உண்டானது?
பதில்:கோவர்தனகிரிதாரி.

73. கம்சன் நடத்திய யாகத்தின் பெயர்என்ன?
பதில்:தனுர்யாகம்.

74. கம்சன் யாகம் நடத்தக்காரணம் என்ன?
பதில்:கண்ணனைக்கொல்ல.

75. கம்சன் வைத்திருந்த யானையின்பெயர்என்ன?
பதில்:குவலயாபீடம்.

76. கம்சனைக்கொன்றபின் கண்ணன்என்னசெய்தார்?
பதில்:குருகுலவாசம் செய்தார்.

77. கண்ணன் குருகுலவாசம்செய்த குருவின்பெயர் என்ன?
பதில்:சாந்தீபனி.

78. குருகுலவாசத்தில் கண்ணனுடன்படித்தவர் யார்?
பதில்:சுதாமா/குசேலர்.

79. கண்ணன்17 முறை யாருடன் போரிட்டார்?
பதில்:ஜராசந்தனுடன்.

80. ருக்மிணியை யாருக்குத்திருமணம் செய்துகொடுக்க, அவளது சகோதரன் தீர்மானித்தான்?
பதில்:சிசுபாவனுக்கு.

81. ருக்மிணி யாரைத்திருமணம் செய்துகொள்ள நினைத்தாள்?
பதில்:கண்ணனை.

82. கண்ணன் ருக்மிணியைக்கவர்ந்துபோனபோது,தடுத்துப்போரிட்டது யார்?
பதில்:சிசுபாலன் முதலானோர்.

83. பலராமரின் மனைவி யார்?
பதில்:ரைவத மன்னன்மகள் ரேவதி.

84. ராமாயணத்தில் உள்ளஒருவரை,கண்ணன் சந்தித்தார்.அவர் யார்?
பதில்:ஜாம்பவான்.

85. ஜாம்பவானின் மகள் பெயர் என்ன?
பதில்:ஜாம்பவதி.

86. தேவலோகத்தில் இருந்து கண்ணன் யாருக்காகப் பாரிஜாத மரத்தைக்கொணர்ந்தார்?
பதில்:சத்யபாமாவுக்காக.

87. கண்ணன் தன் அரண்மனைதேடிவந்த சுதாமாவை/குசேலரை எவ்வாறு உபசரித்தார்?
பதில்:நெஞ்சோடு நெஞ்சாகக்கட்டித் தழுவி.

88. சுதாமாவை ஓர் ஆசனத்தில்உட்காரவைத்த கண்ணன்என்னசெய்தார்?
பதில்:சுதாமாவின் திருவடிகளைஅலம்பி,அந்நீரைத் தன் தலையில் தெளித்துக்கொண்டார்.

89. கண்ணனுக்காக சுதாமா என்ன கொண்டுவந்தார்?
பதில்:அவல்.

90. சுதாமா கொணர்ந்த அவலில், கண்ணன் எவ்வளவு உண்டார்?
பதில்:ஒரு பிடி அவல்.

91. சுதாமாவுக்குக்கண்ணன் எவ்வாறுஅருள் புரிந்தார்?
பதில்:சகல செல்வங்களையும் அளித்து.

குறிப்புகள்

## IMCTF ORGANISING COMMITTEE

Convenor

**Smt. Sheela Rajendra,**
Deputy Dean, Director & Correspondent, PSBB Schools.,

Co-Convenors

**Sri. M.N.Venkatesan,**
Joint Secretary,
Vivekananda Educational Society

**Sri. R.J.Bhuvanesh,**
CEO, Kaligi Ranganathan
Group of Schools

**Sri. Rajendran,**
CEO, DAV School,
Adambakkam

Secretary

**Smt. Mohini Chordia**
AM Jain Group of Schools

Members

**Sri. Mukesh Mehta**
AB Parekh
Senior Secondary School

**Brother Vijayan,**
Amrita Vidyalayam

**Sri. Vikas Arya**
Vice President
Arya Samaj

**Sri. Sankar Ramakrishnan**
Sankara Group of Schools

**Sri. Atul Nangia**
Punjab Association Group of Schools

## IMCTF Co-ordinators

**Sri. Thyagaragan**
Member, Core Team
Mobile : 7299069730

**Sri. Swamy**
Member, Core Team
Mobile : 7299069731

**Sri. Venkat**
Member, Core Team
Mobile : 7299069732

## IMCTF Pledge

*I revere **"Trees"** as symbol of **Forests***

*I revere **"Snakes"** as symbol of **Wild Life***

*I revere **"Cows"** as symbol of all **Living Beings***

*I revere **"Ganga"** as symbol of **Nature***

*I revere **"Mother Earth"** as Symbol of **Environment***

*I revere my **"Parents"** as symbol of **Human Values***

*I revere my **"Teachers"** as symbol of **Learning***

*I revere **"Women"** as symbol of **Motherhood***

*I revere **"War Heroes"** as symbol of **Bharat***

# உறுதிமொழி

போற்றுதும் **மரங்களை** வனங்களின் வடிவமாம்

போற்றுதும் **அரவங்களை** வன உயிர்களின் வடிவமாம்

போற்றுதும் **ஆவினம்** அனைத்துயிர் வடிவமாம்

போற்றுதும் **கங்கையை** இயற்கையின் வடிவமாம்

போற்றுதும் **பூமித்தாயை** சுற்றுச்சூழலின் வடிவமாம்

போற்றுதும் என் **பெற்றோரை** மானுட மாண்பின் வடிவமாம்

போற்றுதும் என் **குருமாரை** கற்றலின் வடிவமாம்

போற்றுதும் **பெண்டிரைத்** தாய்மையின் வடிவமாம்

போற்றுதும் **போர் வீரரைப்** பாரத வடிவமாம்

**Initiative for Moral and Cultural Training Foundation [IMCTF]**
Head Office: 4th Floor, Ganesh Towers, 152, Luz Church Road,Mylapore, Chennai - 600 004.
Admin. Office : 2nd Floor, "Gargi", New No: 6 (Old 20), Balaiah Avenue, Luz, Mylapore, Chennai - 600 004.
E-Mail: imcthq@gmail.com Website : www.imct.org.in